இலங்கைப் பதிப்பு இதழ்-06

விலை: இலங்கை ரூபா 50.00

சர்வதேச புலனாய்வு வார இதழ்

15-10-2017

# பரபரப்பு

ஆசிரியர்: ரிஷி




## புலிகளின் தலைவரின் அனுமதியுடன் தளபதி சங்கரை ஏற்றிக்கொண்டு Gulf of Suez கடல் பகுதிக்கு ஏன் சென்றது புலிகளின் கப்பல்?

## பொட்டு அம்மானின் விமானம் Ratnagiri (RTC) விமான நிலையத்தில் தரையிறங்கியதா?

- இலங்கை மாணவர்கள் குறைந்த செலவில் ஐரோப்பாவில் படிக்க...
- ஒசாமா பின் லாடனை சி.ஐ.ஏ. நெருங்கிய கதை
- என்ன நடக்கிறது புதுக்குடியிருப்பில்?
- வாழ்க்கையில் வெற்றியாளராக BODY LANGUAGE தந்திரங்கள்!
- மோசாத் குறிவைத்த காலித் மார்ஷல்



பொட்டு அம்மானுக்காக வந்த AN-72 விமானத்தின் ஒரு ரகம்! (ரஷ்யத் தயாரிப்பு)



ஆசைக்கு அருகே நிற்கும்
போட்டு அம்மானின் சிரிப்புக்கு ஆயிரம் அர்த்தங்கள்!
உள்ளே படியுங்கள்... புரியும்!





ஜெனரல் காசிம் சொலைமானியின் மர்ம நகர்வுகள்!

## விவசாயிகளுக்கு என்ன செய்யப்போகிறது

# இலங்கை அரசு?

விவசாயம் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் முன்னுரிமை கொடுக்கப்படும் என ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது தேங்காய் மற்றும் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாகவே அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.



கெக்கிராவ விவசாய விழாவில் ஜனாதிபதி



ஒரு காலத்தில் விவசாயத்தில் தன்னிறைவு கொண்டிருந்த நாடாக இருந்த இலங்கையில் இப்போது, உணவுப் பொருட்களும் காய்கறிகளும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலை!

அதை விடுங்கள், நான்கு புறமும் கடலால் சூழப்பட்டுள்ள சிறிய தீவான இலங்கைக்கு, தகரங்களில் அடைக்கப்பட்ட மீன் (Canned fish) வருவது, தாய்லாந்து, மலேசியா, பிலிப்பீன்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து என்பது ஆச்சரியமான தரவு இல்லையா?

இலங்கையைச் சுற்றி அருமையான மீன்வளமுள்ள கடல் உள்ளது. யுத்தம் முடிவுக்கு வந்து 8 ஆண்டுகளான நிலையில், மீன்பிடிக்கு தடை விதிக்கப்பட்ட பெரும்பாலான இடங்களில் இப்போது தடை கிடையாது. 1980களிலேயே இலங்கையில் மீன்களைத் தகரங்களில் அடைக்கும் தொழிற்சாலை இருந்தது. சுமார் 30 ஆண்டுகளில் அந்தத் தொழில்நுட்பம் எந்தளவுக்கு வளர்ந்திருக்க வேண்டும்? ஆசியாவில் தகரங்களில் அடைக்கப்பட்ட மீன் ஏற்றுமதியில் முன்னணி நாடாக வந்திருக்க வேண்டுமே?

ஆனால், இன்று இலங்கையில் சந்தைப்படுத்தப்படும் தகரங்களில் அடைக்கப்பட்ட மீன்களில் பெரிய சதவீதம், வெளிநாட்டுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவையே!

இலங்கை அரசு, இலங்கையின் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான புதிய நடைமுறைகளை கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளது. தேங்காய்க்கு கட்டுப்பாட்டு விலை கொண்டுவரப்படுவது, சாமான்ய மக்கள் உச்ச விலை கொடுத்து தேங்காய் வாங்குவதில் இருந்து தடுக்கும். அதேபோல, ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அறிவித்துள்ள விவசாய உபகரண இறக்குமதிக்கு விதிக்கப்படும் சுங்க வரியை நீக்குவது என்பது, விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவைக் குறைக்கும்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கின் உற்பத்தி விலையைவிட, பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கின் விற்பனை விலை குறைவாக உள்ளது. இதனால், உள்நாட்டு உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். வெங்காய இறக்குமதியிலும் அதே நிலைமை காணப்படுகிறது. அப்படியான நிலையில், வெங்காய உற்பத்திய உள்நாட்டில் செய்ய யார் முன்வருவார்கள்?

இந்தக் குறைந்த விலை இறக்குமதிகளால், விவசாயிகள், விவசாயம் செய்வதை விட்டுவிட்டு வேறு தொழில்களைச் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

அந்த நிலை மாற வேண்டுமானால், இலங்கையில் விவசாய உற்பத்திச் செலவுகள் கணிசமாகக் குறைக்கப்பட வேண்டும். அதற்காக இலங்கை அரசு, சில புதிய திட்டங்களையும் நடைமுறைகளையும் செயற்படுத்தும் திட்டங்களை வைத்திருப்பதாகக் கூறுகிறது.

சமீபத்தில் கெக்கிராவ கிராமத்தில் நடந்த விவசாய விழாவில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, விவசாய நிலங்களில் வீடுகளை அமைப்பதற்கு அதிகாரிகள் அனுமதி கொடுப்பது பற்றிப் பேசியுள்ளார். இதுவும், உற்பத்தி வீழ்ச்சிக்கும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டுக்கும் மற்றொரு காரணம்.

அந்த விழாவில் பேசிய அவர் சுட்டிக்காட்டிய மற்றொரு விஷயம், மில்லியன் கணக்கான மெட்ரிக் தொன் நெல், காய்கறிகள், பழங்கள், மற்றும் இதர விளை பொருட்கள், குரங்குகள், யானைகள், மற்றும் காட்டுப் பன்றிகளால் அழிக்கப்படுகின்றன என்பது.

இதுவும் உற்பத்திச் செலவுகளை அதிகரிக்கிறது, உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. அதைத் தொடர்ந்து இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நடைமுறை ஒன்றைக் கொண்டுவருவதற்கு, அரசாங்கள் கொள்கை ரீதியான முடிவு ஒன்றை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அது நடைமுறைப் படுத்தப்படும்போதுதான், எந்தளவுக்கு வெற்றியைக் கொடுக்கும் என்று தெரியவரும்.

இலங்கையில் 1970களின் இறுதியில் (ஸ்ரீமாவோ பண்டாரநாயக பிரதமராக இருந்தபோது) உணவுப் பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டு, உள்நாட்டு விவசாயிகளின் உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டன. பல விவசாயிகள் கல் வீடுகளைக் கட்டியது அப்போதுதான். வன்னியில் விசுவமடு போன்ற இடங்களை விவசாய நிலங்களாக மாற்றியதும் அப்போதுதான்.

அந்த நடைமுறையால் நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டாலும், திட்டம் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டதால், குறுகிய கால உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. தொடர்ந்து ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்து, இறக்குமதித் தடைகளை நீக்கிவிட்டார்.

அது, அன்றைய பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகவின் அதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தற்போதைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு நன்றாகத் தெரியும் என்பதால், அரசு கொள்கையளவில் இறக்குமதித் தடை பற்றி எடுத்துள்ள முடிவை, எப்படி நடைமுறைப்படுத்தப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பரபரப்பு வார இதழில் வெளியாகும் ஆக்கங்கள் எதையும் மறு பிரசுரம் செய்வதோ, ஒலிபரப்பு, ஒளிபரப்பு செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. கட்டுரைகளில் எழுதியவர் பெயர் இடம்பெறாவிட்டால், அந்தக் கட்டுரைகளை எழுதியவர் பரபரப்பு வார இதழின் பிரதம ஆசிரியரே. பரபரப்பு வார இதழில் வெளியாகும் விளம்பரங்களின் பொருளடக்கத்துக்கு விளம்பரதாரர்களே முழுப் பொறுப்பாளர்கள்.

**தொடர்புகளுக்கு**
இலங்கை தலைமை அலுவலக முகவரி: 46 மாவடி வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய், இலங்கை.
தொலைபேசி: 021 225 5678 அல்லது 021 225 6830
மின்னஞ்சல்: info@paraparapumedia.com

**Sri Lankan Head Office**
**Address:** 46 Mavadi Lane, Suthumalai South, Manipay
**Phone:** 021 225 5678 / 021 225 6830
Email: info@paraparapumedia.com

**Our Management Team**
**General Manager Marketing**
Mr. S.Mathusan (mathusan@paraparapumedia.com)
Phone: 076 461 1774

**Marketing Executives**
Ms. S.Sharmini (sharmi@paraparapumedia.com)
Ms. Sinthuja Srikantharasa (sinthu@paraparapumedia.com)
Mr. P.Sathees Kumar (sathees@paraparapumedia.com)

**பிரதம ஆசிரியர்**
ரிஷி
**Editor-in-Chief**
Rishie
Phone: 077 965 5636
Email: rishie@paraparapumedia.com

கடந்த இதழில் முடிவுற்ற மினி தொடரில், அமெரிக்காவின் செப்டெம்பர் 11ம் திகதி (2001) நடந்த தாக்குதல் பற்றிய ரகசியம் முன்கூட்டியே தெரிந்தும், அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. எதுவும் செய்யாமல் இருந்தது பற்றி எழுதியிருந்தோம். இதோ மற்றொரு மினி தொடர். அந்தத் தாக்குதலை நடத்திய அல் காய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின் லாடனை செப்டெம்பர் 11ம் திகதி தாக்குதல் நடக்கும் முன்னரே சி.ஐ.ஏ. கோட்டை விட்ட விபரத்தை இதில் படியுங்கள்.

# ஒசாமா பின் லாடனை அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ. முதலில் கோட்டை விட்ட கதை!

2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி, கிழக்கு கடற்கரையின் முக்கியமான கோடைகால நாட்களில் ஒன்றாக தொடங்கியது. வெப்பநிலை 70 டிகிரியை தொட்டது. லேசாக காற்று வீசியது. வானம் நீலநிறத்தில் பளீரென காட்சியளித்தது. அன்று காலை அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஃபுளோரிடாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவருடைய உளவுத்துறை தலைவரும், சி.ஐ.ஏ.வின் இயக்குனருமான ஜோர்ஜ் டெனட் (George Tenet), அமெரிக்காவின் பரந்து விரிந்த சாம்ராஜ்யத்திற்குள் வந்து கொட்டும் மிக முக்கியமான ரகசிய தகவல்கள் மற்றும் அமெரிக்க நலனுக்கு அவசியமான உளவுத் தகவல்களை முழுமையாக அறிந்த நபர். தமக்குக் கிடைத்த முக்கிய உளவுத் தகவல்கள் பற்றி ஜனாதிபதியிடம், தனிப்பட்ட முறையில் தினமும் காலை 8 மணிக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

ஆனால், அன்றைய தினம் இந்த வழக்கமான அரசாங்கச் சடங்கை ஜோர்ஜ் டெனட் செய்யவில்லை.

அதற்கு மாறாக, எந்தவிதமான படபடப்புமின்றி வெள்ளை மாளிகையின் வடக்கே அமைந்திருந்த செயின்ட் ரெஜிஸ் ஹோட்டலில், உலகின் மிகப்பெரிய உளவுத் துறையின் தலைவர் பதவிக்கு தாம் வருவதற்கு காரணமாக இருந்த ஒக்லஹாமாவை சேர்ந்த முன்னாள் செனட்டர் டேவிட் எல்.போரெனுடன் (David L. Boren), ஜோர்ஜ் டெனட் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தார்.

ஜோர்ஜ் டெனட், அமெரிக்க செனட்டின் உளவுக் கமிட்டியின் தலைவராக பொறுப்பு வகித்தபோதே, HUMINT (Human intelligence) எனப்படும் உளவாளிகள் மூலம் உளவு தகவல்களை சேகரிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டார்.

பின்னாட்களில் அவர் அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.யின் இயக்குனராக பதவியேற்றபோது, சி.ஐ.ஏ.யின் கவனம் முழுவதும் SIGINT (Signals intelligence) எனப்படும் சமிக்கை உளவு முறைகளில்தான் இருந்தது.

போன், டெலிடைப் மற்றும் டெக்ஸ்ட் தகவல்களை இடைமறித்து அறிவது, சங்கேத எண்களில் ஒளிந்துள்ள ரகசியங்களை கண்டறிவது, செயற்கைக் கோள் மூலம் போட்டோ எடுப்பது மற்றும் ராடார் மூலம் தகவல்களை பெறுவது போன்ற வழிகளில் உளவுத் துறை சி.ஐ.ஏ. செயல்பட்டுக் கொண்டிருந்தது. அன்றைய காலகட்டத்தில், HUMINT (உளவாளிகள்) மூலம் தகவல்கள் சேகரிப்பதில் சி.ஐ.ஏ. பெரிதாக ஆர்வம் காட்டாமல் இருந்தது.


ஆனால், டெனட் பதவியேற்றபின் HUMINT முறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். ஆட்கள் மூலம் தகவல் சேகரிக்கும் பணிக்காகவும், உளவாளிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காகவும் சி.ஐ.ஏ.வின் பட்ஜெட்டில் பெருமளவு பணத்தை ஒதுக்கினார்.

ரகசியமாக உளவு சேகரிக்க ஆட்களை தேர்வு செய்வது, உளவாளிகளுக்கு பணம் கொடுப்பது, மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களில் ஏஜென்ட்களாக இருக்கும் சோர்ஸ்களின் நடவடிக்கைகளை ரகசியமாக ஒருங்கிணைக்கும் பணிக்கு இந்தப் பணம் செலவிடப்பட்டது.

உளவுபார்த்தலில் ஜோர்ஜ் டெனட்டின் கோணம் என்ன? தொழில் நுட்பத்தை மட்டும் வைத்து காரியம் செய்ய


அடுத்த பக்கம் வாருங்கள் ➡

உளவுத்துறை மினி தொடர்



சி.ஐ.ஏ.யின் அன்றைய இயக்குனர் ஜோர்ஜ் டெனட்

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை



ஒசாமா பின் லாடன்

முடியாது என்று அவர் நம்பினார். தமது அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே சி.ஐ.ஏ.யை மாற்றத் தொடங்கினார்.

நிஜ மனிதர்களான உளவாளிகள் இல்லாவிட்டால், உளவுத் தகவல்களை அளிக்கும் ஆட்களை எளிதில் பெறமுடியாது. அத்துடன், அரசாங்கங்கள், எதிர்கட்சி குழுக்கள் அல்லது அயல்நாடுகளில் உள்ள அமைப்புகள் ஆகியவற்றின் ரகசிய நடவடிக் கைகளை சிறிதளவு கூட தெரிந்து கொள்ள முடியாது என்பது அவரது கோணம்.

அமெரிக்க நலனுக்கு உகந்த விதத்தில் வெளிநாட்டு அரசாங்கங்களில் மாற்றங் களை கொண்டு வருவது என்ற சி.ஐ.ஏ.யின் கொள்கையை செயல்படுத்த வேண்டு மானால், ரகசியச் சதி நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். . ஆனால், ஜோர்ஜ் டெனட் சி.ஐ.ஏ.யின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நேரத்தில், அதற்கு முன் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல சி.ஐ.ஏ.யின் ஆபரேஷன்கள் தோல்வியில் முடிந்திருந்தன.

சி.ஐ.ஏ.க்காக உளவாளிகளை உருவாக்கும் பயிற்சித் தளம் ஒன்று, அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநிலத்துக்கு வெளியே 'The Farm' என்ற பெயரில் இயங்கியது.

1990ம் ஆண்டுகளில் ஒரு கட்டத்தில், 'The Farm' பயிற்சித் தளத் தில் எதிர்கால உளவு வேலைகளுக்காக ஒவ்வொரு ஆண்டும் 12 பேருக்கு மட்டும் தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. இது ஜேம்ஸ் பாண்ட் பாணியில் 'அனைத்தையும் செய்யக்கூடிய' உளவாளிகளுக் கான பயிற்சிகள்!

2001ம் ஆண்டு அந்த எண்ணிக்கையை 10 மடங்காக உயர்த்தி னார் ஜோர்ஜ் டெனட்.

அமெரிக்க ஜனாதிபதி உத்தரவிட்டால், வெளிநாடுகளில் ரகசிய சதி நடவடிக்கைகளை அரங்கேற்றுவதற்காக தேவைப்படும் ஆட்களின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கில் இந்த திட்டத்தை சி.ஐ.ஏ. யின் இயக்குனர் என்ற முறையில் அவர் செயல்படுத்தினார்.

டேவிட் போரெனுடன் காலை உணவு உண்டுகொண்டிருந்த சி.ஐ.ஏ. யின் இயக்குனர் ஜோர்ஜ் டெனட்டின் பின்னணி இதுதான்.

இப்போது, 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி, இவர்கள் காலை உணவு உண்டுகொண்டு இருக்கும் செயின்ட் ரெஜிஸ் ஹோட்டலுக்கு போகலாம்.

"தற்போது உங்களுக்கு கவலையளிக்கும் விஷயம் என்ன?" என அந்த காலை நேரத்தில் டெனட்டிடம் போரென் கேட்டார்.

"பின் லாடன்" என டெனட் ஒற்றைச் சொல்லில் பதிலளித்தார் டெனட்.

சவுதி அரேபியாவிலிருந்து நாடு கடந்து ஆப்கானிஸ்தானில் வசித்து வந்த ஒசாமா பின் லாடன், அல் காய்தா நெட்வேர்க்கை உலகம் முழுவதும் ஏற்படுத்தியிருந்தார். பின் லாடன் மிகப்பெரிய அளவில் தாக்குதல் திட்டம் ஒன்றை நிறைவேற்ற போகி றார் என்பதை சி.ஐ.ஏ.யின் தலைவர் ஜோர்ஜ் டெனட் அறிந்திருந்தார் என்பதுதான் ஆச்சரியமான விஷயம்! (ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்பதை இந்தத் தொடரில் தெரிந்து கொள்ளலாம்)

"ஒ..ஜோர்ஜ், இது சற்றே அதிகமான கவலை" என கூறிய போரென், "ஒரு தனிப் பட்ட நபர் (பின் லாடன்) ஒரு பலமான நாட்டின் அரசாங்கம் ஒன்றின் பக்கபலமில் லாமல் அமெரிக்காவுக்கு எவ்வாறு அச்சுறுத்தலாக இருக்க முடியும்?"

"அல் காய்தாவின் திறமை பற்றியும், எவ்வளவு தூரத்திற்கு அவர்கள் வளர்ச்சிய டைந்து விட்டனர் என்பது பற்றியும் உங்களுக்கு தெரியாது" என போரெனுக்கு டெனட் பதிலளித்தார்.

பின் லாடன் பற்றி தமது நண்பர் அதீதமான நம்பிக்கையுடன் கூடிய கணிப்பை வளர்த்துக் கொண்டுள்ளதாக போரென் எண்ணினார். அதற்கு ஒரு காரணமும் இருந்தது.

ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளுக்கு முன், 2000ம் ஆண்டு புத்தாண்டு கொண் டாட்டங்கள் தொடங்குவதற்கு சற்று முன்னதாக, வழக்கத்திற்கு மாறான முறையில், தனிப்பட்ட வகையில் போரெனை, டெனட் எச்சரித்தார்.

"புத்தாண்டு கொண்டாட்டங்களில் நடைபெறும் பெரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டாம். அத்துடன் புத்தாண்டு தினத்தன்று பயணம் செய்ய வேண் டாம். மிகப் பெரிய தாக்குதல்களை நான் எதிர்பார்க்கிறேன்" என போரெனை எச் சரிக்கை செய்தார் டெனட்.


ஆனால், அன்றைய தினம் ஏதும் நடக்கவில்லை.

2001 ஜூலை 4ம் திகதி அமெரிக்க சுதந்திர தின கொண்டாட்டங்களின் போதுகூட தாக்குதல் நடத்தப்படக்கூடும் என டெனட் கவலைப்பட்டார். அது பற்றி போரெனி டம், மேலோட்டமாக தெரிவித்தும் இருந்தார். ஆனால், அன்றும் ஜோர்ஜ் டெனட் எதிர்பார்த்ததுபோல ஏதும் நடக்கவில்லை.

பின் லாடனின் ஆட்களின் 34 முக்கியமான உரையாடல்களை ஒட்டுக் கேட்டதில், "நாளை நடைபெறும் zero hour" அல்லது "ஆச்சரியப்படத்தக்க நிகழ்வு நடக்கப் போகிறது" என்பன போன்ற கூற்றுக்களை ஒட்டுக் கேட்கப்பட்ட அந்த உரையாடல் களில் டெனட் கேட்டிருந்தார். அவற்றை அவர் நம்பவும் செய்தார். அதனால், டெனட் உச்சக்கட்ட உஷார் நிலையில் இருந்தார்.

சி.ஐ.ஏ.யின் உளவாளிகள் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்த உளவுத் தகவல் களிலும், வெளிநாட்டில் உள்ள அமெரிக்க தூதரகங்கள் அல்லது அமெரிக்க உல் லாசப் பயணிகள் அதிகம் கூடும் இடங்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப் படுவதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், எங்கே? எப்போது? எந்த மாதிரியான தாக்குதல் நடத்தப்படக்கூடும் என



வேர்ஜீனியா மாநிலம் லாங்க்லியில் உள்ள சி.ஐ.ஏ.யின் தலைமையகத்தில் ஜோர்ஜ் டெனட்

அந்த உளவு தகவல்கள் தெரிவிக்கவில்லை. மேலோட்டமான தகவல்கள்!

"இந்த விவகாரத்தால் நான் தூக்கத்தை தொலைத்து பல நாட்களாகி விட்டது" என டெனட் கூறிக்கொண்டு இருக்கும்போது, திடீரென சி.ஐ.ஏ.யின் இயக்குனர் டெனட்டின் பாதுகாவலர்கள் திமுதிமுவென செயின்ட் ரெஜிஸ் ஹோட்டல் காலை உணவு மேசையை நோக்கி ஓடிவந்தனர். அவர்கள் மேஜை மீது விழுந்து விடு வார்கள் என போரென் நினைத்தார். அந்தளவிற்கு அவர்கள் வேக மாக ஓடி வந்தனர். ஏதோ முக்கிய விஷயம் நடந்து விட்டது!

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



"மிஸ்டர் டைரக்டர்" என கூறிய அவர்களில் ஒருவர், "மிக தீவிரமான பிரச்சினை ஏற்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

"என்ன பிரச்சினை?" என டெனட் அவர்களிடம் கேட்டார். டேவிட் போரன் இருக்கும் போது, தயக்கம் எதுவும் இல்லாமல் பேசலாம் என்பதற்கு அறிகுறியாக டெனட், அவ்வாறு கேட்டார்.

"உலக வர்த்தக மையம் தாக்கப்பட்டுள்ளது" என அவர்கள் தெரிவித்தனர். அதில் ஒருவர், டெனட்டிடம் செல்ஃபோனை கொடுத்தார். அதன் மூலம் அவர் தலைமை யகத்தை தொடர்பு கொண்டார்.

"உலக வர்த்தக மைய கட்டத்தின் மேல் அவர்கள் விமானத்தை செலுத்தி மோதி யுள்ளார்களா?" என டெனட் நம்ப முடியாத தொனியில் கேட்டார்.

சி.ஐ.ஏ.யின் தலைமையகத்தில் உள்ள தமது கான்பிரென்ஸ் ரூமில் உடனடியாக அனைத்து முக்கியமான அதிகாரிகளும் வர வேண்டும் என உத்தரவிட்ட டெனட், மிக விரைவில் தாம் அங்கு இருப்பேன் என்றும் தெரிவித்தார்.

"இந்த தாக்குதலைச் செய்தது பின் லாடன்தான்" என போரெனிடம் கூறிய டெனட், "நான் செல்ல வேண்டும்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அன்றைய தினம் (செப்டெம்பர் 11, 2001) தீவிரவாத தாக்குதலை தடுக்க முன் கூட்டியே வாய்ப்பிருந்தும், அதை அமெரிக்க வெளியக, உள்ளக உளவுத் துறைக ளான சி.ஐ.ஏ. மற்றும் எஃப்.பி.ஐ. ஏன் தடுக்கவில்லை என்று பின்னாட்களில் டெனட்டிடம் ஒரு முறை கேள்வி எழுப்பப்பட்டது.

"நான் ஆச்சரியப்படுகிறேன்" என டெனட் பதிலளித்தார். "ஒரு தனிப்பட்ட நபர் பைலட் பயிற்சி எடுத்த சம்பவத்துடன் உலக வர்த்தக மையம் மீது விமான தாக்கு தலை யாராலும் தொடர்புபடுத்த முடியுமா?" என டெனட் திருப்பிக் கேட்டார்.

ஜோர்ஜ் டெனட் குறிப்பிட்ட தனிப்பட்ட நபர் ஜக்காரியாஸ் மவுசாயோவி. பிரெஞ்ச் குடியுரிமை பெற்ற மொராக்கோ நாட்டவர். அல் காய்தா இயக்கத்தில் அவருடைய பெயர், ஷாகில்.

2001ம் ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி தாக்குதல் நடப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன், ஆகஸ்ட் 16ம் திகதி, இந்த ஷாகிலை அமெரிக்காவின் மின்னஸோட்டா மாநி லத்தில் அமெரிக்க உள்ளக உளவுத்துறை எஃப்.பி.ஐ. கைது செய்தது. உள்ளூர் விமானப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற்ற அவரின் நடவடிக்கைகள் சந்தேகத் திற்கிடமான முறையில் இருந்ததால் அவர் கைது செய்யப்பட்டார்.

இவரும் செப்டெம்பர் 11ம் திகதி நடந்த தாக்குதலுக்குச் சென்றிருக்க வேண்டியவர் எனவும், அதற்குமுன் அவர் கைது செய்யப்பட்ட காரணத்தால் அவர் போகவில்லை எனவும் பின்னாட்களில் எஃப்.பி.ஐ. கருதியது.

செப்டெம்பர் 11ம் திகதிய தாக்குதலுக்கு முன்பே அதே ஆண்டு (2001) ஆகஸ்ட் மாதம், சி.ஐ.ஏ. மற்றும் தேசிய பாதுகாப்பு ஏஜென்சியிடம் (NSA), வெளிநாடுகளில் உள்ள யாருடனாவது தொலைபேசி மூலம் ஷாகில் ஏதாவது பேசியுள்ளாரா என கண்டறியுமாறு எஃப்.பி.ஐ. கேட்டுக்கொண்டது. அந்தளவுக்கு அவரது நடவடிக்கை கள் சந்தேகத்துக்குரிய முறையில் இருந்தன.

ஷாகில் பற்றிய விபரங்கள் அடங்கிய ஐந்து அங்குல கனமுள்ள பைல் ஒன்றை அவர்கள் சி.ஐ.ஏ.வுக்கு அனுப்பியிருந்தார்கள்.

அந்த பைல் சி.ஐ.ஏ.க்கு கிடைத்து ஒரு மாதத்துக்குள் செப்டெம்பர் 11ம் திகதிய தாக்குதல்கள் நடந்து விட்டன.

செப்டெம்பர் 11ம் திகதி தாக்குதல் நடந்த விபரம் தெரிவிக்கப்பட்டு, காலை உணவை பாதியில் முடித்துக்கொண்டு டெனட், அமெரிக்காவின் வேர்ஜீனியா மாநி லத்தில் உள்ள லாங்கிலியில் 258 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சி.ஐ.ஏ.யின் தலைமையகத்துக்கு விரைந்து கொண்டிருந்தபோது, அந்த பைலில் பதிவாகி யுள்ள தகவல்கள், டெனட்டுக்கு நன்றாகவே ஞாபகத்தில் இருந்தன.

"உலக வர்த்தக மைய கட்டத்தின் மேல் அவர்கள் விமானத்தை செலுத்தி மோதி யுள்ளார்களா? அப்படியானால், இந்த ஷாகிலின் பைலில் இருந்துதான் எமது புலனாய்வைத் தொடங்க வேண்டும்" என அவர் நினைத்துக் கொண்டார்.

பின் லாடனை சி.ஐ.ஏ., ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தீவிரமாக தேடிவந்தது. 1998ம் ஆண்டு கென்யா மற்றும் தான்சானியா ஆகிய நாடுகளில் அமெரிக்க தூதர கங்களின் மீது பின் லாடன் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 200க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அதனை தொடர்ந்து, பின் லாடனைத் தேடும் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.

இச்சம்பவத்திற்கு பிறகு, ஆப்கனிஸ்தானில் பின் லாடன் பங்கேற்றிருப்பதாக கரு தப்பட்ட உயர்மட்ட குழு கூட்டம் ஒன்றின் மீதும், தீவிரவாதிகளின் பயிற்சி முகாம்கள் மீது குரூஸ் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்துமாறு அமெரிக்க ராணுவத் துக்கு அப்போதைய ஜனாதிபதி பில் கிளிண்டன் உத்தரவிட்டார். ஆனால், ஏவுக ணைகள் இலக்கை சென்றடைவதற்கு சில மணி நேரத்திற்கு முன்பே பின் லாடன் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டார்.

1999ம் ஆண்டு ஆப்கனிஸ்தானுக்குள் நுழைந்து பின் லாடனை பிடிப்பதற்காக, பாகிஸ்தான் உளவு ஏஜென்சியிலிருந்து 60 கமாண்டோக்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ரகசிய ஆபரேஷன் ஒன்றுக்கான பயிற்சியை சி.ஐ.ஏ. அளித்தது. ஆனால், அந்த ஆபரேஷன் நிறைவேற்றப்படவில்லை.

அதற்குக் காரணம், ஆபரேஷன் தொடங்குவதற்கு முன் பாகிஸ்தானில் ராணுவப் புரட்சி ஏற்பட்டதுதான்.

ஜனாதிபதி கிளிண்டனின் தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் இடைவிடாமல் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட ஆலோசனை கூட்டங்களில் பின் லாடனுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய அபாயகரமான தாக்குதல் திட்டங்கள் குறித்தும் ஆலோ சனை நடத்தப்பட்டது.

அதில் ஒரு திட்டமாக, அமெரிக்க ராணுவத்தின் சிறப்பு படைப்பிரிவை சேர்ந்த 40 கமாண்டோக்களை இரவில் ஹெலிகாப்டர் மூலம் கொண்டுபோய் இறக்கி, பின் லாடனைக் கொல்வது என்ற திட்டம், கிளிண்டன் ஜனாதிபதியாக இருந்த காலத் திலேயே (செப்டெம்பர் 11 தாக்குதலுக்கு முன்பே) பரிசீலிக்கப்பட்டது.

அது எப்படி நடைபெற்றது, அந்தத் திட்டத்துக்கு என்ன நடந்தது என்பதை அடுத்த வாரம், அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம். ...(தொடரும்)

# இலங்கையின் தலையில் கை வைக்க முயன்ற சீனா!

இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் வர்த்தகத்தில் கால்பதிக்கத் திட்டமிட்ட சீன எண்ணை வர்த்தக நிறுவனங்களின் கோரிக்கையை நிராகரித்துள்ளது இலங்கை அரசு. இலங்கை அரசின் செய்தித் தொடர்பாளர் ரஜித சேனரட்ன இதை உறுதி செய்துள்ளார்.




ரஜித சேனரட்ன

ரஜித சேனரட்னவைத் தொடர்பு கொண்டபோது, "இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபட விரும்பி இரு சீன நிறுவனங்கள் அனுமதி கோரியிருந்தன. அந்தக் கோரிக்கை இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டது நிஜம்தான். தற்போது இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் நிறுவனங்களுடன் இணைந்து வர்த்தகம் செய்ய விரும்பினால், சீன நிறுவனங்கள் தாராளமாகச் செய்யலாம். ஆனால், அவர்கள் தனியாக இந்த வர்த்தகத்தில் ஈடுபட இலங்கை அரசு அனுமதிக்காது என பதில் கொடுத்துள்ளோம்" என்றார்.

தற்போது இலங்கையின் உள்நாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு நிறுவனங்களில் ஒன்று, (இலங்கை அரசுக்குச் சொந்தமான) இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனம், இரண்டாவது நிறுவனம், லங்கா ஐ.ஓ.சி. இது, இந்திய அரசுக்குச் சொந்தமான இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனம்.

அதாவது, இலங்கையில் நடைபெறும் ஆண்டுக்கு 6 பில்லியன் டொலர் எண்ணை வர்த்தகத்தை இலங்கை மற்றும் இந்திய அரசு நிறுவனங்களே முழுமையாக வைத்திருக்கின்றன. இந்தச் சந்தையில்தான் தாமும் போட்டியிட வருவதற்குத்தான் கண் வைக்கின்றன சீன நிறுவனங்கள்.






ஹம்பாந்தோட்டவில் அமைந்துள்ள துறைமுகம், முற்று முழுதாக சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதற்கு அருகே எண்ணை சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைப்பதற்கு இரு சீன நிறுவனங்கள் கூட்டாக அனுமதி கோரி விண்ணப்பித்தன. 3 பில்லியன் டொலர் செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்ட இந்த ஆலையில் ஆண்டு ஒன்றுக்கு 5 மில்லியன் தொன் எண்ணையைச் சுத்திகரிக்க முடியும்.

ஹம்பாந்தோட்ட துறைமுகத்துக்கு வரும் எண்ணைக் கப்பல்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணை கொண்டுவரப்பட்டு, இங்கு வைத்துச் சுத்திகரிப்பது என்பதே திட்டம் என முதலில் கூறப்பட்டது. அதன்பின், சுத்திகரிக்கப்பட்ட எண்ணை ஹம்பாந்தோட்ட துறைமுகத்தில் இருந்து சீனா உட்பட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்று கூறியே அனுமதி கோரின அந்த இரு சீன நிறுவனங்களும்.

இதற்கு அனுமதி கொடுப்பதற்கு இலங்கை அரசுக்கு ஆட்சேபனை ஏதும் இருக்கவில்லை. அமையப்போகும் புதிய எண்ணை சுத்திகரிப்பு ஆலையில் உள்நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற வகையில், ஆலையை அமைக்க அனுமதி கொடுத்தது இலங்கை அரசு.

ஹம்பாந்தோட்டவில் எண்ணை சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அனுமதி கோரிய இரு சீன நிறுவனங்களில் ஒன்று, China Huanqiu Contracting & Engineering Corp. இந்த நிறுவனம், சீன அரசுக்குச் சொந்தமான சீனா தேசிய பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் கிளை நிறுவனம். இரண்டாவது சீன நிறுவனம் தனியார் நிறுவனம். பெயர், Shandong Dongming Petrochemical Group.

இந்த இரு நிறுவனங்களுக்கும் எண்ணை சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட பின்னர், அவர்களின் குரல் மாறியது. ஹம்பாந்தோட்டவில் சுத்திகரிப்புச் செய்யப்படும் எண்ணையை இலங்கையின் உள்நாட்டுச் சந்தையில் விற்பதற்கு அனுமதி கோரின இந்த இரு சீன நிறுவனங்களும்.

அந்தக் கோரிக்கைதான் தற்போது இலங்கை அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி அரச மட்டத்தில் நாம் விசாரித்தபோது, தமது பெயர் வெளியிடப்படுவதை விரும்பாத அரச உயரதிகாரி ஒருவர், "இப்போதுகூட ஹம்பாந்தோட்டவில் எண்ணை சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்கு இரு சீன நிறுவனங்களும் விரும்பினால், தாராளமாக அமைத்துக் கொள்ளலாம். ஆனால், அங்கு சுத்திகரிக்கப்படும் எண்ணையை இரு சீன நிறுவனங்களும் இலங்கைக்கு வெளியே (ஏற்றுமதி) கொண்டுபோக வேண்டும்" என்றார்.

இலங்கையில் பல ஆண்டுகளாக நடைபெறும் FTZ (Free-Trade Zone) பாணியிலான வர்த்தகம் இது. தற்போது கட்டுநாயக்காவில் இயங்கும் பல ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் இந்த முறையில் இயங்குகின்றன. ஆடைத் தயாரிப்புக்கு தேவையான துணி, வெளிநாட்டில் இருந்து வரும். அதற்கு சுங்க வரி கிடையாது. அந்தத் துணியை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட ஆடைகள், கண்டிப்பாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்பதே FTZன் நிபந்தனை.

மேலை நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் தொழிலாளர் ஊதியம் மிகவும் குறைவு என்பதால், மேலை நாட்டு ஃபாஷன் ஆடை நிறுவனங்கள் தமது ஆடைகளை இலங்கையில் உள்ள தொழிற்சாலைகளில் தயாரிக்கின்றன. அந்த ஆடைகள் உள்நாட்டுச் சந்தைக்கு வராமல் ஏற்றுமதி செய்யப்படுகின்றன (ஆனால், அதே ஆடைகள் 'வேறு வழியால்' இலங்கைச் சந்தைக்குள் வருகின்றன என்பது வேறு விஷயம்).

அதுபோன்ற பாணியில்தான், ஹம்பாந்தோட்டவில் எண்ணை சுத்திகரிப்பு ஆலையையும் அமைப்பதற்கு சீன நிறுவனங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

சீனாவைப் பொறுத்தவரை அவர்கள் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நடைபெறும் வர்த்தக மற்றும் கடல்வழிப் போக்குவரத்துப் பாலம் ஒன்றை ஹம்பாந்தோட்டவில் அமைக்கத் திட்டமிட்டுக் காய் நகர்த்துகின்றனர். அதை முறியடிப்பதற்காக இலங்கை அரசுக்கு ஆரம்பத்தில் இருந்தே மிகக் கடுமையாக அழுத்தம் கொடுத்த நாடு, இந்தியா.

இப்போது அமெரிக்காவும், சில ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவுடன் இணைந்துள்ளன. சீனா இதற்கு மேலும் இலங்கையில் கால் பதிக்க முடியாதபடி அழுத்தங்களைக் கொடுக்கின்றன இந்த நாடுகள். ◘

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

கடந்த இதழின் தொடர்ச்சிதான். ஆனால், வழமை போல, முன்கதைச் சுருக்கம் சொல்ல நேரம் இல்லை. அவசரம். தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்துக்கு வருகிறோம், ஒரு பொருளை வாங்குவதற்கு! என்ன பொருள் என்பதை படிக்கும் போது நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஐயா மாணிக்கம்.. இதோ வருகிறோம்! பானையைக் கவிழ்த்து விடாதீர் பிளீஸ்.

# ஏம்பா... மாடு வாங்கிற லுக் அடிக்குதா நம்மில்?



மாணிக்கம் கடை எங்கேம்மா செம்பவம்?

கிராமத்தில் மின்சாரம் கிடையாது. குப்பி விளக்குகள்தான். நாய்கள் திரிந்தன, ஆனால் குரைக்கவில்லை. முண்டாசு கட்டியிருந்ததால் உள்ளூர்வாசிகள் என்று நினைத்து குரைக்காது போலும். ஏன் முண்டாசு என்று தெரிந்துகொள்ள கடந்த இதழைப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை..

ஒரேயொரு பெட்டிக்கடை தெரிந்தது. நண்பர் கடையருகே போய் விசாரித்தார்.

"ஏங்க, மாணிக்கம் இன்னிக்கு எங்கே வெயாபாரம் (வியாபாரம்) செய்யிறாரு?"

"இன்னிக்கு லீவாச்சே. இனிமே நாளைக்குத்தான்"

"இதுக்குக்கூட லீவுங்களா, என்னங்க அநியாயமாக இருக்கு."

"வெள்ளி, சனி லீவுதானுங்களே. நாளைக்கு ஞாயிறு சந்தை தொறக்குமுங்க. மாணிக்கம் வருவாரு. வெயாபாரம் பண்ணிங்குங்க" என்றார் பெ.கடைக்காரர்.

"சந்தையா? அங்கே வைத்தா மாணிக்கம் பட்டை விற்கிறார்? ஏதோ சுடலைக்குப் பின்னாடி, ஐயனார் சிலைக்கு வலப்புறம் என்றெல்லாம் சொன்னீரே?" என்று நண்பரைத் தணிந்த குரலில் கேட்டேன். (பட்டை போடப் போனது அவர்தான். நான் சும்மா துணைக்குப் போன ஆள்!)

"பொறுங்க. இதில் வேறு ஏதோ குழப்பம் இருக்கு... ஏங்க கடைக்காரரே, நீங்க எந்த மாணிக்கத்தைப் பற்றிச் சொல்லுறீக?"

"மாட்டு வியாபாரிதானுங்களே. ஞாயிறு சந்தை திறந்த பிறகுதான் வருவாருங்க."

"இல்லீங்க, இவரு மாட்டு வியாபாரி இல்லீங்க. பட்டை வியாபாரி. மாடு வாங்க யாராவது கன்னங்கரேல் இருட்டிலே வருவாங்களா? மாடு முட்டிராது?"

"ஓ, அந்த மாணிக்கமா. உங்களை பாத்தா பட்டைக்கு வந்தவங்க போலத் தெரியல்லை. அதுதான் மாட்டு வியாபாரி மாணிக்கம்ன்னு நெனைச்சுட்டேன்" என்றார் கடைக்காரர்.

எங்களைப் பார்த்தால் பட்டை அடிக்க வந்த ஆட்கள் போல தெரியவில்லை என்பது சரி. சந்தோஷம்.. ஆனால் மாடு வாங்கிற லுக் அடிக்குதா நம்மில்? அடப்பாவி.. தலையில் முண்டாசு கட்டினால், உடனே மாடு பிசினெஸ்ஸா?!

"இன்னிக்கும் ஐயனார் சிலை பக்கம்தான். சீக்கிரம் போங்க. பானையை மூடிறப் போறாங்க. சரியான சில்லறை கொண்டுபோங்க. போலீஸ் பயம் ஜாஸ்தி" என்றார் கடைக்காரர்.

"சரியான சில்லறை எதற்கு? பாலன்ஸ் தரமாட்டாங்களா?" என்று கேட்டேன்.

"அதெல்லாம் அங்கே வந்து பாருங்க.. விஷயம் புரியும்" என்றபடி ஐயனார் சிலைப் பக்கமாக நடக்கத் தொடங்கினார் நண்பர். அனுபவசாலி.

அங்கே போய் பார்த்த பிறகுதான் இந்த வியாபாரத்தின் செட்டப் புரிந்தது. ஐயனார் சிலைக்குப் பின்னே ஒரு தோப்பு. ஏராளமான மரங்கள். அதற்கு உள்ளே போனால் "ஸ்ஸ்" என்று ஒரு சத்தம்.

பாம்போ என்று பதறிப்போய் பார்த்தால்.. இல்லை. ஒரு ஆள்.

"லெப்ட்ல திரும்பி, பாழுங்கிணறு பக்கமா போங்க"

போனோம். அங்கே சுற்றும் முற்றும் பார்த்தபடி இரண்டு பேர் நின்றிருந்தார்கள். ஒருவர் லுங்கியை மடித்துக் கட்டியிருந்தார். மரத்தின் பின்னே ஒரு மண்பானை. அதன்மேலே ஒரு கிளாஸ். வெளிச்சம் போதாது.

"ஸ்ஸ்ஸ்" "ஸ்ஸ்ஸ்" அட, சிக்னல்!

"ஒரு கிளாஸ்" என்றார் நண்பர் சுருக்கமாக (அங்கு அதிகம் பேசக்கூடாதாம்).

"சில்லறை இருக்கா. சீக்கிரம் எடுங்க, நாலு ரூபா" ஆகா, ரொம்ப சீப்.

நாலு ரூபா கைமாறியது. அதை வாங்கி லுங்கி மடிப்புக்குள் போட்டவர், பானை மீது இருந்த கிளாஸை எடுத்து பானைக்குள் கையை கிளாஸுடன் விட்டு, ஒரு கிளாஸ் திரவத்தை எடுத்தார். பானைக்குள் விடப்பட்ட அவரது கை, மணிக்கட்டு வரை நனைந்திருந்தது. அடேங்கப்பா, நல்ல சுகாதார முறையிலான பானம்!

"சீக்கிரம் குடியுங்க. போலீஸ் வந்தா புடிச்சுறும்"

"சோடா இல்லீங்களா, இவர் பானத்தை மிக்ஸ் பண்ண வேண்டாமா?" என்று நண்பருக்காக நான் கேட்டேன்.

"சோடாவா? யாருங்க இந்தாளு புதுசா? இங்கே வந்து சோடாவெல்லாம் கேக்கிறாரு. விட்டா சில்லி சிக்கன்கூட கேட்பாரு போலிருக்கே"

"அவர் புதுசுங்க. ஸ்ரீலங்கா நாட்டுக்காரர். விஷயம் தெரியாது. இதெல்லாம் அவருக்குப் புதுசுங்க. நீங்க குடுங்க' கிளாஸ் கைமாறியது. ஒரே மடக்.

ஆகா, மிக்ஸ் பண்ணாமல் குடித்த நம்ம நண்பருக்கு தொண்டை எரியப்போகிறது என்று நினைத்துக் கொண்டேன். எரிந்திருக்க வேண்டும். திரவம் தொண்டையில் இறங்கியவுடன் வாயைத் திறந்து "ஒஹ்ஹாஹா" என்று ஹிந்துஸ்தானி சங்கீத வித்துவான் போல ஒலி எழுப்பினார்.

உடனே விசித்திரமான காரியம் ஒன்று நடந்தது.

காசு வாங்கி, மண் பானைக்குள் கையை நனைத்து, கிளாசில் திரவம் எடுத்துக் கொடுத்தவரை விட மற்றொருவர் அங்கே நின்றிருந்தார் என்று சொன்னேன் அல்லவா. அவர் சும்மா நிற்கிறார் என்று நினைத்திருந்தேன்.

தவறு. அவருக்கும் மகத்தான ஒரு பணி இருந்தது.

கிளாஸ் கைமாறியதும் அவர் மடியில் இருந்து பொட்டலம் ஒன்றை எடுத்திருந்தார். திரவம் தொண்டைக்குள் போய் எரிய, நண்பரிடமிருந்து ஒஹ்ஹாஹா ஒலி வருமல்லவா. அப்போது அவருடைய நாக்கு வெளியே வரும். உடனே இவர் தனது பொட்டலத்திலிருந்து ஆட்காட்டி விரலில் தயாராக எடுத்து வைத்திருந்த பொருளை நாக்கில் தடவிவிடுவார்.

ஊறுகாய்! Wow... what a service!

"சரிங்க. இடத்தைக் காலி பண்ணுங்க போலீஸ் பார்த்தா புடிச்சிருவாங்க."

ஒரு நிமிடம்கூட இல்லை. அவ்வளவு வேகம். ஏற்பாடுகள் துல்லியம். சில்லறை கொடுக்கும் நேரம் இல்லை. சோடா கலக்கும் நேரம் இல்லை. சிப் பண்ணிக் குடிக்கும் நேரம் இல்லை. அட, நாக்கில் ஊறுகாய் தடவி விடுவதற்கும் ஒருவர் தயாராக நிற்கிறார்! வேகம்! வேகம்!! வேகம்!!!

இவ்வளவு குறுகிய நேர ஆபரேஷனுக்குள் திபுதிபுவென்று ஓடிவந்து, பட்டை அடித்தவரையும், விற்றவரையும் பிடிப்பதென்றால்.. தமிழ்நாட்டுப் போலீசாலும் முடியாது. ஏன், அமெரிக்க அதிரடிப்படையான டெல்டா போர்ஸ் கமான்டோக்கள் வந்தால்கூட மாணிக்கத்தைப் பிடிக்க முடியாதுங்களே! (முற்றும்)

# இலங்கை மாணவர்களுக்கு குறைந்த செலவில் ஐரோப்பாவில் மேற்படிப்பு

இலங்கையில் இருந்து மாணவர்கள் உயர் கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்வது பற்றிய கட்டுரைத் தொடர் இது. பொதுவாகவே வெளிநாடு ஒன்றில் மேற்படிப்புப் படிக்க வேண்டும் என்றால், அதற்கு எக்கச்சக்க செலவாகும் என்பதான நினைப்பு இலங்கையில் உள்ள மாணவர்களிடமும், அவர்களது பெற்றோர்களிடமும் உள்ளது.


அது ஓரளவுக்கு உண்மை என்றாலும், முற்று முழுதான உண்மை அல்ல.

வெளிநாடுகளில் குறைந்த கல்விக் கட்டணம் நிர்ணயித்துள்ள சில பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவை எங்கே உள்ளன என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் அந்தப் பல்கலைக்கழகங்களில் என்ன கோர்ஸ்கள் படிக்கலாம் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மாணவர்களின் வெளிநாட்டு மேற்படிப்பு தொடர்பான இந்தக் கட்டுரைத் தொடரில், வாராவாரம் அவற்றைத்தான் பார்த்து வருகிறோம்.

பரபரப்பு வார இதழில் நாம் கொடுக்கும் இந்த விபரங்கள் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உதவும் வகையில் எளிமையாக வெளியிடப் படுகின்றன. ஒருவேளை இப்போது உடனடியாக ஒரு மாணவன் மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லும் திட்டம் இல்லையென்றாலும், வருங்காலத்தில் வெளிநாட்டு மேற்படிப்பைத் திட்டமிடவும், இந்தத் தகவல்கள் பயன்படும். அல்லது, நண்பர்களுக்கோ, உறவினர்களுக்கோ ஆலோசனை வழங்கவும் இந்தத் தகவல்கள் பயன்படும்.

பொதுவாகவே அநேக மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்கள் உள்நாட்டு மாணவர்களுக்கு ஒரு



கல்விக் கட்டணமும், வெளிநாட்டு மாணவர்களுக்கு அதைவிட பல மடங்கு கல்விக் கட்டணமும் நிர்ணயித்துள்ள நிலையில், சில பல்கலைக்கழகங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாணவர்களுக்கு ஒரே கட்டணத்தை நிர்ணயித்துள்ள பல்கலைக் கழகங்கள் பற்றிய விபரங்களை கடந்த வாரங்களில் இந்தத் தொடரில் பார்த்தோம்.

அதேபோல, மேற்படிப்புக்கு ஆகும் அனைத்துச் செலவுகளுக்கும் (கல்விக் கட்டணம், வாடகை, மருத்துவம், உணவு) நிதியுதவி வழங்கும் பல்கலைக்கழகம் பற்றியும் கடந்த வாரம் பார்த்தோம்.

இந்த வாரம், குறைந்த செலவில் கல்வி பயிலக்கூடிய பல்கலைக் கழகம் ஒன்றை முதலில் பார்க்கலாம்.

## வியன்னா பல்கலைக்கழகம் (University of Vienna)

மத்திய ஐரோப்பாவில் உள்ள ஆஸ்திரியா (Austria) நாட்டின் தலைநகர் வியன்னா. ஆஸ்திரியாவின் அதிகாரபூர்வ மொழி, ஜேர்மன்.

வியன்னா பல்கலைக்கழகம் அரசுக்குச் சொந்தமான கல்வி நிலையம். மிகவும் பழமை வாய்ந்தது (1365ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது). ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், மற்றும் ஐரோப்பியப் பொருளாதாரப் பகுதி நாடுகளின் பல்கலைக்கழக கல்விக் கட்டணங்களுடன் ஒப்பிடும்போது, வியன்னா பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டணங்கள் மிகக் குறைவு.

இதனால், இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகம். கடந்த கல்வியாண்டில் இந்தப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற மொத்தம் 34,711 மாணவர்களில், 8,854 மாணவர்கள், வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள்.

வியன்னா பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டணம், மாணவன் எந்த நாட்டில் இருந்து வருகிறார் என்பதில் தங்கியுள்ளது. வளரும் நாடுகளில் இருந்து வரும் மாணவர்களின் நிதி வசதி குறைவு என்பதைக் கருத்தில் கொண்டு குறைந்த கல்விக் கட்டணம் நிர்ணயிக்கும் நல்ல நடைமுறை இங்கு உள்ளது.

உதாரணமாக எண்ணை வளம் மிக்க நாடுகளான சவுதி அரேபியா பஹ்ரெயின் போன்ற நாடுகளில் இருந்து கல்வி பயில வரும் மாணவர்களின் கல்விக் கட்டணம், ஒரு செமஸ்டருக்கு 745.92 Euro என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வரும் மாணவர்கள் என்றால், செமஸ்டருக்கு 382.56 Euro மட்டுமே.

அதாவது, இலங்கை மாணவருக்கு 6 மாதத்துக்கான (செமஸ்டர்) கல்விக் கட்டணம், சுமார் 68,000 இலங்கை ரூபா மட்டுமே. வேறு பல ஐரோப்பிய அல்லது வட அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது இது பல மடங்கு குறைவானது.

வியன்னா பல்கலைக்கழகத்தில் அட்மிஷன் பெற விரும்பினால், நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்.

1) வியன்னா நகரில் இந்தப் பல்கலைக்கழகம் உள்ளது என்றாலும், அனைத்து கோர்ஸ்களும் ஒரே வளாகத்தில் இல்லை. நகரின் வெவ்வேறு பகுதிகளில், வெவ்வேறு வளாகங்கள் உள்ளன.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் கோர்ஸ் நகரில் உள்ள எந்த வளாகத்தில் உள்ளது என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். அல்லது, நகரில் எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்பது முதலில் தெரிந்தால், அந்தப் பகுதியில் உள்ள வளாகத்தில் என்னென்ன கோர்ஸ்கள் உள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

2) அனைத்து கோர்ஸ்களும் (மொத்தம் 175) ஜேர்மன் மொழியில் உள்ளன. ஆனால், ஆங்கிலத்திலும் படிக்கலாம்.

இளங்கலையில் சில கோர்ஸ்களும், முதுகலை கோர்ஸ்களில் சில கோர்ஸ்களும் ஆங்கிலத்திலும் உள்ளன. நீங்கள் ஆங்கிலத்தில் கல்வி பயில விரும்பினால், நீங்கள் தேர்ந்தெடுக்கும் கோர்ஸ் ஆங்கிலத்தில் உள்ளதா என்பதை முதலில் கவனியுங்கள்.

3) ஜேர்மன் மொழியில் படிக்க விரும்பினால், முதலில் ஜேர்மன் மொழிக் கல்வி கற்றுப் பரீட்சையில் சித்தியடைவது அவசியம். ஆங்கிலத்தில் கல்வி பயில்வது என்றால், ஜேர்மன் மொழிக் கல்வி தேவையில்லை.

4) இந்தப் பல்கலைக்கழகம் மாணவர்களுக்கு தங்குமிட வசதி (Residential Facilities) செய்து கொடுப்பதில்லை. எனவே தங்கும் இடத்தை நீங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

அடுத்த இதழில் மற்றொரு வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் பற்றிப் பார்க்கலாம்.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# புலிகளின் ஆயுதக் கப்பலின் காப்டன்

# இந்திய உளவுத்துறை றோவிடம் சிக்கிய கதை!

**கடந்த அத்தியாயத்தில் என்ன படித்தோம்?**

2002ம் ஆண்டுவரை புலிகளின் வெளிநாட்டுப் பிரிவால் வெற்றிகரமாக நடத்தப்பட்டுக் கொண்டிருந்த புலிகளின் ஆயுதக் கப்பல் ஆபரேஷனை கடற்புலிகள் பிரிவின் தளபதி சூசை தமது பிரிவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று ஏன் விரும்பினார். அதற்குக் காரணம், கடற்புலிகள் அமைப்பில் தளபதி சூசைக்கு ஏற்பட்ட ஒரு சிக்கல்தான் என்று கடந்த அத்தியாயத்தை முடித்திருந்தோம். அது என்ன சிக்கல் என்பதை இந்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

## அத்தியாயம் ஆறு

புலிகளுக்கு சொந்தமான கப்பல்களின் ஆரம்ப கால வர்த்தக நடவடிக்கைகளுக்கு புலிகள் இயக்கத்தைச் சேராத வெளி மாலுமிகள் பயன்படுத்தப் பட்டனர். அதன்பின், ஆயுதங்களை ஏற்றி அனுப்பும் வேலைகள் அதிகரித்தன. ரகசியமான அந்த வேலைக்கு, வெளி ஆட்களைப் பயன்படுத்த விரும்பவில்லை புலிகளின் வெளிநாட்டுப் பிரிவினர். காரணம் இது ரகசியம் காக்கப்பட வேண்டிய ஆபரேஷன்.

இது பற்றி புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் விவாதித்ததில், கப்பல்களுக்கான மாலுமிகளாக புலிகள் இயக்கத்தில் இருப்பவர்களை பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. ஆழ்கடல் கப்பல் ஆபரேஷனுக்கு தகுதியான நபர்களை இலங்கையில் புலிகள் இயக்கத்தில் இருந்து தேர்ந்தெடுத்து, வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் நடைமுறை தொடங்கியது.

இலங்கையில் இருந்து அப்படி அனுப்பி வைக்கப்பட்ட புலி உறுப்பினர்கள், தாய்லாந்திலும், மலேசியாவிலும் போய் இறங்கினார்கள். அந்த இரு நாடுகளிலும் இலங் கையில் இருந்து செல்பவர்கள் தங்குவதற்கான பாதுகாப்பான வீடுகள் (safe houses) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அவர்களுக்கு, வெளிநாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட இடங்களில் ஆழ்கடலில் கப்பல்களைச் செலுத்தும் மாலுமிப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்ட புலிகளில், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இருந்தாலும், கடற்புலிகள் பிரிவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டவர்களே அதிகம். இந்த ஆபரேஷன் அதி ரகசியமானது என்பதால், கப்பலில் ஏற்றப்பட்ட மாலுமிகளில் 'ரகசியம் தெரிந்தவர்கள்' (சில கப்பல்களின் காப்டன்கள் உட்பட) தரையிறங்க அனுமதிக்கப்படுவதில்லை.

ஆயுதக் கப்பல் ரகசியம் தெரிந்த சிலரை 5 வருடங்கள் வரை கப்பலில் இருந்து இறங்கவே அனுமதிக்காத சம்பவங்களும் இருந்தன. ரகசியம் தெரிந்தவர்கள் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்பதால், அவர்களும், தரையிறங்க வேண்டும் என்று அடம் பிடிப்பதில்லை.

இந்த இடத்தில் மற்றொரு சிறிய சம்பவத்தையும் சொல்லி விடலாம்.

2000ம் ஆண்டு, புலிகளின் கப்பல்களை இயக்கிய காப்டன் ஒருவர், முல்லைத்தீவில் தரையிறங்க அனுமதி கோரினார்.

இந்தக் காப்டன், வெளி நபர். புலிகளின் உறுப்பினர் அல்ல. ஆனால், புலிகளின் ஆயுதக் கப்பல்களை இயக்கிய காப்டன் என்ற வகையில், ஆயுதக் கப்பல் ஆபரேஷன்களைப் பற்றி முழுமையாக அறிந்தவர். புலிகளின் ஆயுதக் கப்பல் ஆபரேஷன் எப்படி நடக்கிறது என்ற விஷயம் அவருக்கு நன்றாகவே தெரியும்.

வன்னியில் இருந்த கடற்புலிகளின் தளபதி சூசையிடம் பேசிய வெளிநாட்டுப் பிரிவினர், குறிப்பிட்ட காப்டனை தரையில் இறங்க அனுமதிக்குமாறு கூறினார்கள். ஆனால், வன்னிப் பகுதிக்கு உள்ளேயே சகல வசதிகளுடனும் அவரைத் தங்க வைத்திருந்துவிட்டு, கப்பல் அடுத்த தடவை வரும்போது ஏற்றி விடுமாறும் ஏற்பாடு செய்திருந்தனர். அதாவது, அவர் வன்னிக்கு உள்ளேயே தங்கியிருக்க வேண்டும்.

காப்டனும், சூசையின் பாதுகாப்பில் தரையில் இறக்கி விடப்பட்டார். குறிப்பிட்ட காப்டனின் குடும்பம், அப்போது இந்தியாவில் (திருச்சியில்) வசித்தது.

அதன்பின் அந்தக் காப்டன் வன்னியில் யாருடன் என்ன ஏற்பாடுகளைச் செய்து கொண்டாரோ தெரியவில்லை, வன்னியில் இருந்து, படகு ஒன்றில் ஏறிக் குடும்பத்தினரைப் பார்ப்பதற்கு தமிழ்நாட்டின் வேதாரண்யம் கடற்கரைக்குச் சென்றுவிட்டார். அங்கே வேதாரண்யத்துக்கு அருகிலுள்ள தங்கச்சிமடம் என்ற சிறிய கிராமத்தில் இந்திய உளவுத்துறை றோவிடம் சிக்கிக் கொண்டார்.

அவரிடம் புலிகளின் ஆயுதக் கப்பல் ஆபரேஷன் பற்றிய ரகசியங்களைக் கறந்துவிட்டது றோ. ஆனால், அவரைக் கைது செய்யவில்லை. தமது கண்பார்வையிலேயே அவரை வைத்துக்கொண்ட றோ, திருச்சியில் வசித்த அவரது குடும்பத்தினரைப் பார்க்கவும், அங்கு சில தினங்கள் தங்கியிருக்கவும் விட்டார்கள். பின்னர், மீண்டும் பத்திரமாக வேதாரண்யம் ஊடாக வன்னி செல்லவும் விட்டுவிட்டார்கள்.

றோவைப் பொறுத்தவரை, அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய ரகசியங்களைத் தெரிந்து கொண்டார்கள். அவரைக் கைது செய்வதன்மூலம் புலிகளை உஷார் படுத்த விரும்பவில்லை.

ஈழப் போரின் இறுதி நாட்கள்
உங்களுக்கு உண்மை தெரிய வேண்டுமா?




அவரும், தமிழகத்தில் றோவிடம் சிக்கிக் கொண்ட விஷயம் எதையும் வன்னியில் வாய் திறக்கவில்லை. புலிகளின் அடுத்த கப்பல் வன்னிக்கு அருகே வந்தபோது, அந்தக் காப்டன் அதில் ஏறி தாய்லாந்து சென்றுவிட்டார்.

புலிகளின் கப்பல் காப்டன் தமிழகத்தில் றோவிடம் சிக்கிக் கொண்ட விஷயத்தை, பொட்டு அம்மானின் உளவுத்துறை ஆட்கள் பின்னர் தெரிந்து கொண்டார்கள். தாம் தெரிந்து கொண்ட விஷயத்தை புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுக்கும் அறிவித்து விட்டார் பொட்டு அம்மான்.

அதில் தொடங்கியது உள்வீட்டுச் சண்டை.

கடற்புலிகளின் தளபதி சூசையின் பொறுப்பில் வன்னியில் இறக்கி விடப்பட்ட நபரால் எப்படி இந்தியா சென்று திரும்ப முடிந்தது? சூசைதான் இந்தத் தவறுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று வெளிநாட்டுப் பிரிவினர் இந்தப் பிரச்சினையை புலிகளின் தலைவர் பிரபாகரன் வரை கொண்டு செல்லவே... பிரச்சினை வலுத்துவிட்டது.

வெளிநாட்டுப் பிரிவிடம் இருந்து கப்பல் ஆபரேஷன் கடற்புலிகளிடம் சென்ற 2002ம் ஆண்டுக்கு 2 ஆண்டுகளுக்கு முன், 2000ம் ஆண்டில் தொடங்கியது, இந்த மோதல். இதுதான் கப்பல் ஆபரேஷன் கைமாறியதன் ஆரம்பம்!

இதிலிருந்து வெளிநாட்டுப் பிரிவுக்கும், கடற்புலிகள் தலைமைக்கும் உரசல் இருந்து வந்தது. அப்போதிருந்தே புலிகளின் கடல்

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் (ஆயுதக் கப்பல் ஆபரேஷன் உட்பட) கடற்புலிகளே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கூறத் தொடங்கி விட்டார், கடற்புலிகளின் தளபதி சூசை.

அதன்பின் வேறு சில விஷயங்களும் இயக்கத்துக்குள் நடந்து, இந்தச் சிக்கலைப் பெரிதாக்கின.

புலிகளின் கப்பல்களை இயக்குவதற்கு வெளி மாலுமிகளை நியமிக்காமல், புலிகளின் உறுப்பினர்களையே நியமிப்பது என முடிவு செய்த விஷயத்தை இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் எழுதினோம் அல்லவா? அப்படி அனுப்பப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கடற்புலிகள் பிரிவில் இருந்தே சென்றார்கள் என்றும் எழுதினோம் அல்லவா?

அதனால், புலிகளின் கப்பல் ஒன்று ஆயுதங்களுடன் வெற்றிகரமாக இலங்கைக் கரையை அடையும்போது, அதன் மாலுமிகளில் 80% பேர், கடற்புலிகள் பிரிவில் இருந்து சென்றவர்களாக இருப்பார்கள்.

இந்த இடத்தில்தான், ஈகோ யுத்தம் தொடங்கியது.

கடற்புலிகளின் தளபதி சூசையின் ஆட்கள், வெளிநாடு சென்றதும், புலிகளின் வெளிநாட்டுப் பிரிவின் ஆட்களாக மாறினார்கள். ரகசியம் காக்கப்பட வேண்டிய ஆபரேஷன் என்பதால், அவர்களது நடவடிக்கைகள் இலங்கையில் உள்ள கடற்புலி உறுப்பினர்களுக்குத் தெரியவராது.



திடீரென ஒருநாள், புலிகளின் ஆயுதக் கப்பலை செலுத்தும் மாலுமிகளாக அவர்களை, ஆயுதங்களை இறக்குவதற்கு செல்லும் மற்றைய கடற்புலிகள் (அதாவது கடற்புலிகளாக இருந்து வெளிநாட்டுப் பிரிவினராக மாறியவர்களின் பழைய சகாக்கள்) பார்ப்பார்கள். ரகசியம் காக்கப்பட வேண்டும் என்பதால், அவர்கள், இவர்களுடன் பெரிதாகப் பேசிப் பழக மாட்டார்கள்.

இந்தக் கதைகள் கடற்புலிகளின் தளபதி சூசை வரை செல்லும்.

கடற்புலிகளில் திறமைசாலிகள் சிலர், "வெளிநாட்டுப் பிரிவுக்குப் போக விரும்புகிறேன்" என்று புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுக்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பத் தொடங்க, பொறியாக இருந்த முறுகல், தீயாகியது.

இந்த விவகாரம் பெரிதாகவே, புலிகளின் தலைவர் பிரபாகரன் கண்டிப்பான உத்தரவு ஒன்றை பிறப்பித்தார். "கரையில் நடப்பவை கப்பல் ஆட்களுக்கு தெரிய வேண்டியதில்லை. அதேபோல கப்பலில் நடப்பவை கரையில் உள்ள ஆட்களுக்கு தெரியக்கூடாது" என்பதே அந்த உத்தரவு.

சில நாட்களுக்கு இந்த உத்தரவு நேர்த்தியாக கடைப்பிடிக்கப்பட்டது. நாளடைவில், மீண்டும் பழைய உரசல்கள் தொடங்கி விட்டன.

அதையடுத்தே, ஆயுதக் கப்பல் ஆபரேஷனை தமது பிரிவின் வசம் எடுத்துக் கொள்ளும் முயற்சியில் இறங்கினார் கடற்புலிகளின் தளபதி சூசை. சூசையின் முயற்சி வெற்றி பெற்றது. 2002ம் ஆண்டு சமாதான காலத்தோடு, ஆயுதக் கப்பல் ஆபரேஷன், வெளிநாட்டுப் பிரிவிடம் இருந்து கடற்புலிகளுக்கு கைமாறியது.

அதுவரை வெளிநாடுகளில் இருந்து இயங்கிய வெளிநாட்டுப் பிரிவின் தலைமை, வன்னியில் இருந்து இயங்கிய காஸ்ட்ரோவிடம் (மணிவண்ணன்) கொடுக்கப்பட்டது. கப்பலில் ஏற்றப்பட வேண்டிய ஆயுதங்களை வாங்கும் பொறுப்பும் காஸ்ட்ரோவிடம் கொடுக்கப்பட்டது.

2002ம் ஆண்டுவரை புலிகளுக்காக ஆயுதங்களை வாங்கியவர்களை நீக்கிவிட்டு, தமது ஆட்களை நியமித்துக் கொண்டார் காஸ்ட்ரோ.

அதற்கு முன்னர் புலிகள் இயக்கத்துக்காகச் செயற்பட்டுக் கொண்டிருந்த பலர் ஒதுங்கிக் கொண்டனர், அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டனர். காஸ்ட்ரோ வன்னியில் இருந்து தமது உறவினரான நெடியவனை வெளிநாட்டுப் பிரிவை மேற்பார்வை பார்ப்பதற்காக நோர்வே நாட்டுக்கு அனுப்பி வைத்தார்.

இந்தப் புதிய மாற்றங்களால் எல்லாமே தலைகீழாக மாறின. புலிகளின் ஆயுதக் கப்பல்கள் ஒன்றன்பின் ஒன்றாக, மில்லியன் கணக்கான டொலர் பெறுமதியுள்ள ஆயுதங்களுடன் கடலடியே மூழ்கின.

யுத்தத்தில் புலிகள் இயக்கம் ஏன் தோல்வியைத் தழுவ நேர்ந்தது என்ற கேள்விக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பிரதான காரணங்களில் ஒன்று, ஆயுத சப்ளை இல்லை என்பதே.

2002ம் ஆண்டு வரை ஆயுதங்கள் எந்தத் தடையுமின்றி கப்பல் கப்பலாக வன்னிக்கு போய்க்கொண்டிருந்தன. புலிகள் ராணுவத்தை தாக்கினார்கள். பல வெற்றிகள் கிடைத்தன. 2002ம் ஆண்டின்பின் ஆயுதம் வாங்குவது, மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவை கைமாறின. கப்பல்கள் அடிபட்டன. ஆயுத சப்ளை வெட்டுப்பட்டது.

கையிருப்பில் இருந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டு தற்காப்பு யுத்தம் புரிந்தபடி புலிகள் பின்வாங்கத் தொடங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதன் பின் ஏற்பட்ட முடிவு அனைவருக்கும் தெரிந்ததுதான்.

இதுவரை படித்து வந்த உங்களுக்கு முக்கியமான கேள்வி ஒன்று எழலாம்.

இறுதி யுத்தத்தில் ஆயுத சப்ளை தடங்கல் இல்லாமல் கிடைத்தால் தான் வெற்றி பெறலாம் என்ற நிலையில் இருந்த புலிகள் இயக்கம், கடல் மார்க்கம் சறுக்கினால் என்ன செய்வது என்பதை முதலிலேயே யோசிக்கவில்லையா?

முதலாவது ஏற்பாடு சறுக்கினால், அடுத்து என்ன செய்வது என்று மற்றொரு திட்டம் இருக்க வேண்டுமே? (ஆங்கிலத்தில் அப்படியான மாற்றுத் திட்டத்தை Plan-B சொல்வார்கள்)

Plan-B என்று எதுவுமே புலிகளிடம் கிடையாதா?

ஆம். புலிகளிடம் ஒரு Plan-B இருந்தது.

இது பற்றிய விபரங்கள், புலிகள் இயக்கத்தில் இருந்த பலருக்கேகூடத் தெரிந்திராது. காரணம் புலிகள் இயக்கத்தின் இந்த Plan-B, புலிகளின் உளவுப் பிரிவின் கைகளில் இருந்தது. மொத்தம் 5 பேர்தான் இதில் தொடர்பு பட்டிருந்தனர். அதில் 2 பேர் இன்னமும் வெளிநாடுகளில் உயிருடன் உள்ளனர்.

ஆயுத சப்ளை முழுமையாக கே.பி. குரூப்பிடம் இருந்து கைமாறியபோது, ஆயுத சப்ளைக்கு நியமிக்கப்பட்ட புதிய ஆட்களால் உண்மையாகவே ஆயுதங்களை கொண்டுவர முடியுமா என்ற சந்தேகத்தை முதலில் எழுப்பியவர் யார் தெரியுமா?

புலிகளின் உளவுத்துறையின் தலைவர் பொட்டு அம்மான்.

ஏற்கனவே ஒழுங்காக நடந்து கொண்டிருந்த ஆயுத சப்ளை புதியவர்களின் கைகளுக்குப் போனபின், முன்பு போல துல்லியமாக எல்லாமே நடக்கும் என்பதை அவர் ஆரம்பத்தில் இருந்தே நம்பவில்லை.


ஒருவேளை கடல் மார்க்கமாக ஆயுதங்கள் வந்து சேர்வதில் சிக்கல் ஏற்பட்டால், அது புலிகளின் ஆயுத பலத்தைப் பாதிக்கும் என்பதை அவர் மிகச் சரியாகக் கணித்திருந்தார் (அவரது கணிப்பு இறுதியில் சரியாகத்தான் போனது).

எனவே அவர் தனது (உளவுத்) துறை சார்ந்த நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தார். கடல் மார்க்கமாக ஆயுதங்கள் வந்து சேராவிட்டால் வேறு மார்க்கமாக தமது ஆட்களை வைத்து ஆயுதங்களைக் கொண்டுவர முடியுமா எனப் பார்க்கத் தொடங்கினார்.

அதையடுத்து பொட்டு அம்மான் தமது ஆட்களை வைத்து டெவலப் செய்ததுதான், மாற்றுத்திட்டம். Plan-B.

கப்பல் மூலமாக ஆயுதம் இறக்கும் விவகாரத்தை முழுமையாக கடற்புலிகளின் தலைவர் சூசையிடம் விட்டு விட்டு, விமானம் மூலம் ஆயுதங்களை இறக்க முயற்சி செய்தார் பொட்டு அம்மான்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡



தாய்லாந்தில் 2008ம் ஆண்டு கைது செய்யப்பட்ட சர்வதேச ஆயுத வியாபாரி விக்டோர் போட்

மொத்தம் 5 பேர் அடங்கிய டீம் அது. அதில் இருந்த இருவர், 2006ல் வெளிநாடுகளுக்கு வேறு பெயர்களில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

வெளிநாடுகளில் புலிகளின் அன்டர் கவர் ஆபரேடிவ்ஸ்ஸாக இயங்கிய அந்த இருவரையும், புலம்பெயர் தமிழர்களுக்கு 'வேறு பெயரில்தான்' தெரியும் என்பதால், அவர்களது பெயர்களை விட்டுவிடலாம். நாம் குறிப்பிடும் 5 பேரில் மூன்றாவது நபர், பொட்டு அம்மான். மற்ற இருவரும் வன்னியில் இருந்து இந்த ஆபரேஷனைக் கவனித்தவர்கள். அவர்கள், ஞானவேல், தமிழ் குமரன்.

2006ம் ஆண்டில் இருந்து தொடங்கிய இந்த ஆபரேஷனில், விமான மூலம் ஆயுத இறக்குமதிக்கான தொடர்புகளை மேற்கொள்ளவே, 2 வருடங்கள் பிடித்தன.

2008ம் ஆண்டு ஆபரேஷன் செயல்பட தயாராகியது. இதற்கிடையே யுத்தம், வன்னியில் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது.

வெளிநாட்டில் இயங்கிய இருவரும் பிடித்த தொடர்புகள் அனைத்துமே உக்ரேன் நாட்டில் இருந்தன. அங்கிருந்த ஆயுத வியாபாரி ஒருவரும், அவர் மூலமான அறிமுகமான சரக்கு (கார்கோ) விமான நிறுவனம் ஒன்றும்தான் இவர்களது தொடர்புகள். குறிப்பிட்ட கார்கோ விமான நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், ஆபிரிக்க நாடுகள் சிலவற்றுக்கு ஆயுத சப்ளை செய்த ஆட்கள்.

சர்வதேச ஆயுத வியாபாரி விக்டோர் போட் (Viktor Bout) என்பவரின் பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். சோவியத் யூனியன் உடைந்து, உக்ரேன் உட்பட வெவ்வேறு நாடுகள் உருவாகியபோது, பழைய சோவியத் யூனியனின் விமானங்கள் சிலவற்றை உக்ரேனில் இருந்து 'அடித்துக் கொண்டு' போனவர் இவர். பின்னர் அந்த விமானங்களை வைத்தே ஆயுதக் கடத்தல் தொழிலைச் செய்தார்.

ஒரு வகையில் விக்டோர் போட்டுடன் தொடர்புடையதுதான், பொட்டு அம்மானின் ஆட்கள் டீல் செய்த கார்கோ விமான நிறுவனம். (2008ம் ஆண்டு, மார்ச் 6ம் திகதி தாய்லாந்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட சர்வதேச ஆயுத வியாபாரி விக்டோர் போட், அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டு, ஆயுதக் கடத்தல் செய்த குற்றத்துக்காக 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு, தற்போது அமெரிக்காவின் யு.எஸ்.பி. மரியோன் (USP Marion - The United States Penitentiary, Marion) சிறையில் உள்ளார்).

எல்லாம் தயார் என்ற விபரம் உக்ரேனில் இருந்து வன்னிக்கு அறிவிக்கப்பட்டது. ஆயுதங்களுக்கான பண ஏற்பாடுகளை ஞானவேல் கவனித்துக் கொண்டார்.

ஆரம்பத்தில் தமிழ் குமரன், உக்ரேனில் இருந்தவர்களுக்கும், பொட்டு அம்மானுக்கும் இடையே வன்னியில் தொடர்பாளராக இருந்தார். ஏற்பாடுகள் அனைத்தும் ரெடி என்ற நிலையில், உக்ரேனில் இருந்த இருவருடன் பொட்டு அம்மானே நேரில் டீல் பண்ண தொடங்கினார்.

உக்ரேனில் இவர்கள் டீல் பண்ணிய ஆயுத வியாபாரிக்கு 'சுற்றிவளைத்து' இலங்கையின் உளவுத் துறையுடன் தொடர்புகள் இருந்தன என்பது, ஆயுத டீலில் புதிதாக இறங்கியிருந்த இவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை.

முதலாவது விமான லோட் ஆயுதங்களுக்கான பணம் உக்ரேனில் வைத்து செட்டில் செய்யப்பட்டது. முதல் ட்ரிப்புக்கான திகதியும் குறிக்கப்பட்டது.

குறிப்பிட்ட திகதி ஒன்றில், இரணைமடுவில் இருந்த புலிகளின் விமான ஓடுதளத்தில் உக்ரேன் விமானம் இறங்குவதற்கான ஏற்பாடுகளை ஞானவேல் கவனித்தார். அன்றைய தினத்தில் விமானத்தில் ஆயுதங்கள் வருகின்றன என்ற விபரம், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு பொட்டு அம்மானால் சொல்லப்பட்டது.

கப்பலில் ஆயுதங்களை இறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சூசைக்கு இந்த விபரங்கள் ஏதும் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. (அந்த நேரத்தில் அவரது கப்பல்கள் பல அடிபட்டிருந்தன)

அன்றைய தினத்தில், உக்ரேனில் உள்ள Simferopol (IATA code: SIP) என்ற சிறிய எயார்போர்ட்டில் இருந்து இவர்கள் ஏற்பாடு செய்த கார்கோ விமானம் புறப்பட்டதை, பொட்டு அம்மானால் அனுப்பி வைக்கப்பட்ட இருவரும் பார்த்தார்கள். 1930களில் அமைக்கப்பட்ட பழைய விமான நிலையம் அது.

அதன் கார்கோ டேர்மினலில் இருந்து புறப்பட்ட விமானத்துக்குள் நிஜமாக என்ன ஏற்றப்பட்டிருந்தது என்பதை அருகில் நெருங்கி செக் பண்ண பொட்டு அம்மானின் ஆட்கள் அனுமதிக்கப்படவில்லை.

Simferopol விமான நிலையத்தில் வைத்து, இரணைமடுவுக்கு செல்வதற்கான பிளைட் பிளான் ஒன்று இவர்களுக்கு காட்டப்பட்டது. அங்கிருந்து சுமார் 6450 கி.மீ. தொலைவில் உள்ளது இரணைமடு.

இரணைமடுவில், அதிகாலை நேரத்தில் விமானம் வந்து சேரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், விடிந்த பின்னரும் விமானம் வந்து சேரவில்லை. வன்னியில் இருந்து உக்ரேனுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. உக்ரேனில் இருந்தவர்கள், ஆயுத வியாபாரியை தொடர்பு கொண்டார்கள். விமானத்தைச் செலுத்திய விமானியைத் தொடர்பு கொண்டபின் விபரம் தெரிவிப்பதாக கூறினார் ஆயுத வியாபாரி.

சில மணி நேரத்தின்பின் ஆயுத வியாபாரி விசித்திரமான தகவல் ஒன்றை கொடுத்தார். "விமானம் தரையிறங்கி விட்டது. ஆனால், தவறான இடத்தில் இறங்கியுள்ளது. அங்கே சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளார் விமானி"

விமானம் தரையிறங்கியதாக கூறப்பட்ட தவறான இடம் எதுவென்று தெரிந்தால் ஆச்சரியத்தின் உச்சிக்கே செல்வீர்கள்.

அது, இந்தியாவில், மும்பைக்கு அருகில் உள்ள ரத்னகிரி விமான நிலையம்! (Ratnagiri Airport - IATA code RTC)

2008ல் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட காலத்துக்கு சில வாரங்களின் பின் மகாராஷ்டிரா மாநில பொதுப்பணித் துறையிடம் இருந்து, இந்திய கடலோரப் பாதுகாப்பு படையிடம் ஒப்படைக்கப்பட்ட விமான நிலையம் அது.

புலிகளுக்கு ஆயுதம் ஏற்றிச் சென்றதாக கூறப்பட்ட உக்ரேன் விமானம் ஏன், எதற்கு, எப்படி அங்கே தரையிறங்கியது?

அதை, அடுத்த அத்தியாயத்தில் சொல்கிறோம்! (தொடரும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# உலகின் முதல் பிரமாண்ட ரயில் கொள்ளை!

**கடந்த அத்தியாயத்தின் முன்கதைச் சுருக்கம்**

1854ம் ஆண்டு, பிரிட்டனில் ரயில் கொள்ளை ஒன்று திட்டமிடப்படுகிறது. கொள்ளையிடப்போகும் பொருள் தங்கப் பாளங்கள். அதுவரை அப்படியான ஒரு கொள்ளை திட்டமிடப்பட்டிருக்கவில்லை. கொள்ளையைத் திட்டமிட்டவர் எட்வார்ட். தங்கப் பாளங்கள், ரயிலில் ஒரு இரும்புப் பெட்டகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இரும்புப் பெட்டகத்தைத் திறக்க 4 சாவிகள் தேவை.

ஜூலை மாத நடுப் பகுதியில், எட்வார்ட்டுக்கு தேவையான நான்கு சாவிகளில் மூன்று சாவிகளின் இருப்பிடம் தெரிந்து விட்டிருந்தது. இரண்டு சாவிகள் ரயில்வே அலுவலகத்தில் சுவரிலுள்ள அலுமாரியில் தொங்குகின்றன. மூன்றாவது சாவி வங்கி அதிகாரி ஹென்ரியின் கழுத்தில் உள்ள செயினில், தொங்குகிறது.

நான்காவது சாவி?

தங்கப் பாளங்களை அனுப்பும் வங்கியின்உரிமையாளர்களில் ஒருவரான மிஸ்டர் ட்ரென்ட்டிடம் அந்தச் சாவி இருக்கிறது என்பது தெரியும்.

ஆனால் அவர் எங்கே வைத்திருக்கிறார் என்பது தெரியாது. அது தெரிய வேண்டும். அவரது வங்கி ஊழியர் ஒருவரிடம் பேசியபோது, மிஸ்டர் ட்ரென்ட் வங்கியில் தமது அறையை மூடிக்கொண்டு சிகரட் குடிக்கிறார் என்று ஊழியர்கள் மத்தியில் பேச்சு இருப்பதை எட்வார்ட் தெரிந்து கொள்கிறார். அதன்பின் நடந்ததை இந்த அத்தியாயத்தில் படியுங்கள்.

## அத்தியாயம் ஆறு
### மிஸ்டர் ட்ரென்ட் இரவில் போவது எங்கே?

ரயில் கொள்ளைக்குத் தேவையான 4வது சாவியை வைத்திருக்கும் வங்கி உரிமையாளர் மிஸ்டர் ட்ரென்ட், தனது அறையை மூடிக் கொண்டு ரகசியமாக சிகரெட் குடிப்பதாக வதந்தி உள்ளது என்று ரிவார்ஸ் கூறிய கூற்றில், சாவி பற்றி ஒரு க்ளூ கிடைத்து விட்டது எட்வார்ட்டுக்கு என்று கடந்த அத்தியாயத்தை முடித்திருந்தோம் அல்லவா? அது என்னவென்றால், மிஸ்டர் ட்ரென்ட் சிகரட் குடிக்கிறார் என்பதல்ல, ரகசியமாக வேறு ஏதோ செய்கிறார் என்பதுதான்.

காரணம், அவர் சிகரெட் குடிப்பதில்லை என்பதை ஏற்கனவே பல நாள் அவரைப் பின்தொடர்ந்து தெரிந்து கொண்டிருந்தார் எட்வார்ட்.

வங்கியின் உரிமையாளர்களில் ஒருவரான ட்ரென்ட், தங்கப் பாளங்கள் வைக்கப்படும் இரும்புப் பெட்டியின் சாவியை வங்கியில் வைப்பதில்லை வீட்டிலிருந்து கொண்டு வருகிறார் என்று தெரியவந்த உடனேயே அவரது நடமாட்டங்கள் பற்றி ஆராயத் தொடங்கினார் எட்வார்ட். இதற்காக சுமார் ஒரு வார காலம் ட்ரென்டை பின்தொடர்ந்தார். அவரது வீட்டையும் வெளியேயிருந்து கண்காணித்தார். ஒரு வார காலத்தில் ட்ரென்ட் பற்றிய பல தகவல்கள் எட்வார்ட்டின் கைகளில் இருந்தன.

ட்ரென்ட் வெளிப் பார்வைக்கு ஒரு ஜென்டில்மேன் போல தெரிந்தார் என்றால், அவரது நடவடிக்கைகளை பார்த்தால், நிஜமாகவே ஜென்டில்மேனாகவே இருந்தார். எப்போதாவது இருந்துவிட்டு சிறிதளவு குடிப்பார். ஒருபோதும் புகைப்பதில்லை. அந்த நாளைய பிரிட்டிஷ் பிரபுக்களைப் போல கார்ட்ஸ் விளையாடுவதிலும் ஆர்வம் இல்லாத ஆளாக இருந்தார்.

அவருக்கு ஐந்து குழந்தைகள் இருந்தனர். முதல் மனைவி இறந்து போக, இரண்டாவது மனைவியாக எமிலியை திருமணம் செய்திருந்தார். இருவருக்கும் இடையே கிட்டத்தட்ட முப்பது வயது வித்தியாசம்.

ட்ரென்டின் குடும்பம் இலக்கம் 17, புரொக் வீதி என்ற முகவரியில் வசித்தது. மிகப் பெரிய மாளிகை அது. மொத்தம் 23 அறைகள். வேலையாட்களின் குடியிருப்புகள் இதில் சேர்த்தில்லை. மாளிகையில் மொத்தம் 12 வேலையாட்கள் இருந்தார்கள். இந்த 12 பேரில் யாருமே புதிதாக வேலைக்கு சேர்ந்தவர்கள் இல்லை. பல ஆண்டுகளாகவே வேலை செய்பவர்கள். மிகவும் விசுவாசமானவர்கள். அவர்களுக்கு பணம் கொடுத்து எதையும் சாதிக்க முடியாது.

இரண்டு வேட்டை நாய்கள் இருந்தன. நாய்களைக் கவனித்துக் கொள்வதற்கென்றே ஒரு வேலையாள். காலையில் 7 மணிக்கும் இரவு எட்டேமுக்கால் மணிக்கும் இரு வேட்டை நாய்களும் வெளியே அழைத்துச் செல்லப்படுவது நேரம் தவறாமல் நடைபெறும் வாடிக்கை. ட்ரென்ட்டின் நடமாட்டங்களும் அப்படித்தான். எதிலும் ஒரு ஒழுங்கும், நேரம் தவறாமையும் இருந்தன.



தினமும் எழுவது காலை 7 மணிக்கு. 7.30க்கு காலை உணவு. வங்கிக்கு கிளம்புவது சரியாக 8.10க்கு. வங்கியை அடைவது 8.29க்கு. சரியாக 1 மணிக்கு சிம்சன்ஸ் என்ற உயர்மட்ட உணவு விடுதியில் மதிய உணவு. உணவு உண்பதற்கு 1 மணிநேரம் எடுத்துக் கொண்டு, சரியாக 2 மணிக்கு மறுபடியும் வங்கிக்கு திரும்பி விடுவார்.

"இப்படி பக்காவாக எல்லாவற்றையும் வெளிப்படையாக செய்யும் நபர், வங்கியில் தனது அறையை பூட்டிக்கொண்டு என்ன செய்கிறார்?" என்று யோசித்தார் எட்வார்ட்.

அந்த ரகசிய நடவடிக்கை அவருக்கு கொடுத்த க்ளூ, "அப்படியானால், இவரிடமும் ஏதோ ஒரு ரகசிய செயற்பாடு உள்ளது. அதைத் தெரிந்து கொண்டால் அவரை அணுகி விடலாம்"

மிஸ்டர் ட்ரென்ட் வேலை முடிந்து வங்கியில் இருந்து புறப்படுவது இரவு 7 மணிக்கு. 7.20க்குள் வீட்டை அடைந்துவிடுவார். அதன் பின்னர் எங்கும் செல்வதில்லை.

வாரத்தில் இரண்டு நாட்கள் மனைவியுடன் வெளியே சென்று வருவார். மாதத்தில் ஒரு நாள் வெளியேயிருந்து நண்பர்களை அழைத்து விருந்து கொடுப்பார்.

அவரது மாளிகை, வீதியில் இருந்து உள்வாங்கி அமைந்திருந்த காரணத்தால், காய்கறி விற்பவர்கள், பால் விற்பவர்கள் என்று யாரும் அணுக முடியாது. வீட்டுக்கு வாட்ச்மேன் இருவர் இருந்தார்கள். அவர்கள் வீட்டைச் சுற்றி எப்போதும் நடந்து கொண்டு இருப்பார்கள்.

மாளிகை அமைந்துள்ள புரொக் வீதி உயர்மட்டப் பிரபுக்கள், அரசு உயரதிகாரிகள் போன்ற வி.ஐ.பி.கள் வசித்த இடம் என்பதால் 24 மணி நேரமும் போலீஸ் ரோந்து போடப்பட்டிருந்தது. பகல் ஷிஃப்ட்டில் வேலை செய்யும் போலீஸ்காரரின் பெயர், லூவிஸ். இவர் ஒவ்வொரு 17வது நிமிடமும் ட்ரென்ட்டின் வீட்டை கடந்து செல்கிறார். நள்ளிரவுக்கு ஷிஃப்ட் மாறுகிறது. இரவு ரோந்து செய்பவரது பெயர் ஹலொல். அவர் சரியாக ஒவ்வொரு 16வது நிமிடமும் ட்ரென்ட்டின் வீட்டு வாயிலைக் கடந்து செல்கிறார்.

இப்படியாக ட்ரென்ட் பற்றி துல்லியமாக ஒவ்வொரு தகவலும் சேகரிக்கப்பட்டன. கிடைத்த தகவல்கள் எல்லாமே ஒன்று சேர்ந்து எட்வார்ட்டுக்கு சொன்ன சேதி ஒன்றுதான்.

அது ட்ரென்டையோ அவரது வீட்டையே இலகுவில் அணுகுவது முடியவே முடியாது. வீட்டுக்குள் நுழைந்து சாவியைத் தேடுவதும் சுலபமான காரியமல்ல. என்ன செய்யலாம் என்று எட்வார்ட் தலையை உடைத்து யோசித்துப் பார்த்தார். எந்தவொரு பாதையும் தோன்றவில்லை.

இப்படி இருக்கும்போது, ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி 1854ம் ஆண்டு ட்ரென்ட் முதல் முறையாக தனது வழமையான நடவடிக்கையை மாற்றிக் கொண்டதை எட்வார்ட் கவனித்தார்.

வழமைபோல இரவு 7.20க்கு வங்கியிலிருந்து திரும்பிய ட்ரென்ட், மற்ற நாட்களைப் போல வீட்டுக்கு உள்ளே செல்லவில்லை. மாறாக வீட்டின் பின்புறம் சென்றார். வீட்டுக்கு பின்புறம், வேட்டை நாய்கள் கட்டப்பட்டுள்ள கூண்டு இருந்தது.

அங்கிருந்த இரு நாய்களில் ஒன்றை அதன் கழுத்துப் பட்டியில் பிடித்தபடி மீண்டும் குதிரை வண்டியில் போய் ஏறிக் கொண்டார். குதிரை வண்டி மீண்டும் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே சென்றது.

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

"ஆகா! இதோ எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப் போகிறார் ட்ரென்ட்" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டார் வீதியிலிருந்து இதை கவனித்துக் கொண்டிருந்த எட்வார்ட்.


இரவு நேரத்தில் வேட்டை நாயுடன் குதிரை வண்டியில் ட்ரென்ட் புறப்பட்டுச் செல்கிறார் என்றவுடன் அவர் எங்கே செல்லப் போகிறார் என்பதை ஊகித்து விட்டார் எட்வார்ட். ஆம்.. வேட்டையாடும் பந்தயம்.

பிரிட்டனில் அந்த நாட்களில் பணக்காரர்கள் சிலர் ரகசியமாக விளையாடும் விளையாட்டு அது. ரகசியமாக என்று சொல்லப்படுவதன் காரணம், அது சட்டவிரோதமான விளையாட்டு.

லண்டன் நகரில் மட்டும் மூன்று இடங்களில் இரவு நேரங்களில் குறிப்பிட்ட சில தினங்களில் இந்த வேட்டையாடும் பந்தயங்கள் நடைபெற்றன. பெரிய மனிதர்கள் தாங்கள் வளர்க்கும் வேட்டை நாய்களை அங்கே கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு நாயின் மீதும் பந்தயம் கட்ட பலர் தயாராக வருவார்கள். பந்தயம் என்ன?

3 நிமிடங்களுக்குள் 20 எலிகளைக் கொல்லவேண்டும். எந்த நாய் 20 எலிகளை குறைந்த நேரத்தில் கடித்துக் கொல்கிறதோ அந்த நாயின் உரிமையாளர் வெற்றி பெற்றவராக கருதப்படுவார். இந்த பந்தயத்தில் கிடைக்கும் பணம் ஒரு பொருட்டல்ல. ஆனால் பணக்காரர்கள் மத்தியில் வெற்றி பெறும் வேட்டை நாயின் உரிமையாளருக்கு ஒரு அந்தஸ்து கிடைக்கும்.

ட்ரென்ட் எந்த இடத்துக்கு தனது வேட்டை நாயுடன் செல்கிறார் என்பதை குதிரை வண்டியைப் பின்தொடர்ந்துபோய் தெரிந்து கொண்டார் எட்வார்ட். ஒரு வாரத்தின் பின்னர் மீண்டும் ஒரு நாள் இரவு வங்கியிலிருந்து வீடு திரும்பியதும், தனது



நாயுடன் குதிரை வண்டியில் புறப்பட்டார் ட்ரென்ட்.

மங்கலான வெளிச்சம் உடைய பண்ணை வீடு போன்ற ஒரு கட்டடம் அது. கட்டடத்துக்கு வெளியே பல குதிரை வண்டிகள் நின்றன. அவற்றைப் பார்க்கும்போது வசதியான நிலையிலுள்ள பலர் அங்கு வந்துள்ளார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

உள்ளே ஒரே இரைச்சல். எல்லோரது கைகளிலும் பணம் இருந்தது. ஒவ்வொருவரும் எந்தெந்த வேட்டை நாயின் மீது எவ்வளவு பணம் கட்டுவது என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். வழமையாக கட்டப்படும் பந்தயத் தொகை 10 பவுண்ட்ஸ். அடிக்கடி வெற்றிபெறும் வேட்டை நாய் என்று தெரிந்தால் சில சமயங்களில் யாராவது 20 பவுண்ட்ஸ் பந்தயம் கட்டுவார்கள்.

20 பவுண்ட்ஸ் கட்டப்பட்டால் அந்த வேட்டை நாயின் அந்தஸ்து ஒரேயடியாக உயர்ந்துவிடும். நாயின் உரிமையாளருக்கும் கௌரவம்.

ட்ரென்ட் தனது நாயை கையில் பற்றியிருந்தார். அடுத்ததாக அவருடைய வேட்டை நாயின் முறை. ஏழெட்டுப்பேர் 10 பவுண்ட்ஸ் பந்தயம் ஏற்கனவே கட்டிவிட்டுக் காத்திருந்தார்கள். நாய்க்கு எதிரே இருந்த மரத் தடுப்பில் 20 எலிகள் போடப்பட்டன.

"இதோ பந்தயம் ஆரம்பிக்கப் போகின்றது. வேறு யாராவது பணம் கட்ட போகிறீர்களா? ஒரு முறை, இரண்டு முறை, மூன்று முறை" என்று கூச்சலிட்டார் பந்தயத்தை நடத்துபவர்.

"ஆம். நான் பணம் கட்டவேண்டும்" அறையின் ஒரு கோடியில் இருந்து ஒரு குரல் வந்தது. அங்கே உயரமான ஒருவர் நின்றிருந்தார்.


"சீக்கிரம். சீக்கிரம். எவ்வளவு பணம்? பத்து பவுண்ட்ஸ்தானே?"

"இல்லை. நூறு பவுண்ட்ஸ்" என்றார் எட்வார்ட்.

திடீரென அந்த இடத்தில் மகா அமைதி. 100 பவுண்ட்ஸ் பந்தயம் கட்டுகிறாரா ஒருவர்? அப்படியானால் அந்த வேட்டை நாய் மிக மிக திறமையானதாக இருக்க வேண்டும். அறைக்குள் நின்றவர்கள் திகைத்துப் போய் "நூறு பவுண்ட்ஸாம்" என்று கிசுகிசுத்துக் கொண்டார்கள். ட்ரென்ட்டும் திகைத்துத்தான் போனார். தன்னுடைய வேட்டை நாயின் மேல் நம்பிக்கை வைத்து 100 பவுண்ட்ஸ் கட்டும் ஆள் யார் என்று பார்த்தார். எட்வார்ட் அலட்சியமாக 100 பவுண்ட்ஸை எடுத்து பந்தயத்தை நடத்துபவரிடம் நீட்டினார்.

ட்ரென்ட்டின் வேட்டை நாய், எலிகள் இருந்த மரத் தடுப்பில் இறக்கி விடப்பட்டது. மூன்று நிமிடங்கள் முடிந்தபோது அது 17 எலிகளைத்தான் கொல்ல முடிந்திருந்தது. மீதி 3 எலிகள் இன்னமும் உயிருடன் ஓடிக்கொண்டிருந்தன.

பந்தயம் நடைபெறும் இடத்துக்கு கீழ் மாடியில் சிறிதாக ஒரு பார் இருந்தது. தனது வேட்டை நாயுடன் ட்ரென்ட் அங்கே போனபோது 100 பவுண்ட்ஸ் பணம் கட்டிய மனிதர் அங்கே இருப்பதை கவனித்தார். மரியாதை நிமித்தம் பேச்சுக் கொடுத்தார். "நீங்கள் எனது வேட்டைநாய் மீது நம்பிக்கை வைத்து 100 பவுண்ட்ஸ் பந்தயம் கட்டியதற்கு நன்றி. என்னவோ தெரியவில்லை. இன்று அது சரியாகவே தனது





திறமையைக் காட்டவில்லை. உங்களுக்கும் 100 பவுண்ட்ஸ் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது.

"100 பவுண்ட்ஸ்தானே.. அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. இந்த விளையாட்டுக்காக எவ்வளவு பணமும் பந்தயம் கட்டலாம்" என்றார் எட்வார்ட்.

இப்போதுதான் அந்த மனிதரை ஏற இறங்கப் பார்த்தார் ட்ரென்ட். மிகவும் விலையுயர்ந்த ஆடைகளை அணிந்திருந்தார் அவர். பெரிய பணக்காரராக இருக்க வேண்டும். அதுதான் 100 பவுண்ட்ஸ் பந்தயம் கட்டுவதை மிக அலட்சியமாக சொல்கிறார். (1800களில் 100 பவுண்ட்ஸ் பணம் பெரிய தொகை. வேட்டை நாயின் விலையே 20 பவுண்ட்ஸ்தான்)

"எனக்கும் வேட்டை நாய் வளர்க்க விருப்பம். ஆனால் நான் வியாபாரம் காரணமாக அடிக்கடி வெளிநாடு செல்வதால் வேட்டை நாய்களை கவனிக்க முடியாது என்பதால் வளர்ப்பதில்லை. பந்தயம் மட்டும் கட்டுவேன். மாதம் 500 பவுண்ட்ஸ் வரை பந்தயம் கட்டுவேன்" என்றார் புதிய மனிதர்.

"வியாபாரத்துக்காக வெளிநாடு செல்லும்போது வேட்டை நாய்களை உங்கள் மனைவி பார்த்துக் கொள்ள மாட்டாரா?"

"எனக்கு இதுவரை காலமும் முக்கியமாக இருந்தது எனது வியாபாரம்தான். அதனால் நான் இன்னமும் திருமணம் கூட செய்து கொள்ளவில்லை. இப்போது ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கிறேன். இனித்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும்" தனக்கு இன்னமும் திருமணமாகவில்லை என்பதை காஷுவலாகச் சொன்னார் எட்வார்ட்.

இப்படி எட்வார்ட் கூறியபோது, ட்ரென்ட்டின் முகம் மாறியது. அவர் எட்வார்ட்டை மேலும் கீழுமாகப் பார்த்தார். "உங்களுக்கு நேரம் கிடைக்கும்போது எனது மாளிகைக்கு ஒரு முறை வரலாமே?" என்றார்.

ட்ரென்ட்டுக்கு 29 வயதில் ஒரு மகள் இருந்தார். இன்னமும் திருமணமாகாத மகள்!

ட்ரென்ட்டின் மாளிகைக்குள் நுழைவதற்கு இப்படியான ஒரு அழைப்பைத்தானே எட்வார்ட் எதிர்பார்த்தார். இதோ, கிடைத்துவிட்டது அழைப்பு! (...தொடரும்)

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# ஈராக் யுத்த...
# மர்மமான ...

ஐ.எஸ். இயக்கத்தினர் இந்த வாரம் ஈராக்கின் மத்திய பகுதியிலுள்ள ரமாடி நகரைச் சுற்றியுள்ள 3 கிராமங்களை கைப்பற்றியுள்ளனர். ஈராக்கில் இன்றைய திகதியில் அதிகபட்ச அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நகரம், ரமாடிதான். தலைநகர் பாக்தாத்தில் இருந்து 115 கி.மீ. மேற்கேயுள்ளது இந்த நகரம். ஆனால், இங்கிருந்து 180 கி.மீ. தொலைவில் திக்ரித் நகரில் நிலைமை தலைகீழாக உள்ளது

ஈராக்கிய ராணுவம், ஈரானிய அதிரடிப் படையினரின் 'வெளியே சொல்லப்படாத' உதவியுடன் திக்ரித் நகரில் தாக்குதல் நடத்துகிறது. அந்த யுத்தத்தின் ஈராக்கிய ராணுவத்தின் கைதான் ஓங்கியிருக்கிறது.

ஐ.எஸ். இயக்கம் திக்ரித் நகரை இழந்தால், அந்த இயக்கத்துக்கு விழும் மிகப் பெரிய அடியாகக் கருதப்படும்.

திக்ரித்தில் ஐ.எஸ். இயக்கம் தத்தளிப்பதால், அது கொடுத்த இமேஜில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்கு ஐ.எஸ். இயக்கத்துக்கு பெரிய வெற்றி ஒன்று அவசியமாக இருந்தது. இதனால், ஈராக்கின் முக்கிய நகரங்களில் ஒன்றை அவர்கள் கைப்பற்ற முயற்சிக்கலாம் என ஊகிக்கப்பட்டது.

திக்ரித் பின்னடைவு இமேஜில் இருந்து விடுபட ஐ.எஸ். இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள நகரம்தான், ரமாடி.

அமெரிக்க ராணுவம் ஈராக்கில் (அதிகாரபூர்வமாக) நிலைகொண்டிருந்த காலத்தில் இந்த ரமாடி நகரம், அமெரிக்க எதிர்ப்பு இயக்கத்தினரின் கோட்டையாக இருந்தது. ஆனால், காலப்போக்கில் (2015ம் ஆண்டு) ஐ.எஸ். இயக்கத்திடம் இருந்து ரமாடி நகரைக் கைப்பற்றியது ஈராக்கிய ராணுவம். ரமாடியும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் முழுமையாகத் தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது என ஈராக்கிய ராணுவம் அறிவித்தது.

அந்த யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த மற்ற ஐ.எஸ். இயக்க உறுப்பினர்கள், நகரை விட்டு வெளியேறினர். இயக்கத்தினருக்கு ஆதரவு கொடுத்த குற்றச்சாட்டில் பலர் கைது செய்யப்பட்டனர். இப்படிப் படிப்படியாக ரமாடி, ஈராக்கிய அரசு மற்றும் ராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

இப்படியான பின்னணியுள்ள ரமாடி நகரைச் சுற்றியுள்ள மூன்று கிராமங்களைத்தான் ஐ.எஸ். இயக்கத்தினர் இப்போது கைப்பற்றியுள்ளனர்.

ஐ.எஸ். இயக்கத்தினரின் இந்தத் தாக்குதலின் நோக்கம், இந்தக் கிராமங்களை கைப்பற்றுவதல்ல, அவற்றுக்கு அருகில் உள்ள ரமாடி நகரைக் கைப்பற்றுவதுதான் என்று ஊகிக்கலாம். இந்த 3 கிராமங்களை முழுமையாக கைப்பற்றி தமது இயக்க கொடியை அங்கு பறக்க விட்டுள்ள ஐ.எஸ். இயக்கத்தினர், உடனடியாகவே, மேலும் 3 கிராமங்களை தாக்கத் தொடங்கியுள்ளனர்.

அந்தத் தாக்குதலுக்கு உள்ளான கிராமங்கள், ரமாடி நகரின் வட கிழக்குத் திசையில் உள்ளன. ரமாடி நகரைச் சுற்றியுள்ள கிராமங்கள் அனைத்தையும் கைப்பற்றிவிட்டு, அதன்பின் ரமாடி நகரைக் கைப்பற்றுவதே ஐ.எஸ். இயக்கத்தினரின் திட்டமாக இருக்கலாம்.

ஐ.எஸ். இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்ட கிராமங்கள், ஸ்ஜாரியா, அல்புகானிம், சொபியா ஆகியவற்றில் இருந்து ஈராக்கிய ராணுவத்தினர் முழுமையாக வெளியறியுள்ளதாக ஐ.எஸ். ஆதரவு மீடியாக்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சொபியாவில் உள்ள பவர் பிளாண்ட், ஐ.எஸ். இயக்கத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இங்கிருந்து, ரமாடி நகரின் கிழக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ள அரசு பில்டிங் ஒன்றின்மீது ராக்கெட் தாக்குதல்களை நடத்த தொடங்கியுள்ளனர் ஐ.எஸ். இயக்கத்தினர்.

எந்த நேரத்திலும் இந்த அரசு பில்டிங் ஐ.எஸ். இயக்கத்தினரின் கைகளில் வீழ்ந்துவிடலாம் என்று கூறப்படுகிறது. அதைக் கைப்பற்றிவிட்டால், ரமாடி நகரில் இருந்து வெறும் 2 கி.மீ. தொலைவுவரை சென்றுவிடுவார்கள். அதன்பின், ரமாடி நகரின் மீதான தாக்குதல்கள் தொடங்கிவிடும்.

"இந்த வாரம் நடந்த யுத்தத்தில் ராணுவம் பின்வாங்கியது உண்மையா?" என்ற கேள்விக்கு பதிலளிக்க மறுத்துள்ளார் ஈராக்கிய ராணுவ செய்தித் தொடர்பாளர்.

அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு கருத்து தெரிவித்த, அடையாளம் வெளியிடப்படாத உளவுத்துறை அதிகாரி ஒருவர், "ரமாடி நகரின் மேற்கு எல்லையில் தாக்குதல் நடத்த ஐ.எஸ். இயக்கத்தினர் முன்னேற்பாடுகள் செய்வதாக எம்மிடம் தகவல் உள்ளது. மேற்கு எல்லை நோக்கி ஐ.எஸ். இயக்கத்தினரின் ஆட்டிலரி பீரங்கிகள் நகர்த்தப்படுவதைத் தெரிந்து வைத்திருக்கிறோம். ரமாடி பகுதியில் நிலைமை மிகவும் மோசமாகத்தான் உள்ளது" என்றார்.

இப்போது ஈராக்கிய ராணுவத்தின் கை மேலோங்கியுள்ள திக்ரித் நகரில் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்.

திக்ரித் நகரில், ஈராக்கிய ராணுவத்துக்கு எதிர்பாராத உதவி ஒன்று கிட்டியுள்ளது. திக்ரித் நகரின்மேல் அமெரிக்காவின் கண்காணிப்பு விமானங்கள் பறக்கத் தொடங்கியுள்ளன. சும்மா பறப்பது மட்டுமன்றி, திக்ரித் நகருக்குள் உள்ள ஐ.எஸ். இயக்க நடமாட்டங்கள் பற்றி 'லைவ்'வாக சுடச்சுட தகவல்கள் கொடுக்க தொடங்கியுள்ளன.

அமெரிக்காவின் இந்த முடிவு, ஈராக்கிய ராணுவத்துக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கும். காரணம், திக்ரித்தில் ஐ.எஸ். இயக்கம் மீது தாக்குதல் நடந்தும் சுமார் 30,000 ராணுவத்தினரில், 10,000 பேர்தான் ஈராக்கிய ராணுவத்தினர்.


மீதி 20,000 பேரும், ஈரானியப் படைப்பிரிவை சேர்ந்தவர்கள்.

இதை வேறு விதமாக சொல்ல வேண்டுமானால், திக்ரித்டில் ஈராக்கிய, ஈரானிய ராணுவத்தின் கூட்டுத் தாக்குதலுக்கு 'லைவ்'வாக உளவுத் தகவல்கள் கொடுப்பதன் மூலம் உதவுகிறது, அமெரிக்கா.

ஈரானியப் படைகள், கடந்த இரண்டு ஆண்டுகளாகவே ஈராக்குக்குள் உள்ளன. ஈராக்கிய ராணுவத்துடன் இணைந்து யுத்தமும் புரிகின்றன. அமெரிக்கா இதை கண்டும் காணாமலும் விட்டுக்கொண்டு இருந்தது.

ஆனால், கடந்த சில தினங்களாக அமெரிக் உளவுத்துறை சி.ஐ.ஏ.யிடம் இருந்து, இதற்கு எதிர்ப்புக் குரல்கள் வந்ததையடுத்து, ஈராக்கில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா காய் நகர்த்தப் போகின்றது என ஊகித்தால், இப்போது நடப்பது அதற்கு தலைகீழாக உள்ளது. ஈராக்கியப் படைகளுக்கு மட்டுமன்றி, ஈரானிய ராணுவமும் திக்ரித் போரில் ஜெயிக்க வேண்டும் என்று அமெரிக்கா உளவுத் தகவல்களைக் கொடுக்கிறது!

ஈரானின் ராணுவ நகர்வுகள் குறித்து ஐ.நா.வின் பாதுகாப்புக் கவுன்சிலில் அதிகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடு அமெரிக்காதான். ஈரானின் அணுசக்தித் திட்டம் குறித்தும் அதிகம் எதிர்ப்புத் தெரிவிக்கும் நாடும் அமெரிக்காதான்!







# ...ந்தத்தில் சில ...ா நகர்வுகள்

அதே அமெரிக்கா ஈராக்கில் நடக்கும் யுத்தத்தில் ஈரானிய ராணுவத்துக்குக் கைகொடுக்கிறது என்றால், இது என்ன விதமான ராஜதந்திரம் என்று குழப்பமாக உள்ளது.

இந்தக் கட்டுரை எழுதப்படும்போது திக்ரித்ல் இருந்து கிடைத்த தகவல்களின்படி, ஈரானிய, ஈராக்கிய கூட்டு ராணுவம் மீதான தாக்குதலை ஐ.எஸ். இயக்கமும் வேகப்படுத்தியுள்ளது. ஐ.எஸ். இயக்கத்தின் கடுமையான தாக்குதலுக்கு ஈடுகொடுக்கும் வகையில், ஈரானிய ஈராக்கிய கூட்டு ராணுவத்துக்கு அமெரிக்க உதவி கிடைக்கிறது.

நிலைமை இப்படியே தொடர்ந்தால், நாளையோ, மறுதினமோ திக்ரித் நகரை மீளக் கைப்பற்றும் திட்டத்தை ஈரானிய, ஈராக்கிய கூட்டு ராணுவம் செயற்படுத்த நினைக்கலாம்.

ஈரானியப் படைகளுடன் ஈராக்கின் திக்ரித் பகுதியில், சர்ச்சைக்குரிய ஈரானிய ராணுவத் தளபதி ஜெனரல் காசிம் சொலைமானி, தாமே நேரடியாக தலைமை தாங்கி யுத்தம் புரிகிறார்.

திக்ரித் மீது பறக்கும் அமெரிக்க கண்காணிப்பு விமானங்கள், நகருக்குள் ஐ.எஸ். இயக்க முகாம்கள் எந்தெந்த பகுதியில் உள்ளன, எந்தெந்தப் பகுதியை நோக்கி அவர்களது படை நகர்வுகள் உள்ளன என்ற தகவல்களை 'லைவ்'வாக வழங்குவதை அடுத்து, அந்தப் பகுதிகளை நோக்கி ஈரானிய, ஈராக்கிய கூட்டு ராணுவம், ராக்கெட், மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துகிறது.

இந்த திடீர் திருப்பம், போர் களத்தில் ஐ.எஸ். இயக்கத்துக்கு கணிசமான இழப்பை ஏற்படுத்தலாம் என்பது உண்மைதான். ஆனால், திக்ரித் நகரை கைப்பற்ற இவை மட்டும் போதாது. இதைவிட மேலும் அதிக படைபலம் தேவை.

இங்கு ஐ.எஸ். இயக்கத்துக்கு ஏற்பட்டுள்ள முக்கிய பின்னடைவு என்னவென்றால், ஈராக்கிய, ஈரானிய கூட்டு ராணுவம் ஹவிஜா என்ற சிறு நகரைக் கைப்பற்றியது தான். கடந்த சுமார் 3 ஆண்டுகளாக ஹவிஜா, ஐ.எஸ். இயக்கத்தின் கட்டுப் பாட்டில் இருந்தது.

ராணுவம் ஹவிஜா நகரைக் கைப்பற்றினால், திக்ரித் நகரையும் கைப்பற்றி விட்டது என்று அர்த்தமில்லைத்தான். ஆனால், ஹவிஜா நகரைக் கைப்பற்றியபின் அதற்கு அருகே உள்ள நெடுஞ்சாலையும் ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

இந்த நெடுஞ்சாலைக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அது என்னவென்றால், கிர்குக் நகரில் இருந்து திக்ரித் நகருக்குச் செல்லும் நெடுஞ்சாலை அது. இதனால், திக்ரித் நகரைத் தக்க வைக்க யுத்தம் புரியும் ஐ.எஸ். இயக்கத்தின் வழங்கல் பாதை (சப்ளை ரூட்) வெட்டப்பட்டு விட்டது.

திக்ரித் நகரில் யுத்தம் புரியும் ஐ.எஸ். இயக்கத் தினருக்குத் தேவையான ஆயுதங்கள், உணவுப் பொருட்கள் எல்லாமே இந்தப் பாதை வழியாகவே சென்று கொண்டிருந்தன. இந்தப் பாதை வெட்டப்பட்டு விட்டால், அடுத்து திக்ரித் நகரைக் கைப்பற்றலாம் என்பதே ஈராக்கிய ராணுவத்தின் நினைப்பாக உள்ளது.

ஈராக்கில் நடக்கும் யுத்தத்தில் திக்ரித் பகுதியில் ஈரானிய ராணுவ ஜெனரல் காசிம் சொலைமானி தாமே நேரடியாகத் தலைமை தாங்கி யுத்தம் புரிகிறார் என்று எழுதினோம் அல்லவா? ஈரானிய ராணுவத்தின் அல்கோட்ஸ் பிரிகேட்டின் தளபதி இவர்.

இந்த ராணுவ ஜெனரல் காசிம் சொலைமானி பற்றி சமீபத்தில் சர்வதேச உளவுத் துறை வட்டாரங்களில் ஒரு கதை அடிபட்டது. ஜெனரல் காசிம் சொலைமானி, ஜோர்தானிய தலைநகர் அமானுக்கு 'வெளியே சொல்லப்படாத' விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என்பது அந்தக் கதை!

ஈரான் தொடர்பான அமெரிக்க நிலைப்பாடு சமீபகாலமாக மாற்றம் பெற்று வரும் நிலையில், இந்த விஜயம் (உண்மையாக இருந்தால்) ஒரு மைல்ஸ்டோன் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, அமெரிக்கா ராணுவ ரீதியாக அக்கறை காட்டும் மற்றொரு நாட்டுக்குள், ஈரானும் அனுமதிக்கப்படுகிறது என எடுத்துக் கொள்ளலாம்.

அமெரிக்க ராணுவம் நேரடியாக (பயிற்சியாளர்கள் என்ற போர்வையில்) ஈராக்குக்குள் உள்ளது. அதே ஈராக்குக்குள் ஈரானிய ராணுவத்தின் அல்கோட்ஸ் பிரிகேட்டின் சில படைப் பிரிவுகளும் உள்ளன. அதுவும், வெளிப்படையாக அறிவிக்கப்படாத டீல். காரணம், அமெரிக்காவால் ராணுவ ரீதியான தடைகள் விதிக்கப்பட்டுள்ள ஈரானும், தடை விதித்த அமெரிக்காவும் ஒரே இடத்தில் இருக்க முடியாது.

ஆனால், இருக்கிறார்கள்.

அதேபோல, சிரியாவுக்குள் அமெரிக்கா ராணுவ நடவடிக்கைகளை (விமானக் குண்டு வீச்சுக்கள்) மேற்கொள்கிறது. வெளியே சொல்லப்படாமல் ஈரானிய தொடர்பும் அங்கே உள்ளது.

ஏமானில் சி.ஐ.ஏ.யின் உளவு விமானத் தாக்குதல்கள் நடக்கின்றன. அங்கும் ஈரானின் மறைமுகமான ஒத்துழைப்பு உள்ளது. லெபனானிலும் இதே நிலைமை.

இப்படியான சூழ்நிலையில், ஜெனரல் காசிம் சொலைமானி, ஜோர்தானுக்கு 'வெளியே சொல்லப்படாத' விஜயம் ஒன்றை மேற்கொண்டார் என்றால், அதற்கு ராஜதந்திர ரீதியாக ஆயிரம் அர்த்தங்கள் உள்ளன.


காரணம், இந்த ஜெனரல் காசிம் சொலைமான், சமீப காலமாக ஈராக்குக்குள் அவ்வப்போது நடமாடுகிறார். யுத்த முனைகளுக்கு நேரில் செல்கிறார். அதை வைத்துப் பார்த்தால், ஜெனரல் காசிம் சொலைமானுடன் அமெரிக்க ராணுவம் ஒருவித புரிந்துணர்வில் உள்ளது என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

மத்திய கிழக்கில் பாக்தாத், டமாஸ்கஸ், சானா, பெய்ரூட் ஆகிய 4 தலைநகரங்களில் உள்ள 'மறைமுக' அமெரிக்க, ஈரானிய புரிந்துணர்வு, இப்போது அமான் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஈரானிய தளபதியின் விஜயம் குறித்து தற்போது கிடைத்துள்ள தகவல்கள் விரிவாக இல்லை. ஆனால், அவர் நிச்சயம் அமானுக்கு விஜயம் செய்தார், அதுவும் அதிகாரபூர்வ விஜயம் என அடித்துச் சொல்கிறார்கள், உளவுத்துறை வட்டாரங்களில்.

அப்படியொரு விஜயம் நடந்திருந்தால், அது அமெரிக்க ஆசியுடன் மேற்கொள்ளப்பட்ட விஜயம் என்று எடுத்துக் கொள்ளலாம். காரணம், ஜோர்தானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நெருக்கம் அப்படி!

சரி. எவ்வளவு நெருக்கம்? அமெரிக்காவுக்கு ஜோர்தான் நாட்டில் ராணுவ முகாம்கள் உள்ளன. முன்பு சிரியாவில் அரசுக்கு எதிராக யுத்தம் புரிந்த சில தீவிரவாத இயக்கங்களுக்கு அமெரிக்க உளவுத் துறை ஆயுதப் பயிற்சி கொடுத்ததல்லவா? பயிற்சி கொடுக்கப்பட்ட இடம் எது தெரியுமா? ஜோர்தானுக்கு உள்ளே உள்ள அமெரிக்க ராணுவ முகாம்கள்தான்! புரிகிறதா, எவ்வளவு நெருக்கம் என்று!



ஈரானிய ராணுவத் தளபதி
ஜெனரல் காசிம் சொலைமானி



## ராஜதந்திரம் கலந்த சுவாரசிய ராணுவ வர்த்தகம்:

# துருக்கி வாங்கும் ஏவுகணை சிஸ்டம்

தமது நாட்டு எல்லையில் புதிதாக பொருத்தப்படவுள்ள ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் (defense missile system), அங்கு ஏற்கனவே உள்ள நேட்டோ படைகளின் ஏவுகணைத் தடுப்பு சிஸ்டத்துடன் இணைக்கப்படாது என கூறி மேலை நாட்டு ராணுவ வட்டாரங்களை அதிர வைத்துள்ளது துருக்கி.

3.4 பில்லியன் டொலர் விலையுள்ள இந்த புதிய ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம், சீனத் தயாரிப்பு என்பது, மேலைநாடுகளுக்கு அடுத்த பகீர்!

எல்லைக்கு மறுபுறம் சிரியாவில் யுத்தம் நடக்கும் நிலையில், துருக்கியிடம் சொந்தமாக ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் கிடையாது. சிரியாவில் தாக்குதல்களை நடத்த துருக்கியை தளமாக பயன்படுத்தும் நேட்டோ உறுப்பு நாடான அமெரிக்காவின் ஏற்பாட்டில், துருக்கியில் ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் ஒன்றை அமைத்துள்ளது நேட்டோ.

நேட்டோ சிஸ்டத்தின் ராடார்களைத்தான் துருக்கி தமது எல்லைப் பாதுகாப்பு உபயோகங்களுக்கு பயன்படுத்துகிறது.

இந்த நிலையில், தமது சொந்த ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டத்தை அமைக்க விரும்பிய துருக்கி, அதற்கான கோடேஷன்களை கோரியது. அவர்களுக்கு கிடைத்த கோடேஷன்களில் இருந்து தேர்ந்தெடுத்த சிஸ்டம், சீன தயாரிப்பு நிறுவனமான CPMEIC (China Precision Machinery Export-Import Corporation) தயாரிக்கும் சிஸ்டம்தான்.

டென்டரில் 2வது இடத்தில் இருந்தது, Eurosam என்ற பிரான்ஸ், இத்தாலிய கூட்டு நிறுவனம்.

அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகளின் மிக சென்சிட்டிவ்வான துருக்கி எல்லையில் சீன ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் அமைக்கப்படுவதை மேலை நாடுகள் சும்மா பார்த்துக்கொண்டு இருப்பார்களா?

நிச்சயமாக இல்லை. எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே மற்றொரு விவகாரம், இந்த ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் அமைக்கும் திட்டத்தை துருக்கி கொண்டுவந்ததே, மேலை நாட்டு நிதியுதவியை நம்பித்தான். பெயர் வெளியிடப்படாத மேலை நாடு ஒன்று துருக்கியின் ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டத்துக்கு நிதியுதவி செய்ய ஒப்புக்கொண்டதாக அங்காராவில் இருந்து வெளியாகும் மீடியாக்கள் குறிப்பிட்டிருந்தன.

ஆனால், இப்போது கதை மாறி விட்டது. சீனத் தயாரிப்பு சிஸ்டம் அமைப்பதற்கு நிதியுதவி செய்ய முடியும் என முதலில் ஒப்புக்கொண்ட மேலை நாடு கைவிரித்து விட்டது என்று அதே மீடியாக்கள் கூறுகின்றன.




ஏற்கனவே துருக்கியில் ஏவுகணை சிஸ்டத்தை அமைத்துள்ள நேட்டோ, சீன சிஸ்டம் அமைக்கப்பட்டால், தமது ரேடார்களில் இருந்து எந்த தரவையும் வழங்க முடியாது என கூறிவிட்டது. அதாவது, நேட்டோ ரேடார்களை சீன சிஸ்டத்துடன் இன்டர்கிரேட் செய்வது, பாதுகாப்பானது அல்ல என்று சொல்லிவிட்டது.

தமது சிஸ்டத்தின் ரகசியங்கள், சீன சிஸ்டத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டு விடும் என்று காரணம் சொல்கிறது நேட்டோ.

இரண்டு வாரங்களுக்கு முன் மற்றொரு யுத்த தளபாட வர்த்தகம் தொடர்பாக மேலை நாடுகளுடன் முறுகியிருந்தது. அது, விமான எதிர்ப்பு சிஸ்டம் (anti-aircraft system) தொடர்பானது. S-400 சிஸ்டத்தை வாங்கப் போவதாக துருக்கி கூறியதை மேலை நாடுகள் ரசிக்கவில்லை. காரணம், அது ரஷ்யத் தயாரிப்பு சிஸ்டம்.

அதற்கு அமெரிக்கா வெளிப்படையாகவே எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் எதிர்ப்பு குறித்துக் கருத்துத் தெரிவித்த துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன், "எமக்கு எங்கிருந்து நிதியுதவி கிடைக்கிறதோ, அங்கிருந்துதான் விமான எதிர்ப்பு சிஸ்டத்தை வாங்க முடியும். அமெரிக்கா நிதியுதவி செய்யும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க முடியுமா?" என்று கூறியிருந்தார்.

அதன் பின்னரே, ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம் அமைப்பதற்கு நிதியுதவி செய்ய ஒரு மேலைநாடு தயாராக உள்ளது என்ற தகவல் வெளியானது. எந்த மேலைநாடு என்று யாரும் சொல்லவில்லை (அமெரிக்கா அல்லது பிரான்ஸாக இருக்கவே வாய்ப்பு அதிகம்).

நிதியுதவி கிடைக்கும் என்ற நிலை உள்ளதால், துருக்கி சீன நிறுவனத்தை உதறிவிட்டு, Eurosam பிரான்ஸ் இத்தாலிய கூட்டு நிறுவனத்திடம் வந்து சேரும் என்ற எதிர்பார்ப்பு மேலை நாடுகளுக்கு இருந்தது.


துருக்கி ஜனாதிபதி தையிப் எர்டோகன்

இப்போது திடீரென துருக்கி அதிரடியாக சீன தயாரிப்பு சிஸ்டமே அமைக்கப்படும் என அறிவித்துள்ளது.

அத்துடன், தமது சிஸ்டம், அங்குள்ள நேட்டோ ஏவுகணைத் தடுப்பு சிஸ்டத்துடன் இணைக்கப்படாது என கூறி மேலை நாட்டு ராணுவ வட்டாரங்களை அதிர வைத்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் மேலை நாடுகளை வெறுப்பேற்றும் மற்றொரு ஸ்டேட்மென்ட்டும் துருக்கியிடம் இருந்து வந்துள்ளது, "நாம் அமைக்கவுள்ள ஏவுகணை எதிர்ப்பு சிஸ்டம், எமது தேசிய பாதுகாப்பு தொடர்பானது.

வெளி ஏஜென்சி (நேட்டோ வைத்தான் இப்படிக் குறிப்பிடுகிறார்கள்) சிஸ்டங்களுடன் இணைக்க வேண்டிய அவசியம் நமக்கு கிடையாது" என்பதே அந்த ஸ்டேட்மென்ட்!

ஆகா... இவ்வளவு தில்லாக கூறுகிறார்கள் என்றால், இவர்களுக்கு பைனான்ஸ் செய்ய பார்ட்டி ஒன்று தயாராக உள்ளது என அர்த்தம்.

அந்த பார்ட்டி வேறுயாருமல்ல, சீனாதான் என்று ஊகித்திருப்பீர்கள் அல்லவா?

**தமிழ் ஊடகங்களில் இப்படியான ராஜதந்திர வர்த்தக ஆய்வுகள் வருவதைப் பார்த்திருக்கிறீர்கள்?**

# செங்கடலில் காத்திருந்த புலிகளின் கப்பலும் 'மச்சக்கார' அமைச்சரும்!


சங்கர்
கே.பி.


தமிழக (முன்னாள்) முதல்வர் எம்.ஜி.ஆருடன் புலிகளின் தலைவர் பிரபாகரனும், சங்கரும்

பரபரப்பு வார இதழில் வெளியாகும் "ஈழப் போரின் இறுதி நாட்கள்: உங்களுக்கு உண்மை தெரிய வேண்டுமா?" தொடரில், யுத்தத்தின் இறுதி நாட்களில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த விஷயங்களைத் தொடராகத் தருகிறோம். இந்தத் தொடரில், புலிகளுடன் தொடர்பான சில பழைய சம்பவங்களைத் தருகிறோம். இதில் கூறப்படும் விஷயங்களில் பலவும் முன்பு புலிகள் இயக்கத்தால் ரகசியம் காக்கப்பட்டவை.

"ஈழப் போரின் இறுதி நாட்கள்: உங்களுக்கு உண்மை தெரிய வேண்டுமா?" தொடரில் இந்த வாரம், 2002ம் ஆண்டு புலிகளின் ஆயுதக் கொள்வனவு கை மாறியது பற்றிப் படிக்கலாம். அதற்கு முன்பே சில தடவைகள் புலிகள் இயக்கத்துக்காக ஆயுதக் கொள்வனவு செய்ய சிலர் செய்த முயற்சிகளும் உள்ளன. அப்படியான ஒன்றை இந்தத் தொடரில் பார்க்கலாம்.

நாம் கூறும் சம்பவம் தொடங்கியது 1980களில், தமிழகத்தில்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த காலம் அது. அதுவரை புலிகளிடம் அதிகமாக இருந்தவை, இந்திய அரசால் ரகசியமாகக் கொடுக்கப்பட்ட ஏ.கே 47 ரக துப்பாக்கிகள்தான். இந்திய அரசே, தமது ராணுவத்தில் பயன்படுத்திய, பழைய துப்பாக்கிகளைத்தான் கொடுத்திருந்தார்கள்.

அப்படியான நிலையில், தோளில் வைத்து டாங்கிகளையே சுடக்கூடிய புத்தம்புதிய ஆர்.பி.ஜி. (RPG – Rocket Propelled Grenade) ரக துப்பாக்கிகள் லெபனானில் வைத்து புலிகளின் அப்போதைய வெளிநாட்டுப் பிரிவால் வாங்கப்பட்டன. அவற்றை கார்கோ கப்பல் ஒன்றில் ஏற்றி அனுப்பும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

அந்த நாட்களில், புலிகளின் தலைவர் பிரபாகரன் உட்பட, பல தளபதிகள் தமிழகத்தில்தான் தங்கியிருந்தார்கள். இதனால், ஆயுதக் கப்பலை இந்தியாவுக்கு கொண்டுவருவது என்றும், அதன்பின் படகுகள் மூலம் வேதாரண்யத்தில் இருந்து இலங்கை கொண்டு செல்வது என்றுமே திட்டமிடப்பட்டது.

லெபனானில் வாங்கப்பட்ட ஆயுதங்கள், பெரிய கார்கோ கண்டெயினர் (40 அடி கண்டெயினர்) ஒன்றில் ஏற்றப்பட்டு, அவற்றுக்கு மேல் மறைப்பு ஒன்று போடப்பட்டது. அதன்மேல் ஒரு பழைய அச்சு இயந்திரம் ஏற்றப்பட்டது. இந்த 40 அடி கண்டெயினர், போர்ட் ஆஃப் பெய்ரூட் (Port of Beirut) துறைமுகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

போர்ட் ஆஃப் பெய்ரூட் துறைமுகம், பெய்ரூட்டின் கடற்கரை (மெடிட்டரேனியன் கடல்) ஓரமாக, செயின்ட் ஜோர்ஜ் பே (Saint George Bay) பகுதியின் கிழக்கே உள்ளது. இங்கிருந்து கார்கோ கப்பல்கள், ட்ரான்ஸ் ஷிப்மென்ட் கண்டெயினர்களுடன் இந்தியா செல்வது வழமையான கடற்பாதை. ஆயுதங்களுடன் கப்பல் சென்னை துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டது.

கப்பல் சென்னை துறைமுகத்தை அடையும் முன், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன் அவரது ராமாவாரம் தோட்டத்தில் சந்திப்பு ஒன்று நடந்தது. புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் எம்.ஜி.ஆரைச் சந்தித்தார். கப்பலில் கண்டெயினர் ஒன்று வருகிறது என்ற விஷயம் எம்.ஜி.ஆருக்கு சொல்லப்பட்டது.

"கண்டெயினரை திறந்தவுடன், பழைய அச்சு இயந்திரம் மட்டுமே தெரியும்" என்று எம்.ஜி.ஆரிடம் சொல்லியபோது, அவர் விஷயத்தை புரிந்து கொண்டார். ஒரு சிரிப்புடன், அப்போதைய தமிழக தலைமைச் செயலக அதிகாரி ஒருவரை போனில் அழைத்து, "நமக்கு வேண்டியவர்களுக்கு அச்சு இயந்திரம் ஒன்று கப்பலில் வருகிறது. அவர்கள் உங்களிடம் விபரம் சொல்வார்கள். கிளியர் பண்ண ஏற்பாடு செய்யுங்கள்" என்றார்.

சென்னை துறைமுகத்தில் கண்டெயினர் எவ்வித சிக்கலும் இன்றி இறக்கப்பட்டது. ட்ரக் ட்ரெயிலர் ஒன்றில் ஏற்றப்பட்டது. பிரபாகரன் அப்போது தங்கியிருந்த வீடு, சென்னை திருவான்மியூர் அருகே கடற்கரை ஓரமாக இருந்தது. வீட்டைச் சுற்றி பெரிய சுவர் மற்றும் இடவசதி உடைய தனி வீடு அது. வீட்டின் கம்பவுண்டுக்கு உள்ளே கண்டெயினர் கொண்டுவந்து திறக்கப்பட்டது.

புலிகள் இயக்கத்துக்கு முதல் தடவை ஒரு கண்டெயினரில் ஆயுதங்கள் வந்தது அப்போதுதான். அங்கிருந்த அனைவருக்கும் த்ரில்.

இந்த விவகாரம், புலிகள் இயக்கத்துக்கு ஆயுதம் இறக்கி பெயரை தட்டிச் செல்லும் ஆசையை சிலருக்கு ஏற்படுத்தியது. அதில் முக்கியமானவர்கள் இருவர். இருவரும் அப்போது லண்டனில் வசித்தார்கள். புலிகள் இயக்கத்தில் அவர்களின் நண்பர் சங்கர். சங்கரும் அப்போது சென்னையில்தான் தங்கியிருந்தார்.

சங்கரின் நிஜப் பெயர் வைத்திலிங்கம் சொர்ணலிங்கம் (இவர்தான் வான்புலிகள் அமைப்பைத் தொடங்கியவர். ராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினரால், 2001ம் ஆண்டு கொல்லப்பட்டவர்). புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் இளமைக்கால நண்பர். கனடாவில் சிறிதுகாலம் வசித்தபோது, எயார் கனடா விமான நிறுவனத்தின் மொன்ட்ரியல் விமான நிலைய மெயின்டெனென்ஸ் ஹாங்கரில் பணிபுரிந்தவர்.

எயார் கனடா, பிரெஞ்ச் தயாரிப்பு எயார் பஸ் விமானங்களை வாங்கியதற்கு முந்திய காலம் அது. மொன்ட்ரியல் ஹாங்கரில் அப்போதெல்லாம் DC-9 மற்றும் போயிங் 727 விமானங்களுக்கே அதிகமாக மெயின்டெனென்ஸ் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். (இந்த இரு ரகங்களையும் எயார் கனடா 1990களின் ஆரம்பத்திலேயே கைவிட்டுவிட்டது) சங்கர் பணிபுரிந்தது DC-9 ரொஸ்டரில்.

1983ல் எயார் கனடா வேலையை உதறிவிட்டு, சென்னை வந்த சங்கர், தமது இளமைக்கால நண்பர் பிரபாகரனைச் சந்தித்து, புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். வெளிநாட்டில் இருந்து வந்தவர் மற்றும், பிரபாகரனின் இளமைக்கால நண்பர் என்பதால், இயக்கத்தில் இணைந்த நாளில் இருந்தே சங்கருக்கு முக்கியத்துவம் இருந்தது.

லண்டனில் வசித்துக் கொண்டு புலிகளுக்கு ஆயுதம் வாங்க விரும்பிய இருவரும், சங்கரைத்தான் தொடர்பு கொண்டார்கள்.

அந்த நாட்களில், புலிகள் இயக்கத்துக்கு சென்னை அடையாறில் அரசியல் அலுவலகம் ஒன்று இருந்தது. அன்டன் பாலசிங்கம், பேபி சுப்ரமணியம் ஆகியோர் அந்த அலுவலகத்தில் இருந்து செயற்பட்டனர். யாரும் வந்து போகக்கூடிய இடம் அது.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡




அதைத் தவிர சென்னையில் புலிகளுக்கு மற்றொரு அலுவலகமும் இருந்தது. அங்கே வெளியாட்களுக்கு அனுமதி இல்லை.

திருவான்மியூரில் இயங்கிய அந்த அலுவலகத்தை அப்போது எம்.ஓ (மிலிட்டரி ஆபீஸ்) என்று சொல்வார்கள். அந்த நாட்களில் மனோ மாஸ்டர் அந்த அலுவலகத் துக்குப் பொறுப்பாளராக இருந்தார். சங்கர் அதிகம் தென்படுவது அங்கேதான்.

ஆயுதம் இறக்கும் ஆசையில் வந்த இருவரும் எம்.ஓ. அலுவலகத்தில் இருந்த சங்கரைத் தொடர்பு கொண்டனர். அந்த இருவரில் ஒருவர் தற்போது உயிருடன் இல்லை. மற்றையவர் இப்போதும் பிரிட்டனில்தான் உள்ளார். அவர் தற்போது, நாடு கடந்த தமிழீழ அரசு என்ற அமைப்பின் முன்னணி பிரமுகராக உள்ளார்.

நாடு கடந்த தமிழீழ அரசு என்பது, உருத்திரகுமார் தலைமையில், அமெரிக்காவை தலைமையகமாக கொண்டு இயங்கும் ஒரு அமைப்பு. அதில் விவசாயத் துறையில் இருந்து, விண்வெளித்துறை வரை, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தைவிட அதிக எண் ணிக்கையில் அமைச்சர்கள் உள்ளார்கள். நாடுதான் இல்லை. நாம் குறிப்பிடும் நபரும், 'பிரதமர்' உருத்திரகுமாரின் அமைச்சரவையில் ஒருவர். அமைச்சர்!

சென்னையில் இருந்த சங்கரிடம் தமது ஆயுதம் இறக்கும் ஆசையை அமைச்சர் சொன்னதில், முயற்சி செய்து பாருங்கள் என்று கூறிவிட்டார் சங்கர்.

இவர்கள் லண்டனில் நாலைந்து இடங்களில் விசாரித்து ஒரு ஆளைப் பிடித்து விட்டார்கள். அந்த நபர் ஒரு அல்ஜீரிய நாட்டுப் பிரஜை. "ஆயுதங்கள்தானே.. ஒரு சிக்கலும் இல்லை. தாராளமாக இறக்கிடலாம்" என்றார் அவர்.

ஆயுத வியாபார தொடர்பு இவ்வளவு சுலபமாக கிடைத்ததில் நமது அமைச்சருக்கு பேரானந்தம். "ஆயுதம் வாங்குவது சுலபமான காரியமாக இருக்கிறதே. இதைத் தானா ஏதோ பெரிய விஷயம் என்று சொல்லிக் கொள்கிறார்கள்?" என்று அக மகிழ்ந்த அமைச்சர், சென்னையில் இருந்த சங்கரைத் தொடர்பு கொண்டு, "ஆயுதம் சப்ளை செய்ய அருமையான ஆள் கைவசம் உள்ளார். உடனே புறப்பட்டு வந்தால், ஆயுதங்களை அள்ளிவிடலாம்" என்று தகவல் கொடுத்தார்.

சங்கர் கனடாவில் இருந்து வந்தவர் என்பதால், லண்டன் செல்வதில் சிக்கல் ஏதும் இல்லை. புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் விஷயத்தைக் கூறியதில், அவரும், இவரை லண்டனுக்கு அனுப்பி வைத்தார். லண்டனில், தமது அல்ஜீரிய தொடர் பாளரிடம் சங்கரை அழைத்துச் சென்றார் நாடுகடந்த தமிழீழ அமைச்சர்.

அந்த அல்ஜீரியரோ, இவர்கள் அனைவரையும் விடக் கெட்டிக்காரர். இவர்கள் எந்த ரக ஆயுதம் கேட்டாலும், அடுத்த இரண்டு மணி நேரத்திலேயே காட்டிவிடுவார். ஒரேயொரு விஷயம், ஆயுதத்தை போட்டோவில்தான் காட்டுவார்.

போட்டோவில் காண்பிக்கும் ஆயுதம் பற்றி, அந்த ஆயுதத்தை தயாரித்தவருக்கே தெரியாத புள்ளிவிபரங்களையெல்லாம் சொல்லி அசத்தினார் அவர்.

அவரது ஆயுத டெமொன்ஸ்ட்ரேஷன் இவர்களுக்கு நன்றாக பிடித்துப் போனது. லண்டனில் இருந்தே தலைமையுடன் தொடர்பு கொண்ட சங்கர் விபரங்களைக் கூறினார். புலிகளின் வெளிநாட்டுப் பிரிவினர் லெபனானில் இருந்து வாங்கிக் கொடுத்த ஆயுதங்களின் விலைப் பட்டியலை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். அதுவும் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தது.

இப்போது விலை பேசும் படலம் ஆரம்பமானது. சங்கருக்கும், அமைச்சருக்கும், வெளிநாட்டுப் பிரிவு ஏற்கனவே ஆயுதம் வாங்கிய விலை, பட்டியலில் இருந்து தெரி யும் என்பதால், அதை வைத்தே விலை பேசத் திட்டமிட்டார்கள். ஆனால் அல்ஜீரியாக்காரர் சொன்ன விலை, இவர்களை புளகாங்கிதம் அடைய வைத்தது.

உடனே சங்கர், தலைமையைத் தொடர்பு கொண்டார். "வெளிநாட்டுப் பிரிவு ஆயுதங் களுக்கு லெபனானில் அதிக விலை கொடுத்து ஏமாந்து விட்டார்கள். அவர்கள் 1800 அமெரிக்க டொலருக்கு வாங்கிய அதே ஆர்.பி.ஜி.யை, இங்கே ஒருவர் 1675 டொலருக்குக் கொடுக்கத் தயாராக உள்ளார்" என்றார்.

ஆயுதங்களை வாங்கி அனுப்புமாறு சென்னையில் இருந்து உத்தரவு வந்தது.

அமைச்சரும், சங்கருமாக அல்ஜீரியாக்காரருடன் டீல் பேசி முடித்தார்கள். மொத்தம் 1.5 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்ட்ஸ் டீல். அதில் 1 மில்லியன் பவுண்ட்ஸ் பணத் தை முன்பணமாகக் கொடுத்துவிட வேண்டும்.

அடுத்து என்ன? புலிகள், தமது சொந்தக் கப்பலை பாதித் தொலைவுக்குக் கொண்டு வரவேண்டும். செங்கடலில், சூயஸ் கால்வாய் இணைப்பு ஏற்படும் Gulf of Suez பகுதிக்கு புலிகளின் கப்பல் வந்து காத்திருக்க வேண்டும். அல்ஜீரியாக் காரரின் ஆயுதக் கப்பல் அங்கே வந்து சேரும். கடலில் வைத்தே ஆயுதங்களை அந்தக் கப்பலில் இருந்து இந்தக் கப்பலுக்கு மாற்றி விடுவார்கள்.

Gulf of Suez பகுதிக்கு ஆயுதக் கப்பல் வந்து, ஆயுதங்களை சரிபார்த்த உடன், மீதி அரை மில்லியன் பவுண்ட்ஸை லண்டனில் வைத்து ட்ரவலர்ஸ் செக்காக (Travellers Cheques) கொடுத்துவிட வேண்டும். அந்த பணம் கிடைத்த பின்தான், புலிகளின் கப்பலில் ஆயுதங்கள் ஏற்றப்படும். இதுதான் டீல்.

முன்பணம் 1 மில்லியன் பவுண்ட்ஸ் அல்ஜீரியாக்காரருக்கு கொடுக்கப்பட்டது. மீதி, அரை மில்லியன் பவுண்ட்ஸை ட்ரவலர்ஸ் செக்காக எடுத்து, அமைச்சர் தமது லண்டன் வீட்டில் வைத்துக் கொண்டார்.

செங்கடலுக்கு கப்பலை கொண்டுவரும் ஏற்பாடுகளை செய்ய, சங்கர் மீண்டும் சென்னை திரும்பினார்.

புலிகளின் கப்பல் போக்குவரத்து அப்போது, வெளிநாட்டுப் பிரிவின் வசம் இருந் தது. அதனால், சங்கர் கேட்டபடி கப்பல் ஒன்றை அனுப்பி வைக்குமாறு புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வெளிநாட்டுப் பிரிவுக்கு தகவல் அனுப்பினார்.

டீலை இதுவரை முடித்துவிட்டு, சென்னையில் தங்கிவிட சங்கர் விரும்பவில்லை. எனவே அந்தக் கப்பலில் தானும் செல்ல வேண்டும் என்றார்.




புலிகளின் திருவான்மியூர் எம்.ஓ. அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்த மனோ மாஸ்டர் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். அவர்தான் அந்த நாட்களில், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அருகே டெக்னிகல் ஆலோசகர் போல செயற்பட்டவர். "சங்கரும் கப்பலில் போவதுதான் நல்லது" என்று கூறிய மனோ மாஸ்டர், "நானும் சங்கருடன் போகிறேன்" என்றார்.

சங்கர், மனோ மாஸ்டர் ஆகிய இருவருடன், தினேஷையும் அழைத்து செல்லுமாறு பிரபாகரன் கூறினார். இந்த தினேஷ், தமிழ்ச்செல்வன் அல்ல. (தமிழ்ச்செல்வனின் ஆரம்பகால பெயரும் தினேஷ்தான்) இவர் வேறு. அப்போது சென்னையில் பிரபா கரனின் கம்யூனிகேஷன் தொடர்பாளராக இருந்தவர் இந்த தினேஷ்.

ஒரு காரியத்துக்கு ஒருவரை அனுப்பினால், தமது நம்பிக்கைக்குரிய மற்றொருவ ரையும் சேர்த்து அனுப்புவது புலிகளின் தலைமையின் வழக்கம். அந்த வகை யில் தினேஷும் இதில் இணைக்கப்பட்டார்.

புலிகளின் கப்பல் ஒன்று சிங்கப்பூரில் இருந்து கிளம்பியது. அந்தக் கப்பல் செங் கடல் நோக்கிச் செல்லுமுன், இந்தியக் கடல் பகுதிக்குள் வந்தது. சென்னையில் இருந்து சங்கர், மனோ மாஸ்டர், தினேஷ் ஆகியோர் ஒரு படகு மூலமாக சென்று இந்தக் கப்பலில் ஏறிக் கொண்டனர். சின்னவர் என அழைக்கப்படும் ஒருவர்தான் கப்பலின் காப்டனாக அனுப்பி வைக்கப்பட்டார். கப்பலில் எஞ்ஜினியராக செயற் பட்டவர், சாந்தன். கப்பலில் சுமார் 20 புலிகள், மற்றும் மாலுமிகள் இருந்தனர்.

கப்பல், செங்கடலை நோக்கிச் செல்லத் தொடங்கியது. அமைச்சர் ஏற்பாடு செய்த லெபனான்காரரின் கப்பல் எப்போது வந்தது? அதில் என்ன ஆயுதங்கள் இருந்தன? அவற்றை அடுத்த அத்தியாயத்தில் தருகிறோம். **(தொடரும்)**

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# வாழ்க்கையில் வெற்றியாளராக வேண்டுமா?

## இதோ சில வழிமுறைகள், பயிற்சிகள்



கடந்த வார இதழில் வாழ்க்கையில் வெற்றியாளராவதற்கு உடல் மொழியைப் (body language) பயன்படுத்துவது பற்றிப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியை இப்போது பார்க்கலாம்.

முதலில் ஒரு விஷயத்தைக் கவனியுங்கள். உங்களுக்கு எதிரே நிற்பவரின் உடல் மொழியை வைத்தே (உங்களையே அறியாமல்) நீங்கள் அவரைக் கணிக்கிறீர்கள். அதே போல உங்களது உடல் மொழியை வைத்து அவர் உங்களைக் கணிக்கப் போகிறார். அவர் உங்களுக்குச் சாதகமாகச் செயற்படுவதும், பாதகமாகச் செயற்படுவதும் அந்தக் கணிப்பில்தான் தங்கியுள்ளது.

சாதகமாகச் செயற்பட்டால், வாழ்க்கையில் நீங்கள் வெற்றியாளராக மாறுவீர்கள்.

சரி. உடல் மொழி விஷயத்தில் உங்களை எப்படி மாற்றிக் கொண்டால், மற்றவர்களின் கணிப்பில் நீங்கள் உயர்வீர்கள்? இதோ சில டிப்ஸ்கள்.

**1) திறந்த நபராக உங்களைக் காட்டிக் கொள்ளுங்கள் (appear open).** அதாவது எதிரே இருப்பவர் எதைச் சொன்னாலும் முதலில் உள்வாங்கத் தயாராக இருப்பதாகக் காட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் சொல்வதைச் சொல்லுங்கள், நான் கேட்க மாட்டேன் (undefended) என்ற தோற்றம் உங்கள் உடல் மொழியில் ஒருபோதும் இருக்கவே கூடாது.

இதற்கு என்ன செய்யலாம்? மிகச் சுலபம். ஒருவருக்கு முன்னால் எழுந்து நிற்கும் போதோ, அமர்ந்திருக்கும் போதோ, உங்கள் கைகளை இரு பக்கமும் தளர்வாக வைத்திருங்கள். ஒருவருடன் பேசும்போது, கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டாதீர்கள். அவ்வளவுதான் விஷயம்.

எதிரே இருப்பவர், "நான் கூறப் போவதை இவர் கேட்கத் தயாராக இருக்கிறார்" என உங்களைப் பற்றி பாசிட்டிவ்வாக நினைக்கப் போகிறார்.

**2) ஒருவேளை நீங்கள் ஒருவருக்கு முன்னால் நின்றால், உங்கள் இடுப்பின் அகலத்துக்கு சமமான அகலத்தில் உங்கள் கால்களை சமப்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள் (Keep your feet hip width apart and balanced).**

நிற்கும்போது இடுப்பு அகலத்தைவிட கால்களை ஒடுக்கி வைத்தால், நீங்கள் ஒரு குறுகிய மனப்பான்மை உள்ள நபராக (narrow-minded person) எதிரே நிற்பவருக்குத் தெரிவீர்கள். இடுப்பு அகலத்தைவிட அதிக அகலத்தில் கால்களை அகட்டி வைத்திருந்தால், அலட்சிய மனப்பான்மை உள்ள நபராக எதிரே நிற்பவருக்குத் தோற்றம் கொடுப்பீர்கள்.

**3) எதிரே இருப்பவருக்கு முன்பாக ஒருவேளை நீங்கள் அமர்ந்திருந்தால், முள்ளந்தண்டை நேராக்கி, நேராக அமர்ந்திருங்கள்.**

தளர்வாக அமர்ந்து முன்புறமாகக் குனிந்த நிலையில் நீங்கள் இருந்தால், தன்னம்பிக்கை (self-confident) இல்லாத நபராக உங்களுக்கு முன்னால் அமர்ந்திருப்பவருக்குத் தென்படுவீர்கள். அமரும்போது உடலை நேராக வைத்திருக்காமல் பின்புறமாகச் சாய்ந்து அமர்ந்தால், நீங்கள் ஒரு சோம்பேறி என்ற நினைப்பை எதிரே இருப்பவருக்கு ஏற்படுத்தி விடுவீர்கள்.

4) அடுத்துச் சொல்லப் போவது, கொஞ்சம் கடினமானது. ஓரிரு விநாடிகளில் முடிவெடுத்து, உடனே செயற்படுத்த வேண்டிய விஷயம் இது. உங்களால் செய்ய முடியாது என்று தோன்றினால், செய்ய முயற்சிக்க வேண்டாம்.

அது என்னவென்றால், **எதிரே நிற்பவரைப் பார்த்த விநாடியில் அவரது உடல் மொழி அற்புதமாக, உங்களைக் கவரும் விதத்தில் இருந்தால், அதே உடல் மொழியை உங்கள் உடலிலும் கொண்டு வாருங்கள் (Mirror/Match the other person's posture).**

அப்படிச் செய்தால், "இவரும் நமது டைப் ஆள்" என்ற நினைப்பு எதிரே இருப்பவருக்கு ஏற்படும். உங்களுக்கு எந்த விதத்திலும் உதவத் தயாராகி விடுவார் அவர்.

இதற்கு நிறையவே பயிற்சி தேவை. உடனடி முடிவு எடுத்தல், உடனடி நடவடிக்கை எனச் சடுதியாகச் செய்ய வேண்டிய சமாச்சாரம் இது. நாம் ஏற்கனவே கூறியது போல, உங்களால் செய்ய முடியாது என்று நினைத்தால், புதிய ஆட்களின் முன்னால் செய்ய முயற்சிக்காதீர்கள். தவறாகச் செய்தால், தலைகீழான விளைவுகளை ஏற்படுத்தி விடும். வேண்டுமானால் பயிற்சிக்காக உங்கள் குடும்ப உறுப்பினர்கள், அல்லது நண்பர்கள் முன் செய்து பாருங்கள்.

5) இப்போது சொல்லப்போகும் உடல் மொழி, மிகவும் முக்கியமானது. **ஒருவருக்கு முன்னால் நிற்கும்போதோ, அமர்ந்திருக்கும் போதோ, சிறு உடல் அசைவுகள் இன்றி இருங்கள். இதை ஆங்கிலத்தில் fidgeting என்று சொல்வார்கள்.** பெரும்பாலும் கால்களையோ, கைகளையோ ஓயாமல் அசைப்பதையே இது குறிக்கும்.

இந்த fidgeting தான் உடல் மொழி விஷயத்தில் மேலை நாடுகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஒருவருக்கு எதிரே இருந்தோ, நின்றோ நீங்கள் கைகளையோ, கால்களையோ அசைத்துக் கொண்டு இருந்தால், நீங்கள் பொறுமையற்றவர் அல்லது, பதட்டப்படும் நபர் என்ற பிம்பத்தை எதிரேயிருப்பவருக்கு ஏற்படுத்தி விடும்.

கைகளை அசைப்பது என்பது, சும்மா அசைப்பது மட்டுமல்ல. நீங்கள் அணிந்திருக்கும் ஆடையைத் திருகுவது, சங்கிலி போன்ற ஆபரணங்களுடன் விரல்களால் விளையாடுவது, அணிந்துள்ள மோதிரத்தைத் தொடர்ச்சியாகத் தேய்ப்பது என பல நடவடிக்கைகள் இதில் அடங்கும்.



Fidgeting விஷயத்தில் மற்றொரு ஆய்வு முடிவையும் தெரிந்து கொள்ளுங்கள். இது எப்போதும் கெடுதலான விஷயம் அல்ல. எதிரே யாராவது இருக்கும்போது, அவரது நினைப்பில் உங்களை உயர்வாகக் காட்டிக் கொள்ள வேண்டுமென்றால்தான் இந்த அசைவைச் செய்யக்கூடாது என்கிறார், பிரிட்டனின் ஹேட்ஃபோர்ஷெயர் பல்கலைக் கழகத்தின் (University of Hertfordshire) ஆய்வாளர் டாக்டர் கரன் பைன் (Dr. Karen Pine).

அவரது ஆய்வின்படி, சிறுவர்கள் (மாணவர்கள்) இப்படியான சிறிய உடல் அசைவுகளைச் செய்வதன் மூலம், ஞாபக சக்தியையும், பயிலும் தன்மையையும் (memory and learning skills) அதிகரித்துக் கொள்கிறார்கள்.

எனவே, fidgeting தவறானதல்ல, தனிமையில் இருக்கும்போது செய்யலாம். உங்களுக்கு எதிரே இருப்பவரின் மனதில் உங்களைப் பற்றிய நினைப்பை அல்லது, இமேஜை உயர்த்திக் கொள்ள வேண்டுமானால், செய்ய வேண்டாம்.

உடல் மொழி பற்றிய மேலும் சில டிப்ஸ்களை அடுத்த இதழில் பார்க்கலாம். அதற்குமுன், இந்தத் தொடரில் கடந்த சில வாரங்களாக இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பான பயிற்சிக்காக, லொஜிக் புதிர் ஒன்றைப் பார்க்கலாம், வாருங்கள்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

கடந்தவாரம் புதிருக்கு கொடுக்கப்பட்டிருந்த குறிப்புக்களில் இருந்து, எந்த நண்பர், எந்த வாகனத்தில் எந்த மகளிர் பாடசாலைக்கு ரவுண்ட் அடிக்கப் போயிருக்கிறார் என்பதைக் கண்டு பிடித்தீர்களா?

எமது விடைகளுடன் நீங்கள் வைத்திருக்கும் விடைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.

1) திசை: வடக்கு
மாணவி: சாந்தி
பார்க்கச் செல்பவர்: ரவி
வாகனம்: சைக்கிள்

2) திசை: கிழக்கு
மாணவி: பிரியா
பார்க்கச் செல்பவர்: அசோக்
வாகனம்: கால்நடை

3) திசை: தெற்கு
மாணவி: சுகந்தி
பார்க்கச் செல்பவர்: அருணன்
வாகனம்: மோட்டார் சைக்கிள்

4) திசை: மேற்கு
மாணவி: மாலதி
பார்க்கச் செல்பவர்: ஜெயம்
வாகனம்: பஸ்



நீங்கள் வைத்திருக்கும் விடை மேலுள்ள விடையுடன் ஒத்துப்போனால், வாழ்த்துக் கள். ஒத்துவரவில்லையா? எங்கே சறுக்கினீர்கள்? குறிப்புக்களில் இருந்து எப்படி இந்த விடைவரை வந்தோம் என்று பார்க்கலாமா?

ரவி செல்வது வடக்குத் திசையில் (குறிப்பு இலக்கம்-4). மோட்டார் சைக்கிள் செல் வது தெற்குத் திசையில். ஆனால் அதில் செல்வது ஜெயம் அல்ல (குறிப்பு இலக் கம்-3). கால் நடையாகச் செல்பவர் அசோக் (குறிப்பு இலக்கம்-1)

மேலேயுள்ள மூன்று குறிப்புகளிலும் இருந்து, வடக்கு அல்லது தெற்கு நோக்கிச் செல்பவர் ஜெயம் அல்லது அசோக் அல்ல என்பது தெளிவாகிறது இல்லையா? ரவி வடக்கே செல்வதால் தெற்கே செல்பவர் அருணனாகத்தான் இருக்க வேண் டும். அவர் செல்லும் வாகனம் மோட்டார் சைக்கிள். அவர் பார்க்கச் செல்லும் அம் மணி சுகந்தி (குறிப்பு-4)

அதே குறிப்பு இலக்கம்-4ன்படி, அருணன் செல்லும் திசை சைக்கிளில் செல்ப வரது திசைக்கு நேரெதிர் திசை. இதனால் வடக்கே ரவி செல்வது சைக்கிளில் என்று தெரியவருகிறது. அவர் தரிசிக்கச் செல்வது சாந்தியை என்றும் புரிகிறது.

இப்போது வடக்கு, தெற்கு ஆகிய இரு திசைகளிலும் செல்பவர், வாகனம், மாணவி மூன்றும் தெரியவந்து விட்டது. இனி கிழக்கையும் மேற்கையும் கவனி யுங்கள், விடையை நெருங்கி விடலாம்.

மாலதியின் பாடசாலை கிழக்கில் இல்லை (குறிப்பு இலக்கம்-6) என்பதால் அது இருப்பது மேற்கில். எனவே கிழக்குத் திசையிலிருக்கும் பாடசாலையில் படிப்பவர், பிரியா என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

பிரியாவின் பாடசாலைக்கு பஸ்ஸில் போகமுடியாது (குறிப்பு இலக்கம்-2) என்ப தால் மீதமாயிருப்பது கால்நடையாகச் செல்வது. அப்படியானால் மாலதியின் பாட சாலைக்கு பஸ்சில் போகிறார் நமது நண்பர்.

மீண்டும் குறிப்பு-1க்கு வாருங்கள். கால் நடையாகச் செல்பவர் அசோக் என்பதால், அவர் செல்வது கிழக்கே, பிரியாவைப் பார்க்க.

மிகுதி இருப்பது ஒரேயொரு நண்பர். அவர்தான் ஜெயம். மாலதியைப் பார்க்கப் பஸ் பிடித்து மேற்குத் திசையில் போகிறார்.

## இதோ, இவ்வாரப் புதிர்

கடந்த வாரப் புதிரில் கூறப்பட்ட நான்கு அம்மணிகளும்தான் இந்த வாரப் புதிரின் கதாநாயகிகள். இவர்கள் நான்கு பேரின் பாடசாலைகளும் வெவ்வேறு திசைகளில் இருந்தாலும் இவர்கள் ஒரே இடத்துக்குத்தான் டியூஷனுக்குப் போகிறார்கள். டியூ ஷன் முடிந்ததும் தங்களது வீட்டில் இருந்து கொண்டு சென்ற சிற்றுண்டியை உண் கிறார்கள். நான்கு பெண்கள் ஒன்றாக இருந்து சாப்பிடுகிறார்கள் என்றால், சாப் பிடுவதற்கு மாத்திரம்தானா வாயை அசைப்பார்கள்?

ஒரு போதும் இல்லை. ஊர்வம்பு பேசுவார்கள், இல்லையா? பேசினார்கள். இந்த வாரப் புதிரே அவர்கள் என்ன சாப்பிடுகிறார்கள், என்ன ஊர்வம்பு பேசுகிறார்கள் என்பதை வைத்துத்தான்!

இதோ விபரங்கள்

**பெண்கள்:**
சாந்தி
பிரியா
சுகந்தி
மாலதி

**சிற்றுண்டி:**
கேக்
ரோல்ஸ்
முறுக்கு
போண்டா



**ஊர்வம்பு:**
"கெமிஸ்ட்ரி டீச்சர் பொல்லாதவர்"
"பக்கத்து ஸ்கூல் மாணவர்கள் மோசம்"
"விஜிதாவுக்கு அழகி என்று தலைக்கனம்"
"மாமிக்கு சமைக்கத் தெரியாது"

சரி. கீழே கொடுக்கப்படும் குறிப்புக்களில் இருந்து எந்த மாணவி, என்ன உணவைக் கொறித்தபடி யாரைப்பற்றி கொசிப் அடிக்கிறார் என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

1) மூன்றாவதாக அமர்ந்திருக்கும் மாணவி பேசும் ஊர் வம்பு, விஜிதா (பாவம். அவர் இவர்களுடன் இல்லை.) தன்னை ஒரு பேரழகியாக நினைத்து தலைக் கனத்துடன் திரிகிறார் என்பது.

2) கையிலிருந்த போண்டாவைச் சுவைத்தபடியே பக்கத்து ஸ்கூல் மாணவர்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் பெண் அமர்ந்திருப்பது சாந்தி அமர்ந்திருக்கும் இடத்தைவிட குறைவான இலக்கம் இடப்பட்டுள்ள கதிரையில். (அதாவது சாந்தி அமர்ந்திருப்பது கதிரை இலக்கம்-3 என்றால், இவர் அமர்ந்திருப்பது கதிரை இல க்கம்-1 அல்லது 2)

3) நம்ம மாலதி அமர்ந்திருப்பது எங்கேயென்றால், மாமியின் சமையறைப் பற்றி வம்பு பேசிக்கொண்டிருப்பவருக்கு அடுத்த கதிரையில் இடது புறமாக. அத்துடன், ரோல்ஸ் சாப்பிட்டுக் கொண்டிருப்பவருக்கு அடுத்ததாக வலது புறமாக.



4) ரோல்ஸ் சாப்பிடுபவர் கதிரை இலக்கம்-4ல் அமர்ந்திருக்கவில்லை.

5) பிரியா இருக்கும் திசையிலிருந்து கடக்முடக் என்று சத்தம் வருகிறதா, பயப்ப டாதீர்கள். அவர் வீட்டிலிருந்து எடுத்துவந்த முறுக்கை நொறுக்கிக் கொண்டிருக் கிறார். (மா பதம் தவறி விட்டதாம்!)

6) சுகந்தி அமர்ந்திருக்கும் கதிரை மேசையைச் சுற்றி வரும்போது கெமிஸ்ட்ரி டீச்சர் பற்றி வம்பு பேசிக்கொண்டிருப்பவரின் கதிரையிலிருந்து இரண்டு கதிரைகள் தள்ளி மூன்றாவதாக இருக்கிறது. (மேசையைச் சுற்றி வரும்போது என்பதைக் கவ னியுங்கள். அதாவது கதிரை இலக்கம்-3 என்றால் அதிலிருந்து 2 கதிரைகளை இடதுபுறமாக சுற்றினால் கதிரை இலக்கம்-2 வரும். வலது புறமாக சுற்றினால் கதிரை இலக்கம்-4 வரும்.)

உஷ்... ரகசியமாக ஒரு டிப்ஸ்

கதிரை இலக்கம்-1ல் அமர்ந்திருப்பவரின் பெயரை முதலில் கண்டுபிடிக்கப் பாரு ங்கள். அது தெரியவந்து விட்டால் மிகுதி சுலபம்.

சரியான விடைகளை அடுத்த இதழில் தருகிறோம்.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

# இப்போது என்ன நடக்கிறது புதுக்குடியிருப்பில்?

வன்னி வளநாட்டிலே அடர்த்தியான சனத்தொகையினைக் கொண்ட வளம் மிக்க புதுக்குடியிருப்பு பகுதி பற்றியும், அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்களுடைய தேவைகள் பற்றியும், புதுக்குடியிருப்பின் கல்விக் கண்ணாக இருக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி பற்றியும் இந்தக் கட்டுரையில் பார்க்கப்போகிறோம்.

வன்னியில் பல திசைகளில் இருந்தும் போய்ச் சேரக்கூடிய இடம், புதுக்குடியிருப்பு. வடக்கு மாகாணம், முல்லைத்தீவு மாவட்டத்தில், யாழ்குடாநாட்டுக்கு தெற்கே, வன்னியில், வடக்கு நோக்கி இரணைப்பாலைக்கும், கிழக்கு நோக்கி முல்லைத்தீவிற்கும், தெற்கே ஒட்டுசுட்டானுக்கும் மேற்கே பரந்தனுக்கும் வழிவகுக்கும் நான்கு முக்கிய சாலைகளும் சந்திக்கின்ற இடத்தில் அமைந்துள்ள, 1009 சதுர கிலோ மீட்டர் கொண்ட ஒரு சிறுநகரமே புதுக்குடியிருப்பு.

ஒவ்வொரு கிராமங்களும், நகரங்களும் உருவாவதற்கு அடிப்படையில் ஓர் காரணம் இருக்கும். ஏதேனும் ஓர் மூலவளத்தினை மையமாகக் கொண்டு குடியிருப்புக்கள் அமைக்கப்படும். அந்த குடியிருப்புக்கள் செறிந்து அந்த இடம் ஒரு கிராமமாக மாறும். கிராமம் படிப்படையாக வளர்ச்சியடைந்து நகரமாக பரிணமிக்கும்.

மூலவளம் என்று பார்க்கும்போது ஆரம்ப காலங்களில் நீர்நிலைகளை அண்டியும், விவசாய நிலங்களை மையப்படுத்தியும், கனியவளப் பரம்பலை அடிப்படையாகக் கொண்டும், கடற்கரையினை அண்டியும் மக்கள் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வது வழக்கம். அந்த வகையில், புதுக்குடியிருப்பு, விவசாய நிலத்தினை மூலவளமாக கொண்டு உருவான பகுதி.

காடுவெட்டி களனி செய்வார்கள். அப்படி செய்யப்படும் பயிர்செய்கையினை சேனைப்பயிர்செய்கை என்பார்கள். அவ்வாறு சேனைப்பயிர்செய்கைகாக (விவசாய நோக்கத்திற்காக) உருவாக்கப்பட்ட கிராமமே இந்த புதுக்குடியிருப்பு.

புதுக்குடியிருப்பு எப்படி உருவாகியது? அதற்கு சுவாரசியமான ஒரு பின்னணி உண்டு. வில் விளையாடிய காட்டினை உடைய முல்லை நிலத்தினை நெல் ஆடுகின்ற மருதநிலமாக மாற்றி (இதற்கு ஆதாரமாக புதுக்குடியிருப்புக்கு வெளியே தெற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளில் இப்போதும் காட்டின் பரம்பலை பார்க்கலாம்) புதுக்குடியிருப்புக்கு அடித்தளம் போடப்பட்டது. அதன்பின், அந்த மருத நிலத்தினைப் பண்படுத்தி பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக் குடியிருப்புக்களை அமைத்தார்கள். இப்படித்தான் புதுக்குடியிருப்பு முதலில் ஒரு சிறிய கிராமமாக மாறியது.

கிராமம் வளர்ச்சியடைந்து நகரமாக மாறியது. அப்படி மாறிய சிறுநகரமே தற்போதுள்ள புதுக்குடியிருப்பு நகரம்.

பச்சைப்பசேல் என்ற வயல்வெளியினை உடைய புதுக்குடியிருப்பு பகுதியில் என்ன தான் இயற்கையான வளங்கள் ( நீர்வளம், நிலவளம், மண்வளம்) இருந்தாலும் இயற்கையோடு மட்டும் மனிதன் ஒன்றி வாழ்ந்துவிட முடியுமா? இல்லை. நவீன யுகத்தில் வாழ மனித முயற்சிகளால் உருவாகும் செயற்கையான வளங்களும் வேண்டுமல்லவா? அந்தத் தேவை புதுக்குடியிருப்பு நகருக்கு இன்னமும் உள்ளது. உட்கட்டமைப்பு வசதி என்று பார்க்கும் போது தேவை நிறைந்த ஒரு இடமாகத் தான் புதுக்குடியிருப்பு இருக்கிறது.

புதுக்குடியிருப்பு மக்களின் வாழ்வாதாரம் என்று பார்க்கும்போது இவர்கள் தமது பிரதான தொழிலாக வேளாண்மையினையும், அடுத்தபடியாக மீன்பிடித் தொழிலினையும் மேற்கொள்கிறார்கள். வேளாண்மையிலே நெற்பயிற்செய்கைக்கு பெயர் போன ஒரு இடம் என்று கூறலாம். ஆரம்பத்தில் இருந்து இன்றுவரை புதுக்குடியிருப்பு மக்களின் வீட்டின் ஒரு அறையினை நெற்களஞ்சியமாக ஒதுக்கி விடும் வழக்கம் உள்ளது. அந்தளவுக்கு நெற்பயிற்செய்கை இங்கே இடம்பெறுகிறது.

ஆனால் தற்போது நெற் பயிற்செய்கையினை சிறப்பாக செய்ய முடியாத நிலைக்கு இம் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மூன்று போகம் செய்ய வேண்டிய இடத்திலே இரு போகம் செய்வதற்குக் கூட நீரிற்காக அல்லாட வேண்டிய நிலை!

இந்தப் பகுதி மக்கள் மாரி மழையினை நம்பி பெரும்போக நெற் செய்கையினையும், மழை நீரைத்தேக்கி வைக்கும் குளத்து நீரினை நம்பி சிறுபோக நெற் செய்கையினையும் மேற்கொண்டு வரும் நிலையில் மழைப் பற்றாக்குறை, குளத்து நீர் போதாமையினால் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இம்மக்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தும் குளம் முத்தையன் கட்டு.

புதுக்குடியிருப்பிற்கு தென்மேற்குத் திசையிலே 40.9 கி.மீ தொலைவில் அமைந்துள்ள முத்தையன் கட்டுக் குளத்தின் பண்ட் 5850 அடி (1783 மீ) நீளமும், 27




அடி (8 மீ) உயரமும் கொண்டதோடு, 41000 ஏக்கர் (50572755மீட்டர் கனம்) கொள்ளளவும், 3100 ஏக்கர்(1255 ஹெக்டர்) பரப்பளவும், வலது புறத்தில் 500 அடி(152 மீ) கசிவும், இடது மற்றும் வலது வங்கி சாய்வுகள் ஒவ்வொன்றும் 3 அடி 3 அங்குலமும், 4 அடி 6 அங்குலமும் உடையவை.

2014ம் ஆண்டு முத்தையன் கட்டுக் குளத்தில் இருந்து 6100 ஏக்கர் (2469 ஹெக்டர்) நிலத்துக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டது. இந்த முத்தையன் கட்டுக் குளத்தினை ஆழப்படுத்துவதன் மூலமும், குளத்தினுடைய அகலத்தினை அதிகரித்து மழை நீரை சேகரிக்கும் அளவினை அதிகரிப்பதன் மூலமும், குளத்தினுடைய பண்டினைப் பலப்படுத்துவதன் மூலமும் குளத்தின் நீர்க் கொள்ளளவை அதிகரிக்க முடியும்.



மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் இன்றைய அதிபர்

வரம்புயர நீருயரும், நீருயர நெல் உயரும், நெல் உயர குடி உயரும், குடி உயர கோன் உயர்வான் என்பதற்கு ஏற்ப, குளத்திலிருந்து புதுக்குடியிருப்புக்கு நீர் எடுத்துச் செல்லும் கால்வாயினை பெருப்பிப்பதன் மூலம் அங்கு கொண்டு செல்லும் நீரின் அளவினை அதிகரிக்க முடியும். அப்படி அதிகரிக்கும்போது, புதுக்குடியிருப்பில் செய்யப்படும் நெற்செய்கையின் அளவினையும் அதிகரிக்க முடியும்.

சரி. புதுக்குடியிருப்பில் நீர்ப்பற்றாக்குறை விவசாயத்தில் மட்டும் தானா? இல்லை.

புதுக்குடியிருப்பின் சில பகுதிகளில், குடிநீர் தட்டுப்பாடும் தற்போது நிலவுகிறது. ஆரம்பத்தில் நன்னீராய் இருந்த சில கிணறுகள் யுத்தத்தில் இரசாயனப் பொருட்களின் பாவனையினால் உவர் நீர்க்கிணறுகளாக மாற்றப்பட்டதை அடுத்து, நன்னீர் பற்றாக்குறையும் சில பகுதிகளில் நிலவுகின்றது.

இதனால், குறிப்பிட்ட ஒருசில இடங்களில் உள்ள கிணறுகளையே மக்கள் நாடிச் செல்கின்றனர். எனினும் அந்த நீரும் சுத்தமான நன்னீராக இல்லாத நிலையில் தண்ணீர்ப் பிரச்சினையினைத் தீர்ப்பதற்காக குளாய் மூலம் நன்னீர் வளங்கும் நோக்கத்துடன் நீர்த்தாங்கி அமைக்கும் பணியும் இடம்பெற்று வருகிறது.

உட்கட்டமைப்பு வசதிகளில் போக்குவரத்திற்கு முக்கிய இடமுண்டு. புதுக்குடியிருப்பைப் பொறுத்தவரை இருக்கின்ற பெரும்பாலான வீதிகள் தார் போடப்பட்ட பாவனைக்குகந்த வீதிகளாக இருக்கின்ற போதிலும்

அடுத்த பக்கம் வருங்கள் ➡

நகரின் உட்புறமாக இருக்கின்ற சிறிய வீதிகள் குன்றும் குழியும், கற்களும் புழுதியும் நிறைந்த கிரவல் வீதிகளாக இருக்கின்றன. மழைக் காலங்களில் சேறும் சகதியுமாக இருக்கும் இந்த வீதியினால் போக்கு வரத்தினை மேற்கொள்வதில் மக்கள் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

அதைவிட புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் முல்லைத்தீவு நெடுஞ்சாலையில் இருக்கின்ற வட்டுவாகல் பாலம் மிகவும் அபாயகரமான நிலையில் பாதுகாப்பற்ற பாலமாக இருக்கின்றது. குறுகிய பாலமாகவும், பாலத்தின் இருமருங்கிலும் பாதுகாப்புவேலி போடப்படாமலும் இருக்கின்ற இந்தப் பாலத்தினை பாதுகாப்பான பாலமாக மாற்றியமைக்கும்வரை பயணத்தை மெற்கொள்வது சிரமமான காரியம் தான். இந்தப்பாலத்தினை புனரமைப்பு செய்வதன் மூலம் அந்தப்பகுதியினுடான பயணத்தினை இலகுவாகவும், பாதுகாப்பாகவும் மேற்கொள்ள முடியும்.

யுத்தம் காரணமாக தன் நிலையினை இழந்து இப்போது மீண்டும் துளிர்விடும் மரம் போல் வளர்ந்துவரும் புதுக்குடியிருப்பு 2013 / 2014ல் சிறந்த உற்பத்தித்திற னுக்கான (productivity) விருதைப் பெற்றுக்கொண்டது. இதற்கு பிரதான காரணம் நிலம், மூலதனம், முயற்சி, மனிதவளம், தகவல், நேரம் போன்ற அனைத்தும் இங்கே சிறப்பாகக் காணப்படுகின்றன. இருப்பினும் தொழில் முயற்சிகள் வணிக சந்தர்ப்பங்களை (Business opportunities) இனங்காணுவதிலும், ஆபத்தை எதிர் கொள்வதிலும் (Risk Taking) சிரமத்தை எதிர்கொள்கின்றனர்.

அரசினால் புதிய பல தொழில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டால், இப்பகுதி மக்களின் பொருளாதாரத்தை அதிகரிக்க முடியும். இதன் மூலம் வன்னிப் பகுதி யின் பொருளாதாரமும் அதிகரிக்கும். இங்கு யுத்தத்திற்கு முன்பு காணப்பட்ட தெங்குசார் உற்பத்திகளை இன்று காண முடியவில்லை. இதனால் தெங்கு மூலப்பொருட்களையே குறைந்த விலைக்கு விற்பனை செய்கின்றனர். ஆனால் தொழிற்சாலைகளை நிறுவி இந்த மூலப்பொருட்களை முடிவுப்பொருட்களாக மாற்றுவதன் மூலம் அதிக இலாபம் பெறலாம்.

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித் தொழிலையும் மேற்கொள்ளுகின்றனர். இதிலும் இவர்கள் அதிக இலாபம் பெறும் வழிகள் இருக்கின்றன. அதில் ஒன்றினைத்தான் நாங்கள் இப்போது பார்க்கப்போகிறோம்.

யுத்தத்திற்கு முன்னர் இந்தப்பகுதியிலே இறால் வளர்ப்புத்திட்டம் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் இடையில் ஏற்பட்ட யுத்தம் இந்தத் திட்டத்தை முறி யடித்தது. ஆனால் நாட்டில் தற்போதிருக்கின்ற அமைதியான சூழ்நிலையில் இந்த இறால் வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அது இப்பகுதி மக்களிற்கு மட்டுமல் லாது நாட்டிற்கும் நன்மை பயக்கும்.

இன்னும் புதுக்குடியிருப்புப் பகுதியில் ஆரம்பிக்கக்கூடிய தொழில் முயற்சிகளுக்கு அரசு ஆதரவு வளங்குவதன் மூலம் இப்பகுதி மக்களின் வாழ்க்கை தரம் உயர் வதோடு நாட்டிற்கும் நன்மை ஏற்படும்.

அதிகளவான விவசாயக் குடிமக்களைக் கொண்டு சிறு கிராமமாக இருந்த புதுக் குடியிருப்பு கல்வி அறிவில் சிறந்து, அரச ஊழியர்களையும் தன்னகத்தே கொண்டு இன்று ஒரு நகரமாக மாற்றமடைவதற்குக் காரணமாக இருந்த பாடசாலைதான் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி. இப்பகுதி மக்களின் கல்விக்கண் திறக்க திறவு கோலாக இருந்த பாடசாலை இது என்றுதான் கூற வேண்டும்.

அப்படி என்றால் இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட முன்னர் இந்தப் பகுதியில் வேறு பாடசாலைகள் இல்லையா என்ற கேள்வி உங்களுடைய மனதிலே தோன றலாம். இருந்தன. ஒன்றல்ல இரண்டு பாடசாலைகள். ஆனால் 5ம் தரம் வரை கல்வி கற்கக் கூடிய ஆரம்பப் பாடசாலைகள் அவை.

மக்கள் மத்தியில் கல்வி அறிவைப் புகட்டவும், இந்து சமயத்தைக் கற்க வேண்டும் என்ற மாணவர்களின் ஏக்கத்தைப் போக்கவும், 1955ம் ஆண்டு மு.நேசரத்தினம் அவர்களால் இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் அதி பரும் அவரே.

1955ம் ஆண்டு புதுக்குடியிருப்பில் வீடுகளே கொட்டில்களாக இருந்த காலம் அது. பாடசாலை மட்டும் எப்படி அமைக்கப்படும்? 120x20 அடி கொண்ட கொட்டிலில்தான் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் மாத்தளனைச் சேர்ந்த குமரேசர் என்பவரால் கந்தசுவாமி கோவிலுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 2 ஏக்கர் காணியில்தான் ஆரம்பமானது.

ஆரம்பத்தில் மீனாட்சி வித்தியாசாலை எனவும், பின்னர் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி யாசாலை எனவும் அழைக்கப்பட்ட வித்தியாசாலை பின்னர் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம் என தரமுயர்த்தப்பட்டு இன்று மத்திய கல்லூரி என வளர்ந்து நிற் கிறது. மாணவர் தொகை அதிகரிக்க கொட்டில்கள், நிரந்தரக் கட்டடங்கள் ஆக்கப்பட்டன. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு மக்கள் உதவியாக இருப்பார்கள், அரசு உதவியாக இருக்கும். ஏன் வேறு நிறுவனங்கள் கூட உதவியாக இருக்கும். ஆனால் இந்தப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது எது தெரியுமா? கிராமிய நடனங்கள்!




ஆம்! இந்தப்பாடசாலையின் ஆசிரியர்களும், மாணவர்களும் வீடுவீடாகச்சென்று கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகளை நடாத்தி பணம் சேகரித்தனர். அந்த பணம் இப் பாடசாலை வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருந்திருக்கிறது.

1962ல் இப்பாடசாலை அரச பாடசாலையாக மாறியது. அதுவரை காலமும் க.பொ.த சாதாரண வகுப்பு வரை இருந்த இந்தப் பாடசாலையில் 1964ல் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டதோடு IC தரத்திற்கு வந்தது. அத னைத் தொடர்ந்து வர்த்தகம், மருத்துவம், பொறியியல், பற்சிகிச்சை மருத்துவம், விவசாய விஞ்ஞானம் போன்ற பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1986 இல் கொத்த ணியமைப்பு முறையில் மூலாதாரப் பாடசாலையானது.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சிப் படியிலும் சறுக்கல்கள் ஏற்பட்டன. பல சவால் களைச் சந்தித்த இந்தப் பாடசாலைக்கு ஏற்பட்ட ஒரு சவால் தான் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம். கல்வியிலே வானை எட்ட ஓடிய மாணவர்களின் காலைப் பிடித்து இழுத்தது, யுத்தம்.



1985,1986 இல் ஏற்பட்ட யுத்தத்தில் எதிர்நீச்சல் போட்ட பாடசாலையை 1987ல் வந்த இந்திய அமைதிப்படை இயங்காது தடுத்தது. புதுக்குடியிருப்பு சூனியப் பிரதேசமானது. பாடசாலை முகாமானது. குட்டியை வாயில் கௌவிய பூனை அதனை வீடு வீடாகக் கொண்டு செல்வதைப் போல மாணவர்களைத் தாங்கிய இந்தப் பாடசாலையும் மாணவர்களுடன் ஒவ்வொரு பாடசாலைக்கும் மாறி மாறி நகர்ந்தது. யுத்தம் காரணமாக இந்தப் பாடசாலை, புதுக்குடியிருப்பு றோ.க பாடசாலைக்கும், அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலைக்கும் நகர்த்தப்பட்டு, இறுதியில் தற்போதைய இடத்திற்கு நகர்ந்து நிலை கொண்டது.

இந்தப் பாடசாலை கல்வியையும், ஒழுக்கத்தையும் மாணவர்களுக்குப் புகட்டுவ தோடு மட்டும் நின்று விட்டதா? இல்லை. பல்வேறு காரணங்களினால் தமது இருப்பிடங்களை இழந்து நிர்க்கதியாய் நின்ற மக்களை அரவணைத்து தன் மடியிலே இடமளித்த பெருமையும் இந்தக்கல்லூரி அன்னையையே சாரும். வெவ் வேறு காலப்பகுதிகளில் பல்வேறு காரணங்களினால் இடம் பெயர்ந்த மக்கள் அகதிகளாக இங்கே அடைக்கலம் புகுந்தனர்.

1995ல் யாழில் இருந்து யுத்தம் எனும் பாம்பு துரத்தி வர ஓடி வந்த மக்களும், 1997ல் ஜெயசிக்குறு நடவடிக்கையால் இடம் பெயர்ந்த மக்களும், 2004ம் ஆண்டு கோபம் கொண்டு பொங்கி எழுந்த ஆழ்கடல் அன்னையின் அலைக்கரங் களில் (சுனாமி அலை) சிக்கி இடம்பெயர்ந்த முல்லை மக்களும் இப் பாடசாலை யிலையே தஞ்சமடைந்தனர். மக்களுக்கு மட்டுமல்லாது ஒலுமடு தமிழ் வித்தியா லயம், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கும் தன்னகத்தே இடமளித்தது புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியை மாணவர்கள், வாண்மைச்சிறப்புடைய ஆசிரியர்கள், விழிப்பான பாடசாலைச் சமூகம், ஊக்கு விக்கும் கல்வி நிர்வாகம், தெளிவான பழைய மாணவர்கள் என அனைவரும் தாங்கு துண்களாக நின்று கட்டி எழுப்பி தற்போதுள்ள நிலையை அடைய வைத்துள்ளனர்.

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

கடந்த அத்தியாயங்களில்...

1997ம் ஆண்டு, ஜெருசலேம் நகரச் சந்தையில் இரண்டு வெடிகுண்டுகள் வெடித்தன. ஒரு இயக்கத்தின் இரு தற்கொலைப் போராளிகள் தமது உடலில் இருந்த வெடி குண்டுகளை வெடிக்க வைத்ததில், சந்தையில் இருந்த 15 பேர் கொல்லப்பட்டனர். 157 பேர் காயமடைந்திருந்தனர். இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நிடான்யாகு உளவுத்துறை மொசாத்தின் தலைவரை (டானி யாடொம்) அழைத்து, அந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு உத்தரவு கொடுத்த நபர் யார் என்று அறியுமாறு சொன்னார். மொசாத் தகவல் சேகரித்ததில், ஹமாஸ் இயக்கத்தின் ஒரு பிரிவின் தலைவரான காலித் மார்ஷல்தான், அந்தத் தாக்குதலை நடத்த உத்தரவிட்டார் என்று அவர்க ளுக்குத் தெரியவந்தது. பிரதமர் உடனே, காலித் மார்ஷலை கொலை செய்யும்படி மொசாத்தின் தலைவருக்கு உத்தரவிட்டார், "கொலையின் பின்னணியில் இஸ்ரேல் நாடோ இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத்தோ இருப்பது தெரியக்கூடாது" என்ற நிபந்தனையுடன். இதோ இந்த அத்தியாயத்தில் கொலையைத் திட்டமிடுகிறார் இஸ்ரே லிய உளவுத்துறை மொசாத்தின் தலைவர் டானி...

# உளவுத்துறை மொசாத்தின் வி.ஐ.பி. கொலைத் திட்டம்

## அத்தியாயம் மூன்று
## கொலைக்கு தந்திரமான ஒரு ஆயுதம்!

இஸ்ரேலிய உளவுத்துறை மொசாத் இதற்கு முன்னரும் பல அர சியல் கொலைகளைச் செய்திருந்தது. எந்த உளவுத்துறைதான் அரசியல் கொலைகளை செய்யவில்லை? ஆனால், ஒரு இஸ் ரேலியப் பிரதமர் தனிப்பட்ட முறையில் ஒரு கொலையில் ஆர் வம் எடுத்து, திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பங்கெடுத்துக் கொண்டது, அதுதான் முதல் தடவை.

பிரதமரின் உத்தரவுப்படி மொசாத் கொலை செய்யத் திட்டமிட்ட காலித் மார்ஷ லுக்கு அப்போது வயது 41. முழுமையாக தாடி வைத்திருந்த, திடகாத்திரமான மனிதர். ஜோர்தான் நாட்டில் அமான் நகரில்தான் அவரது வீடு இருந்தது. ஜோர் தான் மன்னர் ஹூசேனின் மாளிகைக்கு மிக அருகில் வசித்த மார்ஷலுக்கு மன்ன ருடன் நெருங்கிய தொடர்புகள் இருந்தன. வீட்டில் நல்ல கணவராகவும், நல்ல தந்தையாகவும் (ஏழு குழந்தைகள்) இருந்தார்.

அவர் தலைவராக இருந்த ஹமாஸ் அரசியல் பிரிவு மிக பிரபலமான அமைப்பாக இருந்தாலும், இவர் வெளியே பொது மக்களிடையே பெரிதாக வருவதில்லை.

இவரைக் குறி வைக்க மொசாத் முடிவு செய்ததும், மொசாத்தின் இஸ்ரேலியத் தலைமையகத்திலிருந்து உளவாளி ஒருவர் சிறப்பு அசைன்மெண்ட் ஒன்று கொடுக் கப்பட்டு ஜோர்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரது வேலை மார்ஷலின் தினசரி நடமாட்டங்களைக் கண்காணிப்பது.




காலித் மார்ஷல்

ஜோர்தானில் இருந்த மொசாத்தின் அலுவலகத்துக்குக் கூட, இந்த உளவாளி அனு ப்பி வைக்கப்பட்ட விபரம் கூறப்பட்டிருக்கவில்லை அந்தளவுக்கு ரகசியமாக அலு வல்கள் நடைபெற்றன.

சுமார் ஒரு மாதகால தீவிர கண்காணிப்பின் பின்னர், மார்ஷலின் நடவடிக்கைகள் எல்லாம் மொசாத்துக்கு அத்துப்படியாகி விட்டிருந்தன. அத்துடன் பல கோணங் களில் எடுக்கப்பட்ட அவரது போட்டோக்களும் இஸ்ரேல் வரை வந்து சேர்ந்தன. முன்னேற்பாடுகள் எல்லாம் முடிவடைந்து விட்டன. அடுத்த கட்டம், கொலைக்கான திட்டமிடல். அதைச் செய்வதற்குமுன் டானிக்கு மற்றொரு வேலை இருந்தது.

மொசாத்தின் தலைவர் டானி, திட்டமிடுவதற்கு முன்னர், மறுபடியும் ஒரு தடவை பிரதமரை சந்தித்தார். "இந்தக் கொலை மிகப்பெரிய அரசியல் சூறாவளி ஒன்றை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தி விடலாம்" என்று எச்சரித்தார்.

தமக்கு தெரியும் என்பதுபோல தலையசைத்தார், பிரதமர் பிபி.

"நிச்சயமாக இந்த திட்டத்தை நிறைவேற்றத்தான் போகிறீர்களா?"

"நிச்சயமாக.. அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை"

பிரதமர் உறுதியுடன் இருப்பது தெரிந்தது.

"அப்படியானால் சரி. எமது ஆபரேஷனை தொடங்குமுன், இதை உறுதி செய்து கொள்ள விரும்பினேன்.. அவ்வளவுதான்" என்று கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றார்.

நேரே உளவுத்துறை மொசாத்தின் தலைமையகத்துக்குச் சென்ற டானி, அடுத்த கட்டத் திட்டமிடலை ஆரம்பித்தார்.

முதலில் கொலைக்கான கருவி எது என்பதை முடிவு செய்ய விரும்பினார்.

காரணம், காலித் மார்ஷல் கொல்லப்பட்டதும், ஜோர்தான் உளவுத்துறையின் சந் தேகம் முதலில் மொசாத் மீதுதான் இருக்கும். அந்த சந்தேகத்தை குழப்பிவிட வேண்டுமென்றால், அதற்கு ஒரே வழி, கொலைக்கு பயன்படுத்தப்படும் ஆயுதத்தை வைத்துதான் குழப்ப வேண்டும்.

இப்படியான ஆயுதம் மொசாத்தால் பயன்படுத்தப்படுவதில்லையே என்ற ஒரு நினைப்பு ஜோர்தானிய உளவுத் துறைக்கு வந்தாலே போதுமானது. அதன்பின் வேறு சில லீலைகள் செய்து சந்தேகத்தை வேறு பார்ட்டியின் பக்கமாக திருப்பி விட லாம் என்ற ரீதியில் சிந்தித்தார் அவர்.

அப்படி குழப்பி விடக்கூடிய ஆயுதம் எது? தமது அலுவ லக அறையில் அமர்ந்தபடி யோசிக்க தொடங்கினார் உள வுத்துறை மொசாத்தின் தலைவர் டானி.

கொலை நடைபெற வேண்டிய இடம் ஜோர்தான் நாடு. இதனால், வழமையான பாணியிலான வெடிகுண்டுத் தாக் குதல்களை செய்ய டானி விரும்பவில்லை. காரணம், ஜோர்தானியர்கள் வெடிகுண்டு விஷயத்தில் கில்லாடிகள். வெடி குண்டுகள் எங்கிருந்து தயாரிக்கப்பட்டன என்பதை சுலபமாகக் கண்டுபிடித்து விடுவார்கள்.

அதேபோல நேரடியாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொல் வதையும் தவிர்க்க விரும்பினார். ஏராளமான சாட்சிகள் ஏற்பட்டு விடுவார்கள். ஏதோ ஒரு காலத்தில் அந்தச் சாட் சிகள் மூலமாக சுட்ட நபரின் அடையாளங்கள் வெளியே தெரியவந்து மொசாத் மாட்டிக்கொண்டு விடலாம்.

எனவே புதிய வகை ஆயுதம் ஒன்றை இந்தக் கொலை க்கு உபயோகிக்க வேண்டும் என தலையை உடைத்துக் கொண்டு யோசித்து, ஒரு ஆயுதத்தை தேர்ந்தெடுத்தார்.

அந்த ஆயுதம், Nerve Agent! (ஒருவித கெமிக்கல் விஷம்)

ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்திக் கொலை செய்வதை மொசாத் அதுவரை முயன்று பார்த்ததில்லை. அந்த நாட்களில் ரஷ்ய உளவுத்துறை KBG, சில கொலைகளை ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்திச் செய்திருந்தது.


எனவே Nerve Agentஐ உபயோகித்துக் கொலை செய்யப்பட்டால், யாருக்கும் மொசாத் மீது சந்தேகம் ஏற்படாது. KBGயின் பங்கு இதில் இருக்கிறதா என்ற சந்தேகம்தான் உடனே தோன்றும்.

அடுத்த பக்கம் பாருங்கள் ➡

இதற்கு முன்னர் ரசாயனப் பொருட்கள் மூலமாகச் செய்யப்பட்ட அரசியல் கொலை லண்டனில் நடைபெற்றது. 1978ம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் பல்கேரியாவின் அரசியல் விமர்சகர் ஜார்ஜி மாக்கோவ் குறிவைக்கப்பட்டிருந்தார். அவர் லண்டனில் பிரதான வீதி ஒன்றில் காரில் வந்து இறங்கி, அரசு அலுவலக கட்டடம் ஒன்றுக்குள் நுழையப்போகும் சமயத்தில். எதிரே ஒருவர் நடந்து வந்தார்.

எதிரே வந்தவரின் கையில் ஒரு குடை இருந்தது. குடையின் ஒரு முனையில் Nerve Agent தடவப்பட்டு இருந்தது!

எதிரே வந்தவர் இவரைக் கடந்து சென்றபோது அவரின் கையில் இருந்த குடை தற்செயலாக படுவது போல, மாக்கோவின் தொடையில் பட்டது. இலேசாக ஊசி



மொசாத்தின் தலைவர் (டானி யாடொம்)

குத்துவது போல ஒரு விநாடி உணரப்பட்டது. அவ்வளவுதான். அவர், இவரைக் கடந்து சென்றுவிட்டார்.

இது நடந்து 5 நிமிடங்களில் மாக்கோவின் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றாகச் செயலிழக்கத் தொடங்கின. அவர் அடுத்த இரண்டுமணி நேரத்தில் இறந்து போனார். அவரது உடலில் பரவிய விஷம் அல்லது ரசாயனப் பொருள் என்ன வகையானது என்று அந்த இரண்டு மணி நேரத்துக்குள் அவருக்கு சிகிச்சை அளித்த பிரிட்டிஷ் டாக்டர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

மாக்கோவ் இறந்த பின்னர்தான் ஆராய்ந்து அந்த விஷம் எதுவென்று கண்டு பிடித்தார்கள். Ricin!

Ricin என்பது, காஸ்டர் ஆயில் தாவரத்தின் விதைகளில் இருந்து தயாரிக்கப்படும் வீரியமுள்ள ரசாயன விஷம். அதைக் குடையில் வைத்துக் குத்தியவர் ரஷ்ய உளவுத்துறை KBG-யின் உளவாளி.

இப்படியான கொலை முயற்சி ஒன்றைத்தான் ஜோர்தானில் செய்யத் திட்டமிட்டார் மொசாத்தின் தலைவர் டானி. ஆயுதம் ரெடி. இனி அடுத்தது, கொலைத் திட்டம்.

ஜோர்தானியத் தலைநகர் அமானில் வைத்து மார்ஷலைக் கொலை செய்வது மிக மிக ரிஸ்க்கானது என்பது மொசாத்தின் தலைவர் டானிக்கு நன்றாக தெரிந்திருந்தது. எனவே திட்டம் துல்லியமாக இருக்கவேண்டும் என்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார்.

அதுவும், கொலை செய்யப்பட்டபின், கொலைக்கும் இஸ்ரேலுக்கும் தொடர்பு இருப்பது தெரியவே தெரியக்கூடாது. கொலையை செய்தது 'மொசாத் என்பதும் வெளிவரக்கூடாது. யாருக்கும் சந்தேகம் வரவே கூடாது!

கொலை செய்வதற்காக அனுப்பப்படும் மொசாத்தின் உளவாளிகளும் உருவத் தோற்றத்தில் இஸ்ரேலியர்கள் போல இருக்கக்கூடாது, வேறு நாட்டு ஆட்களைப் போல இருக்கவேண்டும். அவர்கள் ஜோர்தான்வரை செல்வதும் இஸ்ரேலியப் பாஸ்போர்ட்டில் செல்லாமல், வேறு நாட்டு பாஸ்போர்ட்கள் உபயோகிக்கப்பட வேண்டும்.

மார்ஷலைக் கொல்லும் இந்த ஆபரேஷனுக்காக மொத்தம் 8 உளவாளிகள் அடங்கிய டீம் ஒன்றை மொசாத் தலைவர் டானி தாமே நேரில் தேர்ந்தெடுத்தார்.

திட்டப்படி, இந்த எட்டு பேரில் இரண்டு பேர்தான் கொலையைச் செய்யப் போகிறார்கள். அதுவும் பட்டப்பகலில் கொலை செய்வதாகத்தான் திட்டம். மீதி 6 பேரும், கொலை நடக்கும் இடத்தில் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

கொலை நடந்தவுடன் கொலை செய்த இரண்டு பேரையும், அந்த இடத்திலிருந்து சாதுரியமாக வெளியே கொண்டு வந்து, ஜோர்தான் எல்லைக்கு வெளியே அனுப்பி வைக்க வேண்டியது இந்த ஆறு பேரின் பொறுப்பு. மொத்தத்தில் கொலை செய்யப்போகும் இரண்டு பேரைவிட, இந்த ஆறு பேரும்தான் அதி சாகசம் புரிய வேண்டியிருக்கும். தப்பியோடும் திட்டங்களை வகுக்க வேண்டியவர்களும் இவர்களே. தாம் தப்பித்தால் மட்டும் போதாது. மார்ஷலை கொலை செய்யப்போகும் இரு உளவாளிகளையும் தப்ப வைக்க வேண்டியவர்களும், இவர்களே.

கொலையை செய்யப்போகும் இரண்டு பேரும் முகத் தோற்றத்தில் கொஞ்சம் பிரிட்டிஷ்காரர்கள் போல இருந்தார்கள். இருவரும் பிரிட்டிஷ் உச்சரிப்புடன் ஆங்கிலம் பேசக்கூடிய ஆட்கள். ஒருவர், மேலதிகமாக பிரெஞ்சிலும் பேசக்கூடியவர்.

இப்படி ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், மொசாத்தின் தலைவர் டானி தனிப்பட்ட ரீதியில் வேறு ஒரு ஏற்பாட்டையும் செய்தார்.

மொசாத்துக்கு பல வெளிநாட்டு உளவுத் துறைகளுடன் நல்ல தொடர்புகள் இருந்தன. இஸ்ரேலில் இருந்த வெளிநாட்டுத் தூதரகங்களில் அந்தந்த நாடுகளின் உளவுத்துறையின் உளவாளிகள் அதிகாரிகள் என்ற போர்வையில் இருந்தார்கள்.

அவர்கள் யார் என்பதும் மொசாத்துக்குத் தெரியும்.

தூதரகங்களில் ராஜதந்திரிகள், அல்லது அதிகாரிகள் என்ற போர்வையில் செயற்படும் வெளிநாட்டு உளவாளிகளுக்கும், தமது அடையாளம் மொசாத்துக்கு தெரியும் என்பது நன்றாகவே தெரியும். இதனால், நட்பு நாட்டு உளவுத்துறைகள் என்றால், அந்த வெளிநாட்டு உளவாளிகளும், மொசாத்துடன் ஒருவித 'மைல்ட்' ஆன தொடர்பை பேணுவார்கள்.

மொசாத்தின் தலைவர் டானி தமக்குத் தெரிந்த வெளிநாட்டு தூதரக உளவுத்துறை உளவாளி ஒருவரை சந்தித்தார். "மொசாத்துக்கு உங்களால் ஒரு காரியம் ஆகவேண்டுமே" என்றார்.

"சொல்லுங்கள். செய்துவிடலாம்"

"வேறு ஒன்றுமில்லை. உங்கள் நாட்டு பாஸ்போர்ட்கள் இரண்டு தேவை" என்று கூறினார்.

"அந்த பாஸ்போர்ட்களை பயன்படுத்தி ஜோர்தான்வரை எமது (மொசாத்தின்) உளவாளிகள் போய், காலித் மார்ஷலை கொலை செய்வதுதான் திட்டம்" என்று டானி கூறியிருப்பாரா? கூறியிருக்க மாட்டார் என்பது உங்களுக்கே தெரியும்.

கூறவில்லை. ஆனால், வேறு காரணம் ஒன்றைச் சொன்னார்.

"மொசாத்தின் ரகசியத் தளம் ஒன்றை ஒரு நாட்டில் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. அந்த நாட்டுக்குள் இஸ்ரேலிய பாஸ்போர்ட்டுடன் நுழைவது சிரமம். அதற்காக இரண்டு உங்கள் நாட்டு பாஸ்போர்ட்டுகளை நாம் கூறும் பெயர்களில், நாம் கொடுக்கும் போட்டோவுடன், அதிகாரபூர்வமாகச் செய்து கொடுக்க முடியுமா?" என்று கேட்டார்.

அந்த வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரியும், தமது தூதரகத்திலுள்ள தூதரிடம் கேட்டு சொல்வதாக கூறிவிட்டு சென்றார்.

வெளிநாட்டு தூதரிடம் அந்த நாட்டு உளவுத்துறை அதிகாரி, மொசாத்தின் தலைவரின் இந்த பாஸ்போர்ட் கோரிக்கை பற்றிச் சொல்ல, "பாஸ்போர்ட் கொடுப்பதில் பிரச்சினை எதுவுமில்லை. ஆனால், ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் உபயோகிக்க வேண்டும்" என்று வெளிநாட்டுத் தூதரால் கூறப்பட்டது.

இந்தத் தகவல் தூதரகத்திலிருந்த வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரியால் டானிக்குக் கூறப்பட்டது.

இரண்டு மொசாத் உளவாளிகளின் போட்டோக்களை கொடுத்த டானி, அவர்களுக்கு என்ன பெயரில் பாஸ்போர்ட் வேண்டும் என்றும், பிறந்த தேதி போன்ற இதர விபரங்களையும் தெரிவித்தார்.

டானி கொடுத்திருந்த இரண்டு பெயர்கள்: பேரி பீட்ஸ், சோன் கேண்டல். இரண்டுமே பிரிட்டிஷ் பாணியிலான பெயர்கள்.

சரி. இந்தப் பெயர்களில் போலி பாஸ்போர்ட்களை மொசாத்துக்காக தயாரித்து கொடுத்த வெளிநாட்டு தூதரகம் எது தெரியுமா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரிலிருந்த, கனடா நாட்டுத் தூதரகம்தான் அது!

இரண்டு கனேடிய பாஸ்போர்ட்களும் மொசாத்தின் கைகளுக்கு வந்தவுடன் திட்டமிட்டபடி 8 பேரும் இஸ்ரேலில் இருந்து கிளம்பினார்கள். ஆனால் நேரடியாக ஜோர்தான் செல்லவில்லை.

நான்கு பேர் ஏதன்ஸ் நகருக்கும், இருவர் பாரிஸ் நகருக்கும், மற்ற இரண்டு பேர் ரோம் நகருக்கும் அனுப்பப்பட்டார்கள். அங்கே உல்லாசப் பயணிகள்போல சில நாட்கள் தங்கியிருந்தார்கள்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡

கனேடிய பாஸ்போர்ட்டில் பயணம் செய்தவர்கள் அனுப்பப்பட்ட இடம், பாரிஸ்! (கனடாவின் அதிகார பூர்வ மொழிகளில் ஒன்று பிரெஞ்ச். இந்த உளவாளிகளில் ஒருவருக்கு பிரெஞ்ச் தெரியும் என குறிப்பிட்டு இருந்தோம். இதனால், இரு கனேடியர்கள் பாரிஸ் சென்றுவிட்டு ஜோர்தான் சென்றால் சந்தேகம் ஏற்படாது)

1997ம் ஆண்டு செப்டெம்பர் 24ம் திகதி, இந்த 8 பேரும், பாரிஸ், ஏதன்ஸ், ரோம் ஆகிய நகரங்களில் இருந்து, ஒரே தினத்தில், வெவ்வேறு நேரங்களில், ஜோர்தான் தலைநகர் அமானுக்கு விமானம் ஏறினார்கள்.

வெவ்வேறு நேரங்களில் அமான் விமான நிலையத்தில் போய் இறங்கினார்கள்.

இந்த 8 பேரில் 2 பேரிடம் இருந்தவைதான் நிஜமான பாஸ்போர்ட்டுகள் (கனேடிய பாஸ்போர்ட்). மீதி 6 பேரிடமும் இருந்தவை, போலியான பிரெஞ்ச் பாஸ்போர்ட்களும், இத்தாலிய பாஸ்போர்ட்களும்.

அமான் ஏர்போர்ட்டில் இவர்களுக்கு சிக்கல் ஏதும் இருக்கவில்லை. காரணம், மார்ஷலைக் கொலை செய்ய உபயோகிக்கவுள்ள கொலைக் கருவியை இவர்கள் தம்முடன் எடுத்துச் செல்லவில்லை.

ஏன் எடுத்துச் செல்லவில்லை? காரணம் இருக்கிறது. இந்த திட்டத்தில் காலித் மார்ஷலை கொல்ல பயன்படுத்தவுள்ள கொலை கருவியாக மொசாத்தின் தலைவர் டானி தேர்ந்தெடுத்தது, ரசாயன விஷம் என்று எழுதினோமல்லவா? அதை இவர்கள் எயார்போர்ட் ஒன்றின் ஊடாக எடுத்துச் செல்வது ரிஸ்க் ஆனது,




மற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டபின் அந்த விஷம் கஸ்ட்டம்ஸில் சிக்கிக் கொண்டால், காரியமே கெட்டுவிடும்.

அந்த ரசாயன விஷம், இந்த 8 உளவாளிகளும் அமான் விமான நிலையத்தில் வந்து இறங்குவதற்கு 3 தினங்களுக்கு முன்பே அமானுக்கு வந்துவிட்டது. ஜோர்தான் உளவுத்துறையால் நெருங்க முடியாத பத்திரமான இடம் ஒன்றில் தயாராக இருந்தது. அந்தப் பத்திரமான இடம் எது என்பதை அடுத்த அத்தியாயத்தில் படியுங்கள். (தொடரும்)

# சவுதி கடற்படைப் போர் கப்பல்களால் ஏமன் நாட்டுத் துறைமுகங்கள் முற்றுகை?

ஏமன் நாட்டில், ஹௌதி தீவிரவாத இயக்கத்தினர் மீது சவுதி அரேபியா மேற்கொள்ளும் தாக்குதல்கள், புதிய பரிமாணத்தை எட்டியுள்ளன. ஏமன் நாட்டு துறைமுகங்களை சவுதியின் போர்க் கப்பல்கள் முற்றுகையிட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் உள்ளன. அதாவது, அந்தத் தகவல் உண்மையென்றால், இப்போது ஏமன் துறைமுகங்களுக்கு எந்தக் கப்பல் செல்வதானாலும் சவுதி கடற்படைக் கப்பல்களை கடந்துதான் செல்ல வேண்டும்.

சவுதி ராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அஹ்ம் அசிரி, தமது கடற்படைக் கப்பல்கள் ஏமன் நாட்டுக்கு அருகேயுள்ள கடற்பகுதியில் உள்ளன என்ற தகவலை சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உறுதி செய்தார். ஆனால், "ஏமன் நாட்டு துறைமுகங்களை முற்றுகையிட்டு உங்கள் போர்க் கப்பல்களை நிறுத்தியுள்ளீர்களா?" என்ற கேள்விக்கு நேரடியாகப் பதிலளிக்காமல், மறைமுகமாகப் பதிலளித்தார்.

"ஏமன் நாட்டுக்குள் யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டுள்ள தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களும், ஆட்களும் கடல் மார்க்கமாக சென்றுகொண்டிருந்த கடற் பாதை, தற்போது எமது கடற்படை கப்பல்களால் தடுக்கப்பட்டுள்ளது" என்றார் அவர்.

ராஜதந்திரப் பாணியிலான இந்தப் பதிலை "முற்றுகை" என்றும் எடுக்கலாம், "முற்றுகையிடவில்லை" என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

கடந்த வாரமே, ஏமனின் கடல் போக்குவரத்து தொடர்பாக சவுதி வெளியிட்டிருந்த எச்சரிக்கையில், "ஏமன் துறைமுகத்தை நோக்கி எந்தவொரு கப்பலும் செல்ல வேண்டாம்" என்று கூறப்பட்டிருந்தது. அத்துடன் ஏமன் நாட்டு வான் பகுதியை 'பறப்பதற்கு தடை செய்யப்பட்ட பகுதி' எனவும் சவுதி அறிவித்திருந்தது.

அதையடுத்து ஏமன் வான் பகுதியில் பறந்துவந்த சவுதி போர் விமானங்கள், ஹௌதி தீவிரவாத இயக்க இலக்குகளின் மீது குண்டுவீச்சைத் தொடங்கின. இப்போது சவுதி அரேபியாவின் கடற்படையும் களத்தில் (அல்லது ஏமன் கடலில்) இறங்கியுள்ளது.

சவுதி அரேபிய விமானப்படை ஏமன் நாட்டில் நடத்தும் விமானத் தாக்குதலுக்கு "Operation Decisive Storm" என பெயரிடப்பட்டுள்ளது (2015ம் ஆண்டு தொடங்கிய தாக்குதல்கள் இப்போதும் தொடர்கின்றன).

சவுதி விமானப்படை நடத்தும் தாக்குதலில் கடந்த சனிக்கிழமை, தீவிரவாத இயக்கத்தினரின் பாலஸ்டிக் ஏவுகணைகள் வைக்கப்பட்டிருந்த இடம் ஒன்றின்மீது குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தின. அங்கிருந்த பாலஸ்டிக் ஏவுகணைகளை சவுதி அரேபிய விமானப்படையின் விமானங்கள் அழித்தன என அறிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தாக்குதல்கள் இத்துடன் முடியப் போவதில்லை எனவும் கூறியுள்ளது சவுதி அரசு. "ஹௌதி தீவிரவாத அமைப்பினரிடம் மேலதிக ஏவுகணைகள் இருக்கின்றன. அவை மறைத்து வைக்கப்பட்டுள்ள இடங்கள் மீது விமானத் தாக்குதல்கள் தொடரும்" என்கிறது சவுதி அரேபிய அரசு.




ஏமன் நாட்டின் வெவ்வேறு பகுதிகள், வெவ்வேறு இயக்கங்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஹௌதி தீவிரவாத இயக்கத்தினர் (அன்சார் அல்லா), அல் காய்தா மற்றும் அன்சார் அல் ஷரியா கூட்டு இயக்கம், ஐ.எஸ் இயக்கத்தின் ஏமன் பிரிவு என்பவை ஏமன் நாட்டின் வெவ்வேறு பகுதிகளைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன.

ஏமன் தலைநகர் சானாவில் (ஹௌதி தீவிரவாத இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது) இந்த வாரம் சவுதி விமானங்கள் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தியபோது, தரையில் இருந்து ஹௌதி தீவிரவாத இயக்கத்தினர் விமானங்களை நோக்கித் தாக்குதல்களை நடத்தினர்.

தரையில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்கள், விமான எதிர்ப்பு ஏவுகணைகளால் நடக்கவில்லை எனவும், வெறும் ஆட்டிலரிகளை வைத்தே விமானங்களை வீழ்த்த முயன்றார்கள் எனவும் தெரிகிறது.

ஆட்டிலரி ஷெல்களால் பாதிக்கப்படாத சவுதி விமானங்கள், குண்டு வீசிவிட்டு திரும்பிச் சென்றுவிட்டன.

ஏமன் நாட்டின் துறைமுகங்கள் சவுதி அரேபியக் கடற்படையின் கப்பல்களால் முற்றுகையிடப்பட்டு உள்ளனவா என்று செய்தியாளர்கள் ஐ.நா. சபையின் சவுதி அரேபியாவுக்கான நிரந்தரப் பிரதிநிதி அப்துல்லா அல்-மௌவாலிமியிடம் கேட்டபோது, "சவுதி அரசு இது பற்றிப் பகிரங்கமாக அறிவிக்கும்வரை தம்மால் கருத்து எதையும் கூற முடியாது" என்றார். காரணம், துறைமுகங்களை முற்றுகையிடுவது என்பது, சர்வதேச அளவில் ராஜதந்திரச் சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய விவகாரம் என்பது அவருக்குத் தெரியும்!

படித்தது பிடித்திருக்கிறதா? உங்கள் நண்பர்களுக்கும் பரபரப்பு வார இதழை அறிமுகம் செய்யலாமே!

அமெரிக்க விமான நிறுவனம் டெல்டா எயார்லைன்ஸில் புதிய எயார் பஸ் விமான ஒப்பந்தம், அமெரிக்க விமானத் தயாரிப்பு நிறுவனம் போயிங்குக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. டெல்டா நிறுவனம், ஐரோப்பைச் சேர்ந்த எயார்பஸ் நிறுவனத்திடம் 50 புதிய 'அகன்ற உடல்' (wide-body) விமானங்களுக்கு உறுதியான ஆர்டர் (firm order) கொடுத்துள்ளது.

அமெரிக்காவைப் பிரதான தளமாகக் கொண்ட டெல்டா எயார்லைன்ஸ் நிறுவனமே, தமது சொந்த நாட்டு விமானத் தயாரிப்பு நிறுவனத்தை விட்டுவிட்டு, ஐரோப்பிய நிறுவனத்திடம் விமானம் வாங்குகிறது என்ற கோபத்தில் பல்லைக் கடித்தால், டெல்டா செய்துள்ள மற்றொரு காரியத்தால், போயிங் பொங்கி எழப் போகிறது.

அது என்னவென்றால், புதிய எயார் பஸ் விமானங்கள், டெல்டா எயார்லைன்ஸ் தற்போது இயக்கும் போயிங்கின் 747 மற்றும் 767 விமானங்களை மாற்றீடு செய்யப் போகின்றன. இந்த இரு ரகங்களுமே, அகன்ற உடல் ரக விமானங்கள்.

அதாவது டெல்டா ஐரோப்பிய எயார் பஸ் விமானங்களை வாங்குவது மட்டுமல்ல, தம்மிடம் ஏற்கனவே உள்ள அமெரிக்கத் தயாரிப்பு விமானங்களைக் கைவிடுகிறது!

டெல்டா விமான நிறுவனம், எயார்பஸ் விமானங்களை இயக்குவது ஒன்றும் புதிதல்ல. அவர்கள் ஏற்கனவே 57 A319 விமானங்களும், 69 A320 விமானங்களுமாக மொத்தம் 126 புதிய எயார் பஸ் விமானங்களை இயக்குகிறார்கள் (இவை தவிர வேறு சில A330 விமானங்களும் அவர்களிடம் உள்ளன. அவை மிகப் பழைய




# லோக்கல் [போயிங்] மாப்பிள்ளை காத்திருக்க
## குதிரையில் கவர்ந்து சென்ற ஐரோப்பிய [எயார் பஸ்] மாப்பிள்ளை!



விமானங்கள்). நாம் இப்போது குறிப்பிட்ட இந்த 126 விமானங்களும் 'ஒடுங்கிய உடல்' (narrow-body) ரகத்திலான விமானங்கள்.

'அகன்ற உடல்' விமானங்கள் பெரியவை, நீண்ட தொலைவு செல்லும் ரூட்களில் பயன்படுத்தப்படும் விமானங்கள். 'ஒடுங்கிய உடல்' விமானங்கள் சிறியவை. பெரும்பாலும் உள்நாட்டு சேவைகளில் பயன்படுத்தப்படும் விமானங்கள்.

('அகன்ற உடல்', 'ஒடுங்கிய உடல்' ரக விமானங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நீங்கள் எப்படி தெரிந்து கொள்ள முடியும்? மிகச் சுலபம். விமானத்துக்கு உள்ளே ஒரேயொரு நடைபாதை (single-aisle) இருந்தால், அது 'ஒடுங்கிய உடல்'. ஒன்றுக்கு மேற்பட்ட நடைபாதைகள் இருந்தால், அது 'அகன்ற உடல்')

இதுவரை காலமும், டெல்டா எயார்லைன்ஸின் அகன்ற உடல் ரகத்தின் விருப்ப விமானங்களாக இருந்தவை போயிங் விமானங்களே. அந்த வகையில், டெல்டா தமது நீண்டகால பாவனையில் இருந்த பெரிய விமானங்களான போயிங் 747, மற்றும் 767 விமானங்களுக்கு ஓய்வு கொடுக்கும்போது, மீண்டும் புதிய ரக போயிங் பெரிய விமானங்களையே ('அகன்ற உடல்') வாங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு போயிங் நிறுவனத்துக்கு இருந்தது.

இதை வேறுவிதமாக சொன்னால், டெல்டா தமது பழைய 747, 767 விமானங்களை, புதிய போயிங் 787 விமானங்கள் மூலம் மாற்றீடு செய்யும் என்பது போயிங் நிறுவனத்தின் நம்பிக்கை. எல்லா நிறுவனங்களும் தமது வாடிக்கையாளர்கள் தமது போட்டியாளரிடம் போக மாட்டார்கள் என்று நம்புவது இயல்புதானே!

ஆனால், இந்த இடத்தில் ஒரு யூ-டேர்ன் அடித்திருக்கிறது டெல்டா. தமது பழைய 747, 767 விமானங்களை, புதிய 50 எயார் பஸ் விமானங்கள் மூலம் மாற்றீடு செய்கிறது. இந்த 50 விமானங்களில் 25 விமானங்கள் A350-900 ரகத்திலும், மீதி விமானங்கள் 25 A330-900 ரகத்திலும் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டு ரகமுமே, எயார் பஸ் நிறுவனத்தின் புத்தம் புதிய மாடல் விமானங்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்த விமான நிறுவனமே, அமெரிக்க விமான தயாரிப்பு நிறுவனத்தின் காலை வாரிவிடுவதா என்று கோபப்படுகிறது, போயிங். ஆனால், இந்த விவகாரத்தில், டெல்டா விமான நிறுவனத்தைக் குறைசொல்ல முடியாது.

காரணம், டெல்டா தற்போது வாங்கப்போகும் விமானங்களின் அதே பயணிகள் கொள்ளவுக்கு (Passenger seating capacity) போயிங் நிறுவனத்தால் கொடுக்கக் கூடிய விமான ரகங்கள் இரண்டே இரண்டு ரகங்கள்தான். அவை போயிங் 777, மற்றும் 787 ட்ரீம்லைனர் (Boeing 787 Dreamliner).

இவற்றில் 787 ட்ரீம்லைனர் விமானங்கள் தயாரிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்ட நாளில் இருந்து ஏகப்பட்ட பிரச்சினைகள். வானில் பறக்கும்போது புகைகிறது, தரையில் நிற்கும்போதே எரிகிறது என அவற்றை வாங்கிய விமான நிறுவனங்கள் அலறுகின்றன.

இந்த நிலையில் டெல்டா எயார்லைன்ஸ், வில்லங்கத்தை விலைக்கு வாங்கிக் கொள்ள முன்வருமா? அதுதான் லோக்கல் மாப்பிள்ளைக்கு டாட்டா காட்டிவிட்டு ஐரோப்பிய மாப்பிள்ளையின் பக்கமாகப் பறந்து விட்டார்கள்.

தமிழில் இப்படியான கட்டுரைகள் வருகின்றனவா? கனவாக இருக்கும்... கையைக் கிள்ளிப் பாருங்கள்!

# விருந்தோம்பலுக்குக் கிழக்கு மாகாணம்



வானின் நிறம் தாங்கிய நீலக்கடல் சூழ்ந்த ஒரு அழகிய தீவாக இலங்கை இருப்பதனாலும், நாட்டின் அமைவிடம், மற்றும் இதமான காலநிலை போன்றவை சாதகமாக இருப்பதனாலும் வெளிநாட்டவர்கள் எமது நாட்டிற்கு உல்லாசப் பயணிகளாக வருகிறார்கள். வருடாவருடம் இங்கு வரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது.

வெளிநாட்டவர்களே இலங்கையைப் பார்ப்பதற்கு தொலைவில் இருந்து வரும் போது, இங்கு வசிக்கும் நாம் இலங்கையின் வெவ்வேறு பகுதிகளைப் பார்க்க வேண்டாமா?

இலங்கையில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் வெவ்வேறு மாவட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பல கிராமங்கள். இக்கிராமங்களுக்குள் வசிக்கும் மக்கள் பலவிதமானவர்கள். வெவ்வேறு வாழ்க்கை முறைகள், உணவுப் பழக்கங்கள், வட்டாரச் சொற்கள் என்று இலங்கைக்கு உள்ளே வெவ்வேறு விதமான காட்சிகளைக் காணலாம்.

இலங்கையில் ஒரு காலம் இருந்தது, வெளியே சுதந்திரமாகச் செல்ல முடியாத காலம் அது. ஆனால் இப்போது அப்படியல்ல. எங்கும், எப்போதும், எந்த நேரத்திலும், எந்த மூலை முடுக்குக்கும் சென்று வரலாம். எனவே எமது நாட்டைச் சுற்றிப் பார்த்து, வெவ்வேறு காட்சிகளைப் பார்ப்பதற்குச் சிறந்த நேரம் இப்போதுதான்.

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த இடங்களாக இலங்கையின் கரையோரப் பகுதிகள் உள்ளன. இயற்கையான, அழகு மிகுந்த கடற்கரைகள் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் உள்ள காரணத்தாலேயே, உலகின் வெவ்வேறு நாடுகளில் இருந்தும் உல்லாசப் பயணிகள் இலங்கைக்குக் கவரப் படுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தை எடுத்தால், இங்குள்ள மூன்று மாவட்டங்கள் கரையோர மாவட்டங்களாக உள்ளன. கிழக்கு மாகாணத்திற்குரிய பிரதான வீதி ஏ15. இந்தப் பிரதான வீதியால் பல இடங்களைக் கடந்து பலவிதமான மனிதர்களை, அவர்களது வாழ்க்கை முறைகளைப் பார்த்தபடி கிழக்கு மாகாணத்தின் பல இடங்களுக்குச் செல்வது, மிகச் சுவாரசியமான அனுபவம்.

அந்த அனுபவத்தை இந்தக் கட்டுரையில் நாமும் அனுபவித்துப் பார்க்கலாமா?

கிழக்கு மாகாணத்துக்குள் நீங்கள் கால் வைத்ததுமே உங்களையறியாமலேயே உடனடியாக ஒரு விஷயத்தை உணர்வீர்கள். அதுதான் கிழக்கு மாகாணத்தின் அடையாளம். விருந்தோம்பல்!

இங்கே முஸ்லிம்கள், தமிழர்கள், சிங்களவர் என மூன்று இனத்தவரும் கலந்து வசிக்கும் கிழக்கு மாகாணத்தில், குறிப்பிட்ட சில மாவட்டங்கள், அல்லது ஊர்களில் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிக சதவீதத்தில் வசிப்பதைக் காணலாம். அதாவது, சில இடங்களை மூஸ்லீம் கிராமங்கள் என்று பார்த்த உடனேயே சொல்லிவிடலாம். சில ஊர்களைத் தமிழ்க் கிராமங்கள் என பார்த்த உடனேயே அடையாளம் கண்டு கொள் ளலாம்.

ஆனால், எந்த இடத்திற்கு எந்த இடத்திலிருந்து எப்போது சென்றாலும் வரவேற்பு, உபசரிப்பு என்று கலக்கி விடுவார்கள், இங்குள்ள மக்கள். கிழக்கு மாகாணத்தின் எந்த மூலை முடுக்குக்குச் சென்றாலும் ஒரே மாதிரியான பரவச அனுபவம் கிடைக்கும் என்பது, வேறு இடத்திலிருந்து ஏதாவது தேவைக்கோ அல்லது தொழில் நிமித்தமோ கிழக்கு மாகாணத்துக்குச் சென்றவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

முதன் முதலாக கிழக்கு மாகாணத்திற்குச் செல்பவராக நீங்கள் இருந்தால், சில ஊர்களின் பெயர்களிலேயே வித்தியாசத்தை உணர்வீர்கள். "இன்ஸ்பெக்டர் ஏற்றம்" என்ற பெயரில்கூட ஒரு ஊர் இருக்கிறது.

அடுத்து உங்களை ஆச்சரியப்படுத்துவது, மற்றொரு விஷயம். அதுதான், கிழக்கு மாகாணத்தவரின் மொழிநடை. இதை வேறு விதமாகச் சொன்னால், கிழக்கு மாகாணத்தவரின் 'உபசரிப்பு'ப் போலவே 'உச்சரிப்பு'ம் இனிமை.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பகுதிகளில் பேசப்படும் தமிழ் "மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ்" எனப்படுகிறது. இலங்கையில் வழக்கத்திலுள்ள பேச்சுத் தமிழில் இருந்து மட்டக்களப்புப் பேச்சுத் தமிழ் மாறுபட்டது. இப்பிரதேசத்திற்கே உரிய வட்டாரச் சொற்கள் அவர்களது பேச்சில் அடிக்கடி வந்து விழுகின்றன. அதுதான், அந்தத் தமிழின் இனிமைக்குக் காரணமாக இருக்கலாம்.

சில இடங்களில் அங்கு நடமாடும் ஆட்களைவிட அந்த இடம் கடைகளால் நிரம்பியிருக்கும். சில இடங்களில் ஆட்களும் குறைவாக இருப்பார்கள், அங்கு கடைகளும் குறைவாக இருக்கும். சில இடங்களில் வீதியில் பயணம் செய்யும்போது பல கி.மீ. தொலைவுக்கு எதுவுமே இருக்காது.

சரி இப்போது பார்க்கலாம், கிழக்கு மாகாணத்தில் நாம் பார்த்த சில இடங்களை.

நீலக்கடலில் துள்ளி விளையாடும் மீன்கள் நீந்துவதைப் பார்த்திருப்போம். ஆனால் அவை பாடிக் கேட்டிருக்கிறீர்களா? கேட்கலாம். அதற்கு நீங்கள் 'மீன்பாடும் தேன் நாட்டுக்குப்' போக வேண்டும். மட்டக்களப்புக்கு மற்றொரு பெயர் அது.

கரைவலை போட்டு மீன் பிடிப்பது இலங்கையின் மற்றைய பகுதிகளில் குறைந்து விட்ட நிலையிலும், மட்டக்களப்புக் கடலில் அதிகமாக கரைவலையைப் பயன்படுத்தி மீன்களைப் பிடிப்பதைப் பார்க்கலாம்.

இலங்கையின் கிழக்கே நீர்வளமும், நிலவளமும் பெற்றுச் சிறந்த நெற்களஞ்சியமாகத் திகழும் பகுதி மட்டக்களப்பு. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்குப் பிரதேசத்தின் (கிழக்கு மாகாணம்) முக்கிய அடையாளம், மட்டக்களப்பு. மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல் கங்கை ஆறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டு கிடக்கும் ஏறத்தாள 400 கிலோமீற்றர் நீளமும், 85 கிலோமீற்றர் அகலமும் கொண்ட செழுமை நிறைந்த நிலப்பரப்பு இது.

கிழக்கு மாகாணத்தின் முதலாவது பெரிய நிலப்பரப்பைக் கொண்ட மட்டக்களப்பில், அதிகமாக தமிழர்கள், முஸ்லிம்கள் என இரண்டு இனத்தவர்களும் கலந்து வாழ்கிறார்கள். மட்டக்களப்புக்கு நீங்கள் சென்றிருந்தால், நாம் ஏற்கனவே கூறிய விஷயத்தின் அர்த்தத்தை நேரில் அனுபவித்து உணர்ந்திருப்பீர்கள்.

ஆம். அவர்களுக்கே உரித்தான விருந்தோம்பல். அதுவும் முக்கியமாக நீங்கள் இலங்கையின் வேறு பகுதியில் இருந்து வருகிறீர்கள் என்று தெரிந்தால், விருந்தோம்பலில் திணறடித்து விடுகிறார்கள் மட்டக்களப்பு மக்கள் என்பதை அங்கு சென்றபோது நேரிலேயே கண்டுகொண்டோம்.

அடுத்த பக்கம் வாருங்கள் ➡




மட்டக்களப்பின் வரலாற்றைக் கூறவென இருக்கும் ஒரு நூல்தான் மட்டக்களப்பு மான்மியம். இந்நூல் இப்பிரதேசத்தில் உலவிய ஏட்டுப் பிரதிகளின் தொகுப்பாக எஃப். எக்ஸ். சீ. நடராசா என்பவரால் 1962ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. மட்டக் களப்பின் சரித்திரத்தைக் கூறும் இந்நூல் யாரால் எழுதப்பட்டது என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை என, நூலின் வெளியீட்டாளரே தன் நூல் வர லாற்றில் கூறுகிறார். ஆலயங்களின் கல்வெட்டுகளாகவும் செப்பேடுகளாகவும் மற் றும், பிற நாட்டவர்களின் குறிப்புகளாக அமைந்த ஏட்டுச்சுவடிகளின் தொகுப்பே இந்நூல் எனலாம்.

ஆதிகாலம் தொட்டு டச்சு ஆட்சியின் ஆரம்பம் வரையான மட்டக்களப்பின் சரித்தி ரத்தை இந்நூல் கூறுகிறது. எனினும் பல்வேறு காலப்பகுதிகளில் பல்வேறு பட்ட வர்களால் எழுதப்பட்ட ஏட்டுப் பிரதிகளின் தொகுப்பு என்பதால் பல கர்ண பரம்பரைக் கதைகளையும், நம்பிக்கைகளையும் இது கொண்டிருக்கிறது. எனினும் மட்டக்களப்பு வரலாறு தொடர்பாக அறிவதற்கு இந்நூல் மிக முக்கியமானது.

இலங்கை பிரித்தானியரிடமிருந்து அரசியல் விடுதலை பெற்ற பின்னர் உருவான இன அரசியலில் கிழக்கு மாகாணம் முக்கியமான ஒன்றாக இருக்கிறது. மட்டக் களப்பையும் ஒல்லாந்தர்கள் சுற்றி வந்திருக்கிறார்கள். அதற்கு ஆதாரமாக ஒரு கோட்டை இருக்கிறது.

மட்டக்களப்புக் கோட்டை, மட்டக்களப்பு டச்சுக் கோட்டை (ஒல்லாந்து கோட்டை), மட்டக்களப்பு போர்த்துக்கீசக் கோட்டை என்றெல்லாம் வெவ்வேறு பெயர்களைச் சொல்கிறார்கள் மட்டக்களப்பில் வசிப்பவர்கள்.

ஒரே கோட்டைக்கு இப்படி வெவ்வேறு பெயர்கள் வரக் காரணம் என்ன? அதுவும், போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் வெவ்வேறு நாட்டவர்களாக உள்ள போதிலும், இந்த இரு நாட்டவரின் பெயர்களிலும் ஒரு கோட்டை எப்படி அழைக்கப்படுகிறது? அதற்கும் ஒரு காரணம் உள்ளது. 1628ம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட இந்தக் கோட்டை, 1638ம் ஆண்டு ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது. அதுதான், இரு நாட்டவர்களின் பெயர்களிலும் இந்தக் கோட்டை அழைக்கப்படுகிறது.

இலங்கையிலுள்ள அழகிய சிறிய ஒல்லாந்துக் கோட்டைகளில் இதுவும் ஒன்று. மட்டக்களப்பு தீவுகளில் ஒன்றான புளியத்தீவில் அமைந்துள்ள இது, இன்னும் பாழடையாமல் அப்படியே இருப்பதைப் பார்க்கலாம்.

மட்டக்களப்பின் மற்றொரு அடையாளம் என்ன தெரியுமா? இலங்கையிலேயே தமிழ் எழுத்தாளர்கள் அதிகமாக உள்ள பகுதி மட்டக்களப்புத்தான். அத்துடன், இலக்கிய ஆர்வலர்கள், வாசகர் வட்டங்கள் என தமிழ் மொழியை மேலும் மேலும் வளர்ப்பவர்கள் மட்டக்களப்பில் இருப்பதை நீங்கள் காணலாம்.

இலங்கையின் தமிழ் வித்துவான்களில் முக்கியமான ஒருவர் மட்டக்களப்புப் பகுதி யில்தான் பிறந்திருக்கிறார். இதனால்தானோ என்னவோ அதிகமான தமிழ் அபிமா னிகள் இப்பொழுதும் இங்கே வசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாம் குறிப்பிடும் முக்கியமான தமிழ் வித்துவான், மட்டக்களப்பின் காரைதீவைச் சேர்ந்த சுவாமி விபுலானந்தர். காரைதீவு சந்தியிலே இவருடைய சிலையையும் பார்க்க முடியும். பார்க்கப் பார்க்க சலிக்காத சில இடங்கள் மட்டக்களப்பு மாவட் டத்தில் இருக்கின்றன. பரபரப்பு வார இதழின் அடுத்தடுத்த இதழ்களில் அப்படியான சில இடங்களைப் பார்க்கப் போகிறோம்.

